பதின்நான்கு பக்கங்கள் விலை ரூபா நான்கு

புதுப்பொலிவு ! நறுமணம் !!
மில்க்வைற் நீலசோப்
110 கிறாம் கட்டி ரூ. 3.50
55 கிறாம் கட்டி ரூ. 1.50
அன்றும் இன்றும் அதுவே
தரமான நீலசோப்
மில்க்வைற்
யாழ்ப்பாணம்

வார
முரசொலி

மேலுறைகளுக்கு
அரிய பரிசுகள்
உறைகள் பரிசுகள்
1000—ஒரு பெட்சீற்
500—ஒரு துவாய்
300—ஒரு பாடசாலைப்பை
200—ஒரு பருத்தி தொப்பி
100—ஒரு நீதிக் குரங்கு
மில்க்வைற் யாழ்ப்பாணம்

முரசு 04 ஒலி 97 ஞாயிற்றுக்கிழமை 13 - 05 - 1990 சித்திரை 30 ஷவ்வால் 17

# விடுதலைப் புலிகளை காரணமாக்கி

# தமிழக அரசைக் கவிழ்க்க முயற்சி!

## தமிழக சட்டசபையில் கருணாநிதி

(சென்னை)

"அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக, விடுதலைப் புலிகளின் பிரச்சனையைக் கருவியாகப் பயன்படுத்தி மாநில அரசைக் கவிழ்க்க நினைக்கிறார்கள்" என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி நேற்றுத் தமிழக சட்டசபையில் கூறினார்.



"தமிழகத்தில் பிரிவினை எண்ணத்திற்கு இடமேயில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக விடுதலைப் புலிகள் பிரச்சனையைக் கருவியாகப் பயன்படுத்தி மாநில அரசைக் கவிழ்க்க நினைக்கிறார்கள்" என்றும் அவர் சொன்னார்.

தமிழ் நாட்டில் விடுதலைப் புலிகளின் எந்த முகாம்களும் இல்லை. பிரிவினைக்கும் தமிழ் நாட்டில் இடமில்லை.

—14 ஆம் பக்கம் பார்க்க

### இலங்கைத் தமிழர் ஆசிரியசங்கச் செயலாளர் கருத்து

## 55 வயதில் ஒய்வுபெறும் திட்டம் ஆசிரியருக்குப் பொருந்தாது

(பண்டத்தரிப்பு)

55 வயதில் ஒய்வு பெறும் திட்டம் ஆசிரியருக்கு பொருந்தாது. கல்வி அமைச்சு அதிகாரிகளும் இந்த உண்மையை ஏற்றுக் கொண்டனர். சேவை முதிர்ச்சி சிறந்த கல்விப் பணியைவழங்கும்திறமைபெற்றுள்ளது. ஆசிரியன் கற்பிக்குந் தோறும் கற்கின்றான் தினந்தினம் ஆசிரியனின் அறிவும் கற்பிக்கும் திறனும் நுட்பங்களும் வளர்ந்து கொண்டே செல்கிறது.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு த. மகாசிவம்

-- 14ஆம் பக்கம் பார்க்க

### ஐ. தே. க செயற்குழு கூட்டத்தில் ஜனாதிபதி

## மக்கள் பொறுமையாக இருந்தால் அடுத்த மேக்குள் பூரண அமைதி

மக்கள் பொறுமையுடனும் அமைதியுடனும் நடந்து கொண்டால் அடுத்த வருடம் மே மாதத்திற்குள் நாட்டில் பூரண அமைதியை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும் இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு கூட்டத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 26ஆம் திகதிக்கு பின்னர் வடக்கு கிழக்கு மாகாணங்கள் உட்பட சகல மாகாணங்களுக்கும் விஜயம் செய்யவுள்ளதாகவும் அங்கு சகல அரசியல் பிரமுகர்களுடனும் பேச்சு நடாத்தவுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## மொறிசியஸ் தமிழர் தினம் யாழ்நகரில் கண் காட்சி, வீடியோ

குரும்பசிட்டி உலகத் தமிழர்ஆராய்ச்சிநிலையம் நடாத்தும் மொறிசியஸ் தமிழர் தினம் எதிர்வரும் 20ம் திகதி மாலை யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் மொறிசியஸ் தீவில் நடைபெற்ற ஏழாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடுபற்றிய வீடியோ படக்

... 14ம் பக்கம் பார்க்க

## பயிலுநர் ஆசிரியரென்றால் அவர் மாணவரா ஆசிரியரா?


வன்னிப்பகுதியில் நடைமுறையில் இல்லாத ஒரு விடயத்தினை வவுனியாவில் பயிலுநர் ஆசிரியர்கள் மத்தியில் புகுத்தப்பட்டுள்ளது. இதனையிட்டு சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் கவலை தெரிவித்தன. பயிலுநர் ஆசிரியர் பாடசாலை செல்லும் போது தூய வெள்ளை உடை அணிந்து மாணவர்களைப் போல் ஆசிரியர்கள் செல்ல வேண்டுமெனக் கண்டிப்பான உத்தரவு சம்பந்தப்பட்ட உயர் அதிகாரி ஒருவரினால் பிறப்பிக்கப்பட்டுள்ளதாம். (11)

## 498 குடும்பங்களுக்கு வீடமைப்பு நிவாரணம்

வீடமைப்பு புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் 498 குடும்பங்களுக்கு நிவாரணத்துடன் உதவிப்பணமும் வழங்கப்பட்டுள்ளது.

இக் கொடுப்பனவில் நிவாரணமாக 17 இலட்சம் ரூபாவும் கடனாக 13 இலட்சம் ரூபாவும் மொத்தமாக 30 இலட்சம் ரூபா வழங்கப்பட்டு விட்டதாக தேசியவீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை முகாமையாளர் திரு.இ.மரி

—14 ஆம் பக்கம் பார்க்க



கடந்த வியாழக்கிழமை மாலை நல்லை ஆதீனத்தில் இடம் பெற்ற 'சிரித்திரன் சித்திர கொத்து' நூல் வெளியீட்டு விழாவில் விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தம்பதியினரும் கலந்து கொண்டனர்.
படத்தில் சிரித்திரன் சுந்தருக்கு பாலசிங்கம் தம்பதியினர் வாழ்த்துக் கூறுவதைக் காணலாம்.

## ஒரிஸா அகதிகள், மலையகத் தமிழர் பற்றி கருணாநிதி விடுதலைப்புலிகளுடன் ஆலோசிப்பார்

ஒரிஸா அகதிகள் குறித்தும் மலையகத் தமிழர் நிலை குறித்தும் தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி அடுத்த வாரமளவில் விடுதலைப்புலிகளுடனும் ஆலோசனை நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது,

இதற்கான அழைப்பை விடுதலைப்புலிகளுக்கு தமிழக முதல்வர் ,விடுத்துள்ளார். இவரது அழைப்பை ஏற்று விரைவில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்கள் சென்னைக்கு செல்லவுள்ளார்கள்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு யோகி யோகரட்ணம், அரசியல் ஆலோசகர் திரு அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் உட்பட பலமுக்கியஸ்தர்கள் இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. வே.பிரபாகரனின் தனிப்பட்ட செய்தியொன்றையும் இவர்கள் கொண்டு செல்வார்களெனத் தெரியவருகின்றது.

## அறிவித்தல்

பருத்தித்துறை புலோலி கிழக்கைச் சேர்ந்த தம்பிமுத்து யோகநாதன் ஆகிய நான் எனது பெயரை தம்பிமுத்து யோகநாதன் புத்ரா என்று மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத் தருகிறேன்.

தம்பிமுத்து யோகநாதன் புத்ரா

05100

## விற்பனைக்கு

National M-5 வீடியோ

கமறா விற்பனைக்குள்ளது


மேலதிகத் தொடர்புகளுக்கு:

**Technico Cool Engineerings**

K. K. S. வீதி, கொக்குவில்.

05104

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி சிவமலா ஆறுமுகம்

(முருகன்அருள் பிரவாகம்)

மலர்வு 20-12-1965 இறைவன் நிழலில் 19-04-1984

முருகன் அழைக்கின்றார்
நான் வருகின்றேன்
என்று விடைபெற்றாய் அம்மா
நீ தெய்வமாகி விட்டாய்
நாங்கள் என்றும் மறவோம் தெய்வத்தை

பல்லவி

வேலைத் தூக்கி விளையாடுந் தெய்வமே-யென்
வினைப் பகைதீர் தெய்வமே

அனுபல்லவி

காலைத் தூக்கியாடும் கண்ணுதல் தந்த
கதிர்காமத்தையனே கழலடி நம்பி வந்தேன் (வேலை)

சரணம்

எங்கெங்குந் திருமுகம் எங்கெங்குந் திருவிழி
எங்கெங்குந் திருச்செவி எங்கெங்குந் திருக்கரம்
எங்கெங்குந் திருவடி எங்கே நீ அங்கே நான்
ஈசனே கதிர்காம வாசனே முருகேசா (வேலை)

நீங்காத நினைவுகளுடன்

அன்பான:

முருகன்அருள் பிரவாகம், 171/10, கோயில் வீதி, நல்லூர்.

அப்பா, அம்மா, சகோதரர்கள், மைத்துனர் உற்றார், உறவினர்.

05093

## வரி விளம்பரம்

### புத்தகம்

A/L தாவரவியல், அல்காக்களும் பங்கசுக்களும்- ஓர் அறிமுகம். எழுதியவர் கலாநிதி அ. சிவபாலன் விலை ரூபா 35/- கிடைக்குமிடம், பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். 05044

### விற்பனைக்கு

ஹொண்டா CD 50 கோல்ட் லைன், C 50 Chaly புதிய மொடல் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- K. சுதர்சன் இல. 9/6 மலர் மகள் வீதி, அரியாலை, நாவலர் றோட்டில் மாம்பழம் சந்திக்கும், இரத்தினம் கடைச் சந்திக்கும் இடையில். 05094

### கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தியடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், விசேட, திறமைச் சித்தியுடன் கூடிய உத்தியோகத்தைப் பெற விரும்புபவர்களுக்கும் 23 வருட அநுபவமுள்ள ஆசிரியரினால் தொடர் வகுப்புக்கள் மூலம் 1 மாதத்திற்குள் விசேட சித்திக்குக் கற்பிக்கப்படும். கடிதமூலம், அல்லது காலை 6-8 ற்குள் சந்திக்கவும். ஆறுமுகநாதன், 10 கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. 05088

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


# கல்லெறிக்கும் பயிலுநர் ஆசிரியர்க்கும் தொடர்பில்லை

இரணைதீவு கிராம சேவகர் அலுவலகத்தின் மீது கற்கள் வீசப்பட்டதற்கும் தமக்கும் எதுவித சம்பந்தமும் இல்லையென்று சமீபத்தில் நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களான ஏ. ஜி. ஜெயசீலன், எஸ். செல்வரட்ணம், ஏ. அருமைநாயகம், எஸ். மாசில்லா ஆகியோர் 'முரசொலி'க்குத் தெரிவித்தார்கள்.

'வீணான அவதூறு கற்பிக்க முயற்சிக்கப் பட்டுள்ளது' என்றும் இவர்கள் கூறினர்.

# அரச கட்டிட சீரமைப்புக்கு நொறாட் நிறுவனம் உதவும்

வடக்கு, கிழக்கில் பாதுகாப்புப்படையினரால் சேதமாக்கப்பட்ட அரச கட்டிடங்கள், தபால் அலுவலங்கள் கூட்டுறவுக் கட்டிடங்கள் ஆகியன புனரமைக்கப்பட 'நொறாட் நிறுவனம் நிதியுதவி வழங்கவுள்ளது.

அதற்கமைய இது பற்றிய முழு விபரங்களையும் சேகரித்து அனுப்புமாறு தேசிய புனர் வாழ்வு நெறிப்படுத்தல் குழுவின் உயரதிகாரியான திரு. ஒஸ்டின் பெர்னான்டோ சகல அரச அதிபர்களையும் கேட்டுக் கொண்டுள்ளார்.


## SLAS

### இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை-1990

விரிவுரைகள் நுண்ணறிவை, பொது அறிவைத் தரா. சுயமான பயிற்சிகளே வெற்றியைத் தரும்.

அதற்கான பயிற்சி நூல்கள்:

★ பொதுவுளச்சார்பும் பொது அறிவும்
★ சீரகித்தல
★ நுண்ணறிவு (20. 5. 90 இல் வெளிவரும் இதற்கென ஆக்கப்பட்ட விசேட நூல்)

ஆக்கியோன்: க. குணராசா, MA., SLAS

பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்.

● ஸ்ரீலங்கா புத்தகசாலை, காங்கேசன்துறைவீதி யாழ்ப்பாணம்.
● கமலம் பதிப்பதிகம், 82,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

05091

## COMPUTER COURSES

NEW BATCHES START ON:

| | | |
|---|---|---|
| D—BASE III + | 19. 05 1990 | 3. 00—4. 30 P. M |
| BASIC | 16. 05. 1990 | 9. 00—10. 30 A. M |

IDP COMPUTER CENTRE
342, K. K. S Road, Jaffna.
(சிவன் கோவிலடி)

BRANCH: IDP- 7th MILE POST, MALLAKAM

05101

## உதவித் தாதியர் பயிற்சிநெறி

## TRAINING FOR NURSES - AIDE

**19-05-1990-இல் ஆரம்பமாகவுள்ளன**

★ தகைமை வாய்ந்த பதிவுத்தாதியர்களால் (R. N, O.) விரிவுரைகள் நடாத்தப் படுகின்றன.
★ பதினெட்டு மாத கால பாடத்திட்டங்கள்.
★ ஆறுமாத கால செய்முறைப் பயிற்சிகள்
★ செய்முறைப் பயிற்சிகள் யாவும் யாழ். நகரின் பிரபல்யம் வாய்ந்த வைத்திய சாலையில் நடைபெறுகின்றன.
★ அரச அங்கீகாரம்பெற்ற சர்வதேச தகைமையுடைய சான்றிதழ்,
★ பாடத்திட்டங்கள் யாவும் தமிழ்மொழி மூலம் போதிக்கப்படுகின்றன.
★ இலவச ''அக்கு பங்சர்'' பயிற்சிகள்.

ஆண் உதவித்தாதியர் பயிற்சிக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

உங்கள் பதிவுகட்கு

அதிபர்

Dr. V. P. சுந்தரராஜன்

# சாயி மெடிக்கல் அக்கடமி

இல. 10, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

05099

# இந்தவாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

## மேடம்:

உயர்பதவி, வாகன சுகம், திடீர் பிரயாணம், தேடியவர் வருகை, புதுத்தொழில், மனையில், சுபகாரியம், சகோதர வழி கவலை, பெரியோர்ருதவி, தூரதேசம் போனவர் வருகை. உத்தியோகஉயர்வு, கலைஞர்கள் கல்வி மான்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தவர்கள் ஒன்று சேருவர்.

## இடபம்:

திடீர் பிரயாணம், பணவிரையம், விவாகநிச்சயம், புத்திரரால் மகிழ்ச்சி, புண்ணியவழிபாடு, தடைப்பட்ட பணவரவு, இராஜமரியாதை, சகோதரவழிநன்மை, வணிகர்கள் கடற் தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

## மிதுனம்:

விவாக நிச்சயம், வாக்கு சாதுரியம், பணவரவு, இளையசகோதருதவி, தூரதேசபிரயாண நிறைவு, கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தவர்கள் ஒன்று சேருதல், மனை பூமியால் நன்மை, புதுத்தொழில், புகழ் தேடிவரும், காதலர் ஒன்று சேருவர்.

## கடகம்:

உடல் நலக்குறைவு, இனசன உதவி, வாக்குப்பலிதம், கைப்பொருள் நஷ்டம், குடும்பப்பிணக்கு, கொடுக்கல் வாங்கல் தடை, தேடியவர் வருகை, விவாக நிச்சயம், பிதாவழியுதவி, வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் இலாபம்.

## சிங்கம்:

சத்துருபயம், பெரியோருதவி, வாகன மாற்றம், உயர் பதவி, உத்த மருறவு, ஆடையாபரண நஷ்டம், தேடியவர் வருகை, மாமன் வழியுதவி, கல்வியால் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், கலைஞர்கர் கௌரவிக்கப்படல், வணிகர்கள் இலாபம்.

## கன்னி:

வாகனசுகம், உயர் பதவி, கல்வியால் புகழ், காதலர் மகிழ்ச்சி, மனையில் சுபகாரியம், தூரதேசம் போனவர்கள் வருகை, இயந்திரத் தொழில், கடற் தொழில் செய்வோர் அகமகிழ்ச்சி, தடைப்பட்ட தொழில் கிடைக்கும், உடல் ரோக நிவர்த்தி.

## துலாம்:

மனக்கிலேசம், வாகன மாற்றம், வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் இலாபம், தூரத்து பிரயாண நிவர்த்தி, சிநேகிதர் மூலம் நன்மை, நீண்ட நாள் தடை நீங்கும், மாமன் வழி கவலை, புகழ் தேடி வரும், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்த காதலர்கள் ஒன்று சேருவர்.

## விருட்சிகம்:

புதுத்தொழில், மனநின்மதி, சகோதரவழி சுகம், தேடியவர் வருகை, வாகனசுகம், வணிகர்கள் கடற் தொழில்மூலம்இலாபம், கல்வியால் உத்தியோகம், காதலர் மகிழ்ச்சி, தேடியவர் வருகை, வாக்குபலிதம்.

## தனுசு:

தொழில் தடை, ராஜபயம், அன்னியருதவி, சகோதரவழி யுதவி, புண்ணிய வழிபாடு, உத்தியோக இடமாற்றம், தூரத்து பிரயாண நிறைவு, வாகன சுகம், கடற் தொழில், வணிகத் தொழில் மூலம் இலாபம்.

## மகரம்:

உத்யோகஉயர்வு, வாக்குபலிதம், பணவரவு, புது மனைச் சேர்க்கை, ஆடையாபரணச் சேர்க்கை, அன்னியருதவி, இலட்சுமி கடாச்சம், புத்திரமகிழ்ச்சி, புகழ் தேடி வரும், உயர் பதவிமூலம் இடமாற்றம், தூரத்துச் சொய்தியால் நன்மை, தேடியவர் வருகை.

## கும்பம்:

இலட்சுமி கடாச்சம், விவாக நிச்சயம், கல்வியால் தொழில், பிரிந்தவர்கள்ஒன்று சேருதல், இளைய சகோதர வழி நன்மை, வணிகர்கள் கடற்தொழில், இயந்திர தொழில் செய்வோர் அதிக இலாபமடைவர், பிரிந்தகாதலர் ஒன்று சேருவர், வாகனத் தொழில் மூலம் நஷ்டம், தூரதேசம் போனவர்களால் நன்மை.

## மீனம்:

திருடர்பயம், பொருள நஷ்டம் தொழில் தடை, தேடியவர் வருகை, பெரியோராசி, மாமன் வழியுதவி, தெய்வபலம், விவாகநிச்சயம், களஸ்திர வழிசுகம், பிரிந்தவர்கள் வருகை, நீண்ட நாள் தடை நீங்கும், கல்விகற்போருக்கு தொழில் கிடைக்கும்.

## கைப்பணிப் பயிற்சி

மண்டைதீவில் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் செஞ்சிலுவைச் சங்கம் பனம் பொருள் உற்பத்திக் கைப்பணிப் பயிற்சி வகுப்பொன்றை அண்மையில் ஆரம்பித்தது.

இதில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட யுவதிகள் பயிற்சி பெறுகின்றனர்.

பயிற்சிப் பணமாக நாளொன்றுக்கு இருபது ரூபா வழங்கப்படுவதோடு பனம் பொருள் உற்பத்திக்குத் தேவையான பொருட்களையும் இலவசமாக வழங்கி வருகின்றது. (ப.12)

## புத்தளம் இந்துவுக்கு புதிய கட்டடம்

புத்தளம் நகரில் அமைந்திருக்கும் ஒரேயொரு இந்துப் பாடசாலையான புத்தளம் இந்து தமிழ் மகாவித்தியாலயத்திற்கு புதியதொரு கட்டிடத் தொகுதி அமைப்பதற்கான அத்திவாரக் கல் நாட்டும் வைபவம் அண்மையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பெற்றோர்களினதும், பொது மக்களினதும் உதவியுடனேயே இக்கட்டிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ப.1)

## கிளிநொச்சி அரச அதிபர் பேச்சு:

# அபிவிருத்தி துரிதமாவதற்கு அரசின் நிதி போதாதுள்ளது

'மின்சாரம் ஒரு கிராமத்திற்கு கிடைத்ததும் அக்கிராமம் அபிவிருத்தியடைந்துவிட்டதாக கருதக்கூடாது. இந்த மின்சாரத்தை குடிசைக் கைத்தொழில், விவசாயம் போன்றவற்றுக்கு பயன்படுத்தி கிராமத்தை முன்னேற்ற முயல வேண்டும்.''

இவ்வாறு பளை இத்தாவில் கிராமத்திற்கு ரூபா ஆறரை இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட கிராமிய மின்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கூறினார்.

இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலையத்தலைவர் க. சுந்தரலிங்கம் தலைமையில் இத்தாவில் முருகன் ஆலய முன்றலில் நடைபெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அரச அதிபர் மேலும் உரையாற்றுகையில்,

'மாவட்டத்திற்கு அரசாங்கத்தினால் குறிப்பிட்ட அளவு நிதியே ஒதுக்கீடு செய்யப்படுவதனால் மாவட்டத்தின் வளர்ச்சியை கிறிது சிறிதாகவே விருத்தி செய்ய முடியும்'' என்றார்.

வடபிராந்திய மின்சார சபை பிரதிப் பொது முகாமையாளர் வீ. கந்தசாமி உரையாற்றுகையில், 'சட்டவிரோத மின்பாவனை கடந்த காலங்களில் அதிகரித்ததனால் கோடிக்கணக்கான ரூபா மின்சாரசபைக்கு நட்டமேற்பட்டது. அத்துடன் இப்பாவனையால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பலியாகியதை அறிவீர்கள்.

சட்டவிரோத மின்பாவனையை அவ்வூர் மக்கள் தடுத்தாலொழிய அதிகாரிகளால் தடுப்பது கஷ்ட்ம் என்று கூறினார்.

இவ்விழாவில் பளை கொத்தணி அதிபர் திரு. அ. பொ. செல்லையா, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். எஸ், அமிர்தலிங்கம், பளை உதவி அரசாங்க அதிபர் சு. கந்தசாமி, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கி. பாப்பா, பச்சிலைப்பள்ளி அரசியல் பொறுப்பாளர் வ. செல்வராசா, பளை ப, நோ. கூ. சங்கத் தலைவர் ஏ. பீ. ஜோர்ஸ் உட்பட பலர் உரையாற்றினர்.

விழா முடிவில் கலைநிகழ்ச்சிகளும் விவாத அரங்குகளும் இடம் பெற்றன. (ப. 3

## சம்மேளனக் கூட்டம்

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சம்மேளனத் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் யாழ். கொட்டடியில் உள்ள சம்மேளனத்தின் காரியாலயத்தில் நடைபெறும். (19)

## 'எளிய நடை பாராட்டுக்குரியது?

சீரணி அந்தாதி எவருக்கும் விளங்கக் கூடிய வகையில் இனிமை கலந்த எளிய நடையில் அமைந்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்க சிறப்பம்சமாகும்.

இவ்வாறு சீரணி அந்தாதி நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டுரையாற்றிய பண்டிதர் திரு. நா. கணபதிப்பிள்ளை கூறினார்.

இருபாலைக் கவிஞர் அம்பிகைதாசன் எழுதிய இந்நூலை பண்டிதை பொன். பாக்கியம் ஆய்வு செய்தார்.

திருமதி சிவகுருநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. நூற்றியொரு பாடல்களைக் கொண்ட இந்நூல் ஆசிரிய விருத்தம் என்ற பாவகையில் பாடப்பட்டுள்ளது. (ப.5)

## காலன் கொழும்பில் காத்திருந்தான்

வெளிநாடு செல்வதற்காக கொழும்புக்குச் சென்றவர் ரயில் மோதிப் பலியானார்.

பெரியவிளானை சேர்ந்த சங்கரி இராசதுரை (வயது 38) என்னும் மேற்படி நபர் மேற்கு ஜேர்மனி செல்வதற்காக கடந்த வாரம் கொழும்புக்கு சென்று வெள்ளவத்தையிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தார்.

ஒருநாள் காலிமுகத்திடலுக்கு செல்வதற்காக வெள்ளவத்தை ரயில் பாதை வழியாக நடந்து சென்றபோது வேகமாக வந்த ரயில் இவரை மோதியதாகவும், ஸ்தலத்தில் இவர் உயிர் பிரிந்து விட்டதாகவும் இதுபற்றி அறியப்படுகின்றது. (13)

# கடமை மறக்கும் ஆசிரியர் மாணவர் மதிப்பை இழப்பர்

## சாடுகிறார் அதிபர்

''இவ்வாசிரியர் தனது தொழிலை விசுவாசமாகவும் பற்றுவைத்தும் முழுமனதுடன் செய்தார். கடவுள் மீது பக்தி வைப்பது போல் இவர் ஆசிரியத் தொழில் மீது பக்தி வைத்தார். செய்யும் தொழிலே தெய்வம் என சேவை செய்து ஆசிரிய குலத்திற்கே மதிப்பைத் தேடித்தந்துள்ளார் வருமானத்தைக் கருதாது ஆசிரியப்பணியை தெய்வீகத் தொண்டாகவும் அறப்பணியாகவும் கருதிக் கடமை புரிந்தார் பணத்திற்காக கூலிக்கு மாரடிக்கும் ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்கமாட்டார்கள் இவர் ஆசிரியச் சேவையின் மகத்துவத்தை உணர்ந்து கடமை புரிந்தபடியால் இன்று அதிபராகப் பதவி உயர்வுபெற்றுள்ளார்.''

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் உப அதிபராகக் கடமையாற்றி கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபராக மாறிச் சென்றுள்ள திரு. க. திருநாவுக்கரசுவுக்கு மாணவர்காளாலும் ஆசிரியர்களாலும் நாடத்தப்பட்ட சேவை நலம் பாராட்டுவைபவத்தில் பேசிய அதிபர் கா. கணேசதாசன் இவ்வாறு கூறினார்.

பல மாணவர்களும் ஆசிரியர்களும் இவரது சேவையைப் பாராட்டிப் பேசினார்க மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. இறுதியில் தேநீர் விருந்துபசாரவைபவம் இடம் பெற்றது.

# மகாவலி அபிவிருத்தியில் தனியார்துறை இணைவு

## அமைச்சர் வற்புறுத்து

துரித மகாவலி அபிவிருத்தியில் தனியார் துறையினரும் விவசாய அபிருத்தித் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

மகாவலிஅபிவிருத்திஅமைச்சர் காமினி அத்துக்கோரல்ல மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 120 அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத் திட்டங்களுக்காக 9.80 மில்லியன் ரூபா முடக்கப்பட்டுள்ளதால் 350 நபர்களுக்கு மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இலாபகரமான தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

273 ற்கு மேலான நபர்கள் இத் தொழிற் திட்டங்களினால் தொழில் நுட்பத் துறைல் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

மகாவலி பொருளாதார திட்டத்தினால் வர்த்தகம், கடை அணிகள் தயாரித்தல், கோழி வளர்ப்பு போன்ற துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

# கடமை நேரத்தில் இந்த ஊழியர்கள் 'கிக்' கில்?

நெடுந்தீவு வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் ஒரு சில ஊழியர்கள் கடமை நேரங்களில் மது போதையில் நிற்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையால் நோயாளர்களுக்கு பெரும் தொல்லையாக இருப்பதாக தெரிகிறது.

இதுபற்றி டாக்டர் பல தடவைகளாக எச்சரிக்கை விடுத்துள்ள போதிலும் அவ்வூழியர்கள் திருந்துவதாக இல்லையெனக் கூறப்படுகின்றது.

அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களிடம் முன்கூட்டியே மது அருந்திவிட்டு கடமைக்கு வரக் கூடாதென எச்சரிக்கை கடிதங்கள் பெறப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## உங்களுடையதா?

மல்லாகம்- குளமங்காலைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை வில்பேட் விஜயகுமார் என்பவருடைய தேசிய ஆளடையாள அட்டை வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க பொற்பதி கிளை முகாமையாளரினால் வல்வெட்டித் துறையில் கண்டெடுக்கப்பட்டு முரசொலி ஆசிரிய பீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


## கட்டிட வேலை ஆரம்பம்

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான புதிய கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுழிபுரம் பிரதேசசபைக் காரியாலயத்துக்குச் சமீபமாக இக்கட்டிடம் அமைக்கப் படுகிறது. (30)

# விவாகரத்துக்கள் இன்று ஏன் இடம் பெறுகின்றன?



நாவல் ஆசிரியை கோகிலா மகேந்திரன்

இன்று எமது சமுதாயத்தில் நடைபெறுகின்ற திருமணங்கள் பல விவாகரத்தின் விளிம்பில் நிற்கின்றன. இந்தச்செய்தியைப் படிக்கின்றபோது ஆச்சரியமாகத்தான் இருக்கும்.


கடந்த சில வருடங்களாக நீதி மன்றங்கள் இயங்காததால் விவாகரத்து சம்பந்தமான விஷயங்கள் வெளியுலகத்திற்கு தெரிவதில்லை.

ஆனால் இன்று எந்த ஒரு பகுதியிலும் நாம் புதிதாக நடைபெற்ற திருமணங்களைப்பற்றி விசாரித்தால் பல திருமணங்கள் விவாகரததின் விளிம்பில் நின்று ஊசலாடுவதைக் காணமுடியும்.

இன்று தமிழ்ப்பகுதிகளில் அதிகரித்துவரும் மண, மன முறிவுகளுக்குக் காரணம் என்ன? இளைஞர்கள் யுவதிகள் வெளிநாடு சென்றமை, வேலையில்லாப்போராட்டம், திருமணம் நடைபெற வேண்டிய வயதில் நடக்காமல் நடைபெறக் கூடாத வயதில் திருமணங்கள் நடைபெறுவதும் காரணமாகின்றது.

இன்று நடைபெறும் திருமணங்களில் மணப் பெண்களின் வயது 15 க்கும் 20க்கும் இடையில்தான் இருக்கின்றது.

15 வயதுப் பெண் எப்படி குடும்பவாழ்வை சிறப்பாக மேற்கொள்வாள்? ........ உலகத்தை அறிந்து கொள்கின்ற



சட்டத்தரணி ந. ஜீவேஸ்வரா

வயது தான் அது. அந்த வயது துள்ளித்திரியும் பராயம் ... எப்படி குடும்பச் சுமையைச் சுமக்கும் ..... சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதனால் தான் இளவயதுத் திருமணங்கள் விவாகரத்தின் விளிம்பிற்கு வருகின்றன.

திருமணங்கள் ஏன் விவாகரத்து வரை ......வந்து கொண்டிருக்கின்றன என சமுதாயத்தில் மிக முக்கியமானவர்களாகக் கருதப்படுகின்ற எழுத்தாளர், சட்டத்தரணி, டாக்டர் ஆகிய மூவரையும் சந்தித்து அவர்களது இதயத்துக் கருத்துக்களை இப்பகுதி வாயிலாக வாசகர்களுடன் சங்கமிக்க வைக்கின்றோம்.

இன்று எழுத்துலகில் பெண் எழுத்தாளருக்குள் தன்க்கென தனி இடத்தைப் பிடித்துக் கொண்டு சமுதாயப் பிரச்சனைகளை யதார்த்தமாக எழுதிவருபவர் கோகிலா மகேந்திரன். அவரிடம் தற்காலத் திருமணங்கள் ஏன் விவாகரத்தின் விளிம்பிற்கு வந்து கொண்டிருக்கின்றன. ---- ஒரு பெண் எழுத்தாளர் என்ற முறையில் இதைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள் என்று கேட்டோம்.

''எங்களுடைய கல்வி முறையில் தவறு உண்டு. எமது கல்வி உத்தியோக மையக் கல்வியாக இருக்கிறதேதவிர வாழ்வு மையக் கல்வியாக இல்லை. மின் சுற்று அமைப்பது எப்படி? என்று கல்லூரியில் விஞ்ஞான வகுப்பில் படிக்கின்ற மாணவன் அமைதியாக வாழ்வது எப்படி என்று படிக்கவில்லை. நியூட்டனின் விதிகள் அவனுக்குத் தெரியும் ஆனால் மற்றவர்களை நாம் மகிழ்ச்சியடையச் செய்யும்போது நாமும் அதே அளவு மகிழ்ச்சியைப் பெறுவோம் என்ற விதி அவனுக்குத் தெரியாது.

எங்கள் மக்கள் அபரிமித எண்ணிக்கையில் மேற்கு நாடுகளுக்குப் பயணம் செய்யப் புறப்பட்டதே இன்னொரு முக்கிய காரணமாகும்.பாதையைப் பார்த்துப் பயணத்தைத் தொடராமல் வானத்தைப் பார்த்து வழி தவறும் நிலை இது. மேற்கு நாட்டிலே நினைத்த நேரம் திருமணம் செய்வதும், நினைத்தநேரம் விவாகரத்துப் பெறுவதும் சர்வசாதாரணமாக நடைபெறுகின்றது. மேலைத்தேய கலாசாரத்தில் நம்மவருக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டு விட்டது. இது நாங்கள் எதிர்நோக்குகின்ற பாரதூரமான கலாசாரச் சீரழிவுகளில் முக்கியமானது.

மேற்குலகநாட்டுச் சுதந்திரத்திற்கு உலகம் கொடுத்திருக்கும் விலைதான் 'எயிட்ஸ்' என்ற கொடிய நோய். நம்மவர்கள் மேலைத்தேய கலாசாரத்தைப் பின்பற்றி இந்த நோயை இலவசமாகப் பெற்றுக் கொள்ளவே விரும்புகின்றார்கள்.

உலகம் விஞ்ஞான ரீதியாக வளர்ந்து வருகிறது. சந்தேகமில்லை மனிதன் இயந்திரங்களை உருவாக்கித் தானும் ஒரு இயந்திரம் போல வாழப் பழகிவிட்டான். ஆன்மீக உலகம் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது.

பிரச்சனைகளை மற்றைய மனிதனுடைய கோணத்தில் இருந்து பார்க்கவோ அவர்களுடைய எண்ணங்களை ஆசைகளைப் புரிந்து கொள்ளவோ யாரும் தயாராக இல்லை.

'அன்பு என்பது பற்றிச் சகல சமயங்களும் எடுத்துக் கூறுகின்ற போதிலும் அதற்கொத்து வாழ யாரும் ஆயத்தமில்லை. இதை இன்னொரு வகையில் சொன்னால் உள முதிர்ச்சியும் உளச் சமநிலையும் கொண்ட மனிதர்களின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே வருகின்றது. இப்படியான நிலைதொடருகின்றபோது எப்படி வாழ்க்கையில் அமைதியை எதிர்பார்க்க முடியும் இது இப்படி இருக்கபெண்கள்அதிகம்படிப்பதுதான்விவாகரத்துக்களுக்குகாரணம்என்று கூறப்படுவதைஏற்றுக் கொள்ள முடியாது. ஒருகுடும்பத்தில் இரண்டு வகையில் அமைதி நிலவலாம் ஆண் சொல்வதைப்பெண் மறுபேச்சின்றி செயற்படுத்தி அடிமைவாழ்வு வாழ்ந்தாலும் ஒரு வகையில் அமைதி நிலவும் பிரச்சனைகளை இருவரும் கலந்து பேசித் தீர்த்து ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு விட்டுக் கொடுத்து வாழ்வதிலும் அமைதியான வாழ்வு

## மூவர் பதில்

அமையலாம்.

பெண்—கல்வி முற்றாக அற்ற நிலையில் முதலாவது வகை அமைதி நிலவலாம். ஆனால் அந்த அடிமை நிலை அமைதி எப்போதோ ஒரு நாள் வெடிக்கத்தான் செய்யும் இரண்டாவது வகை மகிழ்வையே நாம் விரும்புகிறோம் ஆகவே பெண்கள் படிப்பது தான் எல்லாக் குழப்பத்திற்குக் காரணம் என்ற ஒருசாராரின் நியாயம் போலியானது.

தமிழ்ப் பகுதிகளில் தொடர்ந்து வரும் விவாகரத்துக்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டுமானால். எழுத்தாளர் என்ற முறையில் சில ஆலோசனைகளைக் கூற விரும்புகின்றேன்.

கணவன் மனைவிக்கிடையில் ஏற்படும் பிரச்சனைகளைக் கலந்துரையாடித் தீர்க்க ஆலோசனைநிலையங்களை அமைத்து அதன மூலம் சுமுக நிலைமைகளைஏற்படுத்தலாம்.

வெளிநாடுகளுக்குப் படை எடுப்போர் நினைத்தவுடன் திரும்பி வருவோர் ஆகியோரின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தசட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

திருமணம் செய்யும் போது தமக்குரிய கணவனை அல்லது மனைவியைத் தெரிவுசெய்யும் பூரண உரிமையும் சுதந்திரமும் இளைஞர் யுவதிகளுக்கு வழங்கப் பட வேண்டும்.

மனிதர்களின் சிந்தனைகள் செயற்பாடுகளைப் புரிந்து கொள்ளத் தேவையான உளவியல் அறிவு அனைவருக்கும் போதிக்கப்பட வேண்டும். சமயக் கல்வி போதிக்கப்பட வேண்டும்.

நல்ல குடும்ப வாழ்வு எப்படி அமைய வேண்டும். குடும்ப வாழ்வு சீரழிவதால் ஏற்படும் ஆபத்துக்கள் இவை பற்றி வெகுஜனத் தொடர்பு சாதங்னகள் மூலம் அழுத்தமாக எடுத்துச் சொல்லவேண்டும்.

இப்படியான பல்வேறு முறைகளை செயற்படுத்தினால் இப்படியான இளவயது விவாகரத்துக்களைக் குறைக்க முடியும் என நான் கருதுகின்றேன். ஆனால்இவை எல்லாம் சொல்வதற்குச் சுலபமாகத் தெரியும் செயற்படுத்துவது எளிதாவதல்ல. அரசுமுனைப்புடன் செயற்பட்டால். சிலவற்றை சாதிக்கலாம்.

கோகிலா மகேந்திரன் விவாகரத்து இன்று ஏன் அதிக அளவில் ஏற்படுகின்றன என்பதற்கு சிந்தனைக்குரிய விளக்கங்களைத் தந்தார்.

இன்று விவாகரத்துக்கள் அதிகமாவதற்கு நம்வர்கள் வெளிநாடு சென்றமையும், மேலைத்தேய கலாசாரத்தை பின்பற்ற துடித்துக் கொண்டிருப்பதும் அவசர வெளிநாட்டுத் திருமணங்களும் முக்கிய காரணங்கள் என்பதை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது?

தற்காலத் திருமணங்களும் விவாகரத்தின் விளிம்பிற்கு வந்து கொண்டிருப்பது பற்றியும் விவாகம் செய்வது விவாகரத்து பெறுவது பற்றிய சட்டப்பிரச்சினைகளைப் பற்றியும் சட்டத்தரணி ஒருவர் மூலம் அறிந்து கொள்ள விரும்பினோம்.

இது பற்றிப் புகழ் பெற்ற சட்டத்தரணியான. ஜீவேஸ்வரா என்பவரைச் சந்தித்துக் கருத்துக் கேட்டோம்.



டாக்டர் க. சிதம்பரநாதன்

இன்று எமது சமுதாயத்தில் பெரும்பாலும் இளைய தலைமுறையினரிடையே மண விலக்குகள் முற்கலாத்திலும் பார்க்க கூடுதலாக நடைபெறுகின்றன. இளைய தலைமுறையினரின்வாழ்க்கை நோக்கு வாழ்க்கையைப் பற்றிய கருத்துக்கள் விழுமியங்கள் முதலியவைகளில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

முன்னைய தலைமுறையினரைப்போல விடாமுயற்சி, சிக்கனம் பொறுப்புணர்ச்சி, ஒழுக்கம் ஆகிய பண்புகளுக்கு இளைய தலைமுறையினர் முக்கியத்துவம் அளிப்பதாகத் தெரியவில்லை.

தற்போதுள்ள பொதுசன தொடார்பு ஊடகங்களான பத்திரிகை, வானொலி. தொலைக்காட்சி சினிமாவும் விளம்பர உலகும் மக்களிடையே நுகர்ச்சியுணர்வையும் ஒருகனவுலகவாழ்க்கையையும் சித்தரிக்கின்றன. இவைகளை பார்த்து விட்டு பெரும்பாலானோர் அப்படி வாழவேண்டுமென்று எண்ணுகின்றனர்.

1983 க்குப் பின்னர் பல தமிழ் இளைஞர்கள் அகதிகளாக வெளிநாடு சென்றனர். அவர்கள் தமது பெற்றோரையும் சுற்றத்தாரையும் மறந்து அஞ்ஞாத வாசம் வாழ்கின்றனர். இவர்கள் நாடு திரும்பும் போது மேலைத்தேயப் பொருட்களுடன் வருகின்றனர்.

இவற்றைப் பார்த்ததும் வெளிநாட்டிலிருப்பவர் ஏதோ பெரும் ஊதியம் பெறுவர் என நினைத்து வெளிநாட்டு மாப்பிள்ளைக்கு தமது மகளைத் திருமணம் செய்து கொடுக்கின்றனர்.

திருமணம் நடைபெற்று தம்பதியர் வெளிநாடு சென்றபின்னர் தான் பிரச்சனைகள் தலையெடுக்கின்றன.

இன்று பெண்கள் சமத்துவம், பெண் நிலைவாதம், பெண் அடிமை என்ற கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு முன்னேறிவருகின்றனர். கல் ஆனாலும் கணவன், புல் ஆனாலும் புருஷன் என்ற பழமொழிகளை ஏற்கத் தயாரில்லை,

இன்று வெளிநாடுகளில் அகதிகளாக இருப்பவர்களின் வேதனம், வாழ்க்கைத்தரம் ஆகியவற்றை அறிவது சுலபமல்ல. எனினும் வெளிநாட்டு மோகத்தாலே திருமணங்கள் நடைபெறுகின்றன.

கொழும்பு நகரத்தையே பார்க்காத பெண் ஒருவரைத் திடீரெனக் கனடாவுக்கு அனுப்பிவைத்தால் அவருடைய நிலை என்ன? ஒரு நாட்டுச் சூழலில் அமைதியாக வாழ்ந்தவர் நவநாகரிக பரபரப்பான சூழலுக்கு மாற்றப் படுகின்றார். அவருக்குக் கலாசாரத் தாக்கம் ஏற்படுகின்றது. முற்றுமுழுதும் புதிய சூழலிற் பார்த்துமறியாத அன்னியப்பட்டவருடன் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குவதென்றாற் பெரும் சிக்கலான விடயமே.

முன்பு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திருமணங்களிற் பெரும்பாலும் இருபகுதியின

11-ம் பக்கம் பார்க்க

வி.என்.எஸ்.உதயசந்திரன்

# பேனாவின் வரலாறு

நீரூற்றுப் பேனா, பால் பால்பயின்ட் பேனா இவை தோன்று முன்எதைக் கொண்டு எழுதினார்கள். இறகு பேனாவால். பறவைகளின் இறகுகளைச் சீவிக் கூர்மையாக்கி நிப்புகளாகக் கொண்டு எழுதினார்கள். வாத்து இறக்கை முக்கியமாகப் பயன்பட்டது. அதிலும் வலது பக்கத்து இறக்கையிலுள்ள இறகு எழுத ஏற்றதாக இருக்காதாம். இடது பக்கத்து இரண்டாவது மூன்றாவது நான்காவது இறகுகளே சிறப்பான எழுதுகோலாகத் தகுதியானதாம். இறகு பேனாக்களை அடிக்கடி கத்தியால் சீவி சீராக்க வேண்டும். இல்லாவிடில் காகிதத்தில் கீறும், கிழிந்து மை பரவச் செய்யும், உடையும். என்ன இருந்தாலும் இன்றைய பால் பேனாவின் சொகுசு வருமா என்கிறான் சுட்டிப் பையன் கிட்டு.

# தபாற்பெட்டி

செய்திகளை எழுதித் தபால் பெட்டியில் போட்டு வருகிறோம். விலாசதாரரிடம் அதைக் கொண்டு போய்ச் சேர்ப்பித்துவிடுகிறது தபால் இலாகா இன்று. ஆனால் இப்படியொரு அமைப்பு இல்லாத அந்தக் காலத்தில்.கடல்பிரயாணம் செய்த டச்சுக்காரர்கள் குறிப்பிட்ட ஒரு இடத்துக்குப் போவார்கள். அங்குள்ள ஒரு பாறையின் அடியில்செய்திகள் அடங்கிய கடிதம் இருக்கும். அதை எடுத்துக் கொண்டு தங்கள் செய்திகளை அங்கு வைத்து அதன் மீது அதே பாறையை வைத்து விட்டுப் போவார்கள். நன்னம்பிக்கை முனையில் இப்படியொரு பாறை, தபால் பெட்டியாக இயங்கி இருக்கிறது. இங்கிலாந்துக்கும் அமெரிக்கவுக்கும் பிரயாணப் பட்ட வியாபாரக் கப்பல் களின் காப்டன்கள் தபால்களைத் தாங்கி, தபால் பெட்டிகளாகச் செயல்பட்ட காலமும் உண்டு.

# சலவைக்கல் மலை

சலவைக் கல்லுக்கு (மார்பிள்) புகழ்பெற்ற இடம் இத்தாலி. இங்குள்ள அபோன் ஆல்பஸ் மலை சலவைக்கல் மலை. தூரத்திலிருந்து காணுபவர்கள் இதன் முடியைப் பனி போர்த்தி இருப்பதாக நினைத்தால் அதுதவறு. அந்த வெள்ளை அத்தனையும் மார்பிள்! இரண்டாயிரம் ஆண்டுகளாக இம் மலைகளிலிருந்து சலவைக் கற்களை வெட்டி எடுத்து வருகிறார்கள். 35 மைல் நீளமுள்ள மலைத் தொடர் இது. புகழ் பெற்ற மைக்கிலாங்லோ இம் மலையிலிருந்து வெட்டிய மார்பிள் கல்லிலிருந்துதான் தம் மகத்தான சிற்பங்களை வடித்திருக்கிறார் சலவைக் கல்லைப் பெற வெடி மருந்து வைத்துப் பிளந்து பெறுவதும் உண்டு. ஆயுதம் கொண்டு அறுத்து எடுப்பதும் உண்டு. இந்த மார்பிளுக்கு கராரா மார்பிள் என்று பெயர். இம் மலையடிவாரத்திலுள்ள ஊரின் பெயர் கராரா.




# அதிசய பறவை

ஒரு பறவை, உயரம் நாலடி. இதன் இறக்கை விரிந்தால் 7அடி நீளமிருக்கும். இப்பறவை பூமியிலிருந்து ஒரு கொத்துப் புல்லைப் பிடுங்கிப் பந்தாக்கி காலினால் ஆகாயத்தில் உந்தி வீசும். பிறகு அது கீழே விழுமுன் பறந்து போய்த் தன் அலகினால் பிடிக்கும். இப்படி விளையாடும் குணமுடைய இப்பறவை ஆப்பிரிக்காவின் புல்வெளி நிறைந்த பகுதியில் வசிக்கின்றது. முள் நிறைந்த மரங்களில் கூடு கட்டி ஆண் பெண் இரண்டுமே அடைகாக்கும். அதிகாலையில் மரத்திலிருந்து கீழே குதித்து, எலி, பாம்பு, பூச்சிகளை இரைதேட ஆரம்பிக்கும். எப்படி? தரையில் தன் கால்களினால்தடதடவென்று விடாமல்தட்டும்.சிறுஜீவன்கள் பீதி கொண்டு தங்கள் வளைகளிலிருந்து வெளியே வருவதற்காக. என்னவோ ஏதோ என்று எட்டிப் பார்க்கும். ஜீவன்களை 'லபக்' கென்று பிடித்துக்கொள்ளும். இது நாளின் பெரும் பகுதியைத் தரையில் கழித்தாலும் வானத்திலே கழுகைப்போல 12,000 அடிகள் உயரம் வரை ஜிவ்வென்று பறந்து போகக்கூடியது. இந்தப் பறவையின் பெயர்? காரியதரிசி (செக்ரடரி)ப் பறவை. ஏன் இதற்கு இப்படிப் பெயர் ஏற்பட்டது? காரியதரிசி காதில் இறகு பேனாவைச் செருகிக் கொண்டிருப்பது போல இதன் காதுகளின் மேலே சிறு இறகு வளர்ந்து நீட்டிக்கொண்டிருக்கும்.

# கண்டுபிடிப்புக்கள்

1. ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்தவர் றைட் சகோதரர்கள்.
2. நீராவி யந்திரத்தைக் கண்டு பிடித்தவர் ஜேம்ஸ் வோட்.
3. டைப்ரட்டரைக் கண்டு பிடித்தவர் வோறல்ஸ், 1868.
4. பவுண்டன் பேனாவைக் கண்டு பிடித்தவர் வாட்மேன்ஸ் 1884.
5. ஆங்கில அகராதியைக் கண்டு பிடித்தவர் டாக்டர் ஜேன்சன்.
3. பென்சிலினைக் கண்டு பிடித்தவர் பிளேமிங் 1929.
7. தேமோ மீட்டரைக் கண்டுபிடித்தவர் வாநட் ஹாட்.

ஆர்.பிரதீபன்
அங்கத்தவர் இல 61

## முரசொலி பூந்தோட்டம்

### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்:-.............................................

வயது:-.............................................

பாடசாலையின்

பெயர்:- .............................................

கல்வி கற்கும் வகுப்பு:- ..............................

வீட்டு முகவரி:- ..............................

கையொப்பம்:- ..............................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

................ ..............................

திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதின்நான்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்.)

# பூந்தோட்டம் அமைப்போம்

எல்லாத் திசையிலும் வண்ணத்துப் பூச்சிகள்
நல்லாய்ப் பறக்குது தோட்டத்திலே
பொல்லாப்புச் செய்யாமற் பாலர்களே
பார்க்க வாருங்களே கூட்டத்திலே.

காற்றிலாடும் பூவைச் சுற்றி வண்டுபாடுதே
நாற்று மேடை ஒன்று பச்சைப் பாய் விரிக்குதே
நேற்றுப் பூத்த பூக்கள் நிலத்தில் சொரிந்திருக்குதே
கரிய வண்டு ஒன்று பூவிற்தேனெடுக்குதே!

நல்ல எங்கள் தோட்டம் சுற்றி வேலி போடுவோம்
மெல்ல மெல்லத் தண்ணீர்ஊற்றிஎருவும் போடுவோம்
சின்னச் சின்னக் கைகளாலேபூக்கள்பறிப்போம்
சிறந்த நல்ல பூக்களாலே பூசைசெய்குவோம்

பூக்கள் நல்ல பூக்களே தேனைச்சிந்தும் பூக்களே
மாலை நேரக் காற்றிலே மகிழ்ச்சி தரும் பூக்களே
கொள்ளை அழகுப் பூக்களே கோவிலுக்கு உதவுமே
மாறிடாத நோய்களுக்கு மருந்துமாகும் பூக்களே!

சி, சதாசிவம்

# பாடும் குயில்

குயிலே குயிலே பாடிடுவாய்
குஞ்சுக் குயிலே பாடிடுவாய்
கனிகளை நன்றாய்த் தின்றிடுவாய்
காற்றில் ஓசையைப் பரப்பிடுவாய்

காக்கைக் கூட்டில் வாழாதே
காகத்திடம் கொத்து வாங்காதே
காலையும் மாலையும் கூவிடுவாய் - அதை
கனிவுடனே நாம் கேட்டிடுவோம்

பாட்டுப் பாடி மகிழ்ந்திடுவாய் - உன்
பாட்டை நாமும் கேட்டிடுவோம்
கூ..கூ எனவே கூவிடுவாய் - உன்
கூவுதலுடனே கூவிடுவோம்.

# விகடகவி

ஒரு நாட்டில் பெயர்பெற்ற விகடகவி ஒருவன் இருந்தான். அவனது புகழ் பல நாடுகளிலும் பரவி இருந்தது. எனவே அண்டை நாட்டு மன்னன் அம்மன்னனிடம் அந்த விகடகவியை தன்னிடம் சில நாட்கள் இருக்க அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டான். அந்த அரசனும் தன் விகடகவியை அனுப்பி வைக்க சம்மதித்தான்.

விகடகவியும் அண்டை நாட்டிற்குச் சென்றான் அங்கு ஒரு மாதகாலம் இருந்து விட்டு தன் நாடு திரும்பலானான். அப்போது அம்மன்னன் ''நான் எப்படி இருக்கிறேன். உங்கள் மன்னர் எப்படி இருக்கிறார்' என்று கேட்டான். இது சங்கடமான நிலையை உருவாக்கும் கேள்வி விகடகவியோ மிகவும் சாதுரியமாக எல்லோரும் நன்கு கேட்கும்படி 'பௌர்ணமியன்றுள்ள சந்திரனைப் போல இருக்கிறீர்கள். என் மன்னர் அமாவாசையன்று உள்ள சந்திரனைப் போல் இருக்கிறார்' என்றான்.

விகடகவி தன் நாட்டிற்குத் திரும்பியதும் அந்நாட்டு மன்னர் 'நீ என்னை அமாவாசைச் சந்திரன் என்றாயாமே விகடகவியும் ஆமாம் அமாவாசையிலிருந்து சந்திரன் வளர்ந்து பெரியவனாவது போல நீங்கள் உயர்கிறீர்கள். அந்தமன்னன்பௌர்ணமி சந்திரன் போல இருந்து தேய்ந்து கொண்டே போகிறான்என்றான்.

செல்வி. யசோதா
சிவப்பிரகாசம்
அங்கத்தவர் இலக்கம் 361

# பிரபலமான சைக்கிள் போட்டி

உலகிலேயே மிகவும் முக்கியமான சைக்கிள்ரேஸ் வருடா வருடம் பிரான்ஸ் தேசத்தில் நடக்கிறது. 1903 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இநதச் சைச்கிள் போட்டி ஐரோப்பாவின் மிகமுக்கியமான விளையாட்டுப்போட்டியாகக் கருதப்படுகிறது. ஆரம்பத்தில் 3.560 மைல்களுக்குச் சைக்கிள் ஓட்டம் நடைபெற்றது. இப்போது இது 2, 780 மைல்களாகக் குறைக்கப்பட்டுள்ளது,இந்தச்சைக்கிள்ப்போட்டியில் பிரான்ஸ், ஸ்பெயின், ஸ்விட்ஸர்லாந்து, இத்தாலி, பெல்ஜியம் ஆகிய நாடுகளின் வழியே செல்லும் நெடுஞ்சாலைகளிலும், குன்றுகள் வழியாகவும், ஏரி, மலைரகுகைகள், கால்வாய்களைக் கடந்தும் 8.000 அடி உயக்மான மலை முகடுகளைத் தாண்டியும் போட்டியாளர்கள் சைக்கிளிற் போகின்றன. பிரான்ஸ் தேசத்தில் மட்டும் 15 மில்லியன் மக்கள் இப்போட்டிகளைக் கண்டுகளிக்கக் கூடுகின்றனர். சில நகரங்களிற் சிறு குற்றங்களுக்கர்கச் சிறைவாசம் செய்யும் கெதிகளை, இந்தக் கோலாகலச் சைக்கிள் ஓட்டப்போட்டியைக் காண அன்று மட்டும் விடுதலை செய்கிறார்கள் என்றாற் பார்த்துக்கொள்ளுங்கள்.!

# அறிஞர் உரைத்தவை

கல்விக்குக் கரை கிடையாது: அக்கல்வியைப் பயில்வோருக்கோ கொடுக்கப்பெற்றுள்ள நாட்களோ மிகச் சொற்பம் ஆழ்ந்து நினைத்துப்பார்த்தால் பிணி தீண்டும் காலம் அதில் வெகுவாயுள்ளது: ஆதலால் அன்னப்புள் பாலும் நீரும் கலந்த பாலில் நீரை ஒதுக்கிப் பாலையே பருகுவதைப்போல நல்லனவற்றை மட்டும் கற்க வேண்டும்.

ஔவையார்.

அறிவைக்கொண்டு கடவுளை அறியலாம் என்பது முடியாத செயல். அறிவைவிட நம்பிக்கை மேலானது நம்பிக்கை உடையவன் எதையும் எளிதில் முடிக்க வல்லவன். இறைவனையும் அறிவான்.

மகாத்மாகாந்தி

தீய செயல்களைச் செய்வதனால் உண்டாகும் சிறிதுநேர இன்பங்களை விட நல்ல செயல்களைச் செய்வதனால் ஏற்படும் கொடிய துன்பங்களே சிறந்தவை.

பிளேட்டோ

சி.சதீதரன்

# "காலம் இன்னும் இருக்கு"

## சிறுகதை



மழைக் காலத்தின் அறிகுறிகள்..... என்றாலும், நல்ல உஷ்ணப் பொழுது,...... வேர்த்து வடிகிறது ............... சட்டென்று காதோரமாக ஒரு சில்லிப்பு...... திடீரென உடம்பெல்லாம் சிலிர்க்க வைத்து விட்டுப் போனது ஒரு குளிர் காற்று;

என்னது ..... என்று வியந்து கொண்டிருக்கும் போதே, போன அதே குளிர் காற்று மீண்டும் திரும்பி வந்து'பளீர்' என முகத்தில் அறைந்துவிட்டு போகின்றது...... பிறகு......... என்னவோ .... காதோரமாக ........ அக்கா..... என்ற ஈரவார்த்தைகள்... யாரோ... கிசுகிசுப்பாய் கூப்பிட்டது போல்........ திரும்பிப் பார்த்தேன்...... யாருமில்லை... சீ... பிரேமையா?... இருக்கும் பிரேமைதான்......?

இரண்டு நாட்களின் பின்னர்........; காலையில்பெய்த மழைக்கு முற்றத்து மல்லிகைப் பூக்களின் செத்துப் போன வெள்ளை உடல்கள் சேற்றுக்குள் விழுந்து செத்துக் கிடக்கின்றன... அநியாயம் ... எவ்வளவு பூக்கள்......மிச்சப் பூக்களும் உதிர்ந்து போகக் கூடாது என்ற நினைப்பில்... மழைத் தூறலையும் பொருட்படுத்தாது ஒவ்வொன்றாய்... மலர்களைப் பறிக்கின்றேன்...

காதோரமாக...... ஓர் காற்று.....'ஊய்' என்று விட்டுப் போகின்றது...

சந்தேகமில்லை... அதே சில்லிட்ட காற்றுத்தான். இரு நாட்களுக்கு முன் காதோரத்தையும்முகத்தையும்மாத்திரம் சில்லிடவைத்து விட்டு,முகத்தில்'பளீர்'ரெனஅறைநதுவிட்டுப் போன அதே காற்றுத்தான். சாதாரண மழைக் காலத்தின்குளிர்காற்றுக்கும், இதற்கும் நிறைய வித்தியாசம்...இது வாய் நிறைய குளிர்காற்றை யாரோ நிரப்பி காதோரத்தில் ஊதித் துப்பியது போல் இது ஓர் வித்தியாசமான காறறு......

அந்தக் காற்றைத் தொடர்ந்து......

''அக்கா...எனக்கு மல்லிப்பூ.....''

அதே ஈரவார்த்தைகள்...... ரகசியமாய்... கிசுகிசுப்பாய்... மழலையாய். இது...இந்தக் குரல்......? பவானி சந்தேகமில்லை இது அந்தச்சின்னஞ்சிறு மொட்டு மலரின் கற்கண்டுக் குரல் .....

''நாளைக்குத் தீபாவளி...' யாரோ வீதியில் சொல்லிக் கொண்டு போனார்கள். சட்டென்று ஒரு குளிர்ப் பிரவாகம் என் உடம்பு பூரா ஓடியது ஓ ... நாளைக்குத் தீபாவளி......தீபாவளி......அதே அந்தத் தீபாவளி .....எண்பத்தி ஏழில் குழந்தை பவானியின் உயிரைக் குடித்த தீபாவளி..... இரத்தமும், சதையுமாய் உள்ளவர்கள துடிக்க வைத்துவிட்டுப் போன தீபாவளி. அதே அந்தக் கசப்பான தீபாவளி .....

எண்பத்தி எட்டில் வந்து ஞாபக மூட்டி, சாகடித்து விட்டு. இப்போது மீண்டும் எண்பத்தி ஒன்பதில்......மீண்டும் அந்தக் கொடூரமான தீபாவளி......!

ஆனால்

இந்தக் கணப் பொழுது வரை தீபாவளியின் ஞாபகம் இல்லாமல் என்னை மறக்கடித்து வைத்தது எது...?... எது...கால ஒட்டமா? பிறந்து கண் விழித்து சில நிமிடங்கள் கழிந்ததிலிருந்து ஐந்து வயது வரை ........ தினமும் பார்த்துப், பழகி...... அன்பு வைத்து... ரசித்த அந்தச் சின்ன உயிரின் இழப்பை இந்தக் கால ஒட்டம் மறந்திடச் செய்யுமா?

குண்டாய் ......மெத்தென்று இருக்கும் அந்த ரோஜாப் பூக்கனங்களையும்,..... வண்ணத்திப் பூச்சியாய் பட படக்கும் அந்தக் கருநிறக் கண்களையும்......

அந்த சின்ன சிவப்பு உதடுகளையும்......

சுருள் சுருள் தலைமுடியையும்......

தேனாக இளையும் அந்த மழலைக் குரலையும்............ வெள்ளை முத்துச் சிரிப்பையும்.........

எல்லாவற்றையும்...... மறந்து போகும்படி காலம் எனக்குக் கட்டளை போடுமா?

இது எப்படிச் சாத்தியம் ..?

ஓ......அந்த எண்பத்தி ஏழு தீபாவளி...... அந்தநாள்...... என்ன கொடூரமான நாள் அது........ மறக்க முடியாத நாள் அது ...– எண்பத்தி ஏழு கலவரத்தின் உச்சநாள். 'ஷெல்லும்' 'பொம்மரும்' ஊரைச் சல்லடையாகத் துளைத்துக் கொண்டிருக்கின்றது. ஊர் எரிந்து கொண்டிருக்கினறது... .....மரணப் பிடியில் ஒவ்வொரு உயிரும் திணறிக் கொண்டிருக்கின்றது ........

உயிர் தப்பி ஒடி.........மனம் வெறுத்துப் போய்...... ஊரின் எல்லையில்......ஒரு ஒதுக்குப் புறத்தில் . ......பாதுகாப்பு வேண்டி நின்ற நேரம்...... என் நினைப்புப்பூரா பவானி! என் நினைப்பை எல்லாம் அவள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றாள்........ வேறு எந்த நினைப்பும் இல்லாமல் .....வேறு எந்த நினைப்பையும் வரச் செய்யாமல்...... என் நெஞ்சமெல்லாம் பவானியின் நினைவு. என் நினைப்பின் ஒவ்வொரு அங்குலத்திலும் அவள்......பவானி...... என்னாச்சோ . அவளுக்கு ஏதாவது ஆகியிருக்குமா? கடவுளே .... பவானிக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது...... பவானியை ஆபத்திலிருந்து காப்பாற்று .... தெய்வமே அந்தப் பச்சைக் குழந்தையைக் காப்பாற்று... ..காப்பாற்று......

இபபடித்தான் என் இதயத்தின் ஒவ்வொரு துடிப்பும் அவளுக்காய் வேண்டி நின்றது.

அந்தச் சின்னப் பூப் போன்ற இதயம் சிறு அதிர்வுகளைக் கூடத் தாங்காதே... இந்த இடிகளை எப்படி ஏற்றுக் கொள்ளும்? அந்த மென்மையான செவிகள் சின்ன ரீங்காரங்களுக்குக் கூட சிணுங்குமே..... இந்தப் பெரிய ஓசைகளை எப்படி ஜீரணிக்கும்? அந்தக் குருத்து உடம்பு அகோரங்களுக்குள் அகப்பட்டு உறைந்து போகாதா? அந்த மென்மையான உடம்பும் ... மனதும்..... எப்படி எப்படி தாங்குமா?......முடியுமா -அந்தச் சின்னப்பூவால்......

எல்லாம் ஆகிவிட்டிருந்தது........ நேரம் தீபாவளி இரவு இறந்தவர் எண்ணிக்கை. யார் என்ற விபரங்கள் கொம்பியூட்டர்க் கணக்காய் வெளிவந்தது. ஒன்றா ...... இரண்டா ...

அவை......அதில்... நாலாய் பவானியின் உயிரும்.. பறிக்கப்பட்டது!

அக்கா... அக்கா என்று ஆசையாக இழையும் பவானி...... கண்கள் பட படக்க... கன்னம் குழிவிழ .. வெட்கப் பட்டுச் சிரிக்கும் பவானி......

கட்டிக் கொடுத்த மல்லிகைப் பூமாலையை தலை, கழுத்து, கை என்று உடம்பு பூரா சுற்றிக் கொண்டு மலர்த் தோட்டமாய் மணக்கும் பவானி ..

என் கழுத்தைக் கட்டிக் கொண்டு தூக்கத்தில் சிரிக்கும் பவானி .. கடவாயில் ஐஸ்கிரீம் வழிய வழிய... பவானி... விதம் விதமாய் அலங்கரிக்கப்பட்டு .. அழகு பார்க்கப் பட்ட பவானி துடிப்பும், துள்ளுமாய் தன் மழலையால் பார்ப்பவர் எல்லோரையும் பரவசப் படுத்திய பவானி... அந்த ஐந்து வயதுக் குழந்தை... அந்த சின்ன உயிர் . செத்து விட்டதாய் எல்லோரும் சொல்லிக் கொண்டிருந்தனர்.

அதன் பிறகு...

நானும் நீண்ட நாட்களுக்கு செத்துப் போயிருந்தேன். அவளை மறக்க முடியாமல் ...... மறக்க நினைத்தும் முடியாமல்சட்டென்று தலைநீட்டி ...... குத்திக் கிழிக்கும்... அவள் நினைவுகளை மறக்க முடியாமல் . ...

இப்படி – நினைத்து... நினைத்து மருகி தினமும் செத்துக் கொண்டிருக்காமல் ... அப்பவே நானும் செத்துப் போயிருக்க வேண்டும்.

காலம் தான் எத்தனை வேகம்..... காலில் சக்கரம் மாட்டிக் கொண்டு ஓடத் தெரிந்த காலத்திற்கு ... பவானியின் நினைவை எடுத்துக் கொண்டு ஓடத் தெரியவில்லை. என்றாலும் சிறிது மருந்து போட்டு அந்தக் காயத்திற்கு தடவிக் கொடுக்கத் தெரிந்திருந்தது.

இன்று: அவளை நினைக்க மறந்த வேளை .. நாளை தீபாவளி என்பதை மறந்திருந்த வேளை .. அமானுஷ்ய வார்த்தைகளால் வந்து தன்னை ஞாபக மூட்டிச் சென்று .. மல்லிகைப் பூக்களைக் கேட்டு... மீண்டும் என்னைச் சாகடித்தாள் பவானி!

இரவு முழுக்க அவளின் ஞாபக சித்திர வதைகள் .....

காலை விடிந்தது, தீபாவளி நாள் .. ஊரின் ஒரங்களில் சிலசந்தோஷ முகிழ்வுகள் ...... சந்தேகமாக விரிந்தன என் மனது முழுவதும் வெறுமை .. சோகத்தில் இதயம் பாரமாகக் கனத்ததது

மொட்டாகக் கட்டி வைத்த மல்லிகை மொட்டுக்கள் மெல்ல விரிந்து மணத்தன. வேறு எதுவும் செய்யத் தோன்றாமல்... ஊரின் ஒதுக்குப் புறத்தில் : ஒரு .. எல்லையில் ..

பவானியைப் புதைத்த இடத்திற்குப் போகின்றேன்.

இன்று என்னுடன் சேர்ந்து வேறு யார் எல்லாம் பவானியை நினைப்பார்கள்? பவானியின் இழப்பினால் பைத்தியம் பிடித்து எங்கோ காணாமற்போன அவளின் தாய் நினைப்பாளா? அதன் பிறகு மனமொடிந்து ஊர் விட்டுப் போன அவளின் தந்தை, சகோதரன் பாபு... இவர்கள் நினைப்பார்களா?... நினைப்பார்கள்... நிச்சயமாக நினைத்துப் பார்ப்பார்கள். நினைத்து நினைத்துத்...துடித்துப் போவார்கள்... போகட்டும்!

பவானியைப் புதைத்த இடம் புல்லும், புதருமாய் மண்டிக்கிடந்தது. முன்பு அடிக்கடி போன இடம் என்பளால் எனக்கு இடம் அடையாதம் தெரிந்தது. மண்டியிட்டு புதர்களை விலக்கி... அவளைப் புதைத்த இடத்தின் மீது மல்லிகைப் பூ மலர்களைப் போடுகின்றேன். புதை குழிக்குள் கிடந்த பூ மலர் மீது...பனிமலர்கள்...

மீண்டும்...அந்தக் குளிர்ப் பிரவாகம் .. முகத்தில் மோதி காதிற்குள் கிசுகிசுத்துப் போகின்றது...அதனைத் தொடர்ந்து 'அக்கா . இவ்வளவு நாளா என்னை மறந்திட்டியா?' ஏன் என்னைப் பார்க்கவரல்ல... மறந்திட்டியா?'

களைத்துப்போன ஒரு மழலைக்குரல்:

மென்மையா .. சோகமா... சொல்லிக்கொண்டு போனது.

'பவானி .. என்னம்மா... இது எங்கேயம்மாநீ .. பவானியம்மா ..'

'அக்கா...நான் செத்துப் போன அண்டைக்குக் கூட நீ வரல்ல ..

மீண்டும் காதிற்குள் கிசுகிசுத்தாள்.

இல்லை...பவானி நான் வந்தேன். உன்னைப் பார்க்க ஓடிவந்தேன்...துடியாய்டி. துடித்து ஓடிவந்தேன்...

ஆனால்

இரத்தமும், சதையுமாய் சிதைந்து கூழாகிப் போன துடித்ததும்; தினமும் அந்த இடத்தில் நாள் பொழுது போவது தெரியாமல் உருகிச் செத்ததும் பவானி உனக்குத் தெரியாதா?

பிறகு .. மெல்ல... மெல்ல....

**ஊரெழு தர்ஷினி**

பவானியைத் தோட்டாக்கள் துளையிட்டுக் கோரமாகிப் போன அந்தக் கருநீலக் கண்களை... நான் பார்க்கவே கூடாது என்று என்னைத் தடுத்துவிட்டனர். தடுத்தது மட்டுமல்ல ..

உடனேயே ஊருக்கு எல்லையில் அவளைக் கொண்டுபோய் மண் மூடிப் புதைத்தும் விட்டார்கள்.

பிறகு...பின் வந்த நாட்களில்...

சாப்பிடக் கூடப் பிடிக்காமற் பைத்தியம் பிடித்தது போல்,பவானியைப் புதைத்த இடத்திலே விழுந்து கிடந்து உன்னை மறந்து விடவில்லை ..... ஆனால் ...... ஆனால்... . புரிந்து கொள்.

அவளைப் புதைதத இடத்திற்குப் போய் பார்க்கும் நாட்கள் குறைந்தது என்னவோ உண்மைதான். ஆனால் சட்டென்று நினைத்த மாத்திரத்தில் தீப்பிடித்து எரியும் அவள் ஞாபகங்களை என்னால் மறக்க முடியவில்லை. எப்போதாவது அவளைப் புதைத்த இடத்தின் வழியாகப் போகும் போதெல்லாம் ... நெஞ்சு வெடித்துச் சிதறும் ... அவள் நினைவு

(12ம் பக்கம் பார்க்க)

## எங்களின் பண்புகள்

எங்களின் பண்புகள்
தனித்துவம் மிக்கவை!
எங்களின் பண்புகள்
''நரிக்குணம்''மிக்கவை!!
அடுத்தவர் சிரித்திடின்
கண்ணீர்விட்டழுவோம்!!
அடுத்தவர் அழுதிடின்
கைகொட்டிச்சிரிப்போம்!
நலம்தரும் பணியேதும்
நாம்செய்யமாட்டோம்!!
நலம் தரும் பணிசெய்ய
நாம்விட மாட்டோம்!
உருப்படும் படியேதும்
நாம்செய்ய மாட்டோம்!
உருப்பட எதனையும்
நாம்விட மாட்டோம்!!
முன்நின்று எதனையும்
நாம்செய்ய மாட்டோம்!
பின்நின்று குறைசொல்ல
நாமோய மாட்டோம்!!

அயலாரின் அறிவுரை
நாமேற்க மாட்டோம்!
அயலாருக் கறிவுரை
நாமூட்டத் துடிப்போம்!!
மற்றவர் குறைகளே
எம்கண்ணில் தெரியும் !
மற்றவர் குறை சொன்னால்
எம்முள்ளம் எரியும்!!
நீதியை அயலவர்க்
குரைத்திடத்தயங்கோம்!
நீதியை நாம் கண்டு
உதைத்திடத் தயங்கோம்
நியாயமாய் மற்றவர்
நடந்திட வேண்டுவோம்!
நியாயத்தை மற்றவர்க்
களித்திடத்தயங்குவோம்
பண்பில்லாப் பண்புள்ளோம்!
எம்மினம் வாழுமா?
கண்ணில்லாப் பண்புகள்!
அழுவதா? சிரிப்பதா?
''முருகு'',

## சமூக நவீனம்



# மாறும் சொந்தங்கள்



**கே.எஸ். ஆனந்தன்**

### அத்தியாயம் மூன்று

வயதான பெற்றோர்தங்கள் கடமையை செய்ய வேண்டுமென அவதிப் படுகின்றார்கள். வளரும் தலைமுறையினர் தாங்கள் நினைத்ததைச்சாதிக்கத்துடிக்கின்றார்கள். இங்கேதான் பிரச்சினைகள் தோன்றிவளர ஆரம்பிக்கின்றது. சமுதாய மாற்றத்தை விரும்புவோர் அனுசரித்துப் போக விரும்புகின்றனர். மற்றவர்கள் தெரிந்தோ தெரியாமலோ வாழ்வோடு. போராடுகின்றனர்,

ரமணன் ராகினி திருமணம் முடிந்து ஒரு வாரத்திற்கு மேலாகிவிட்டது. அன்று ரமணன் ஓய்வாகவிருந்த போது வயித்திலிங்கம் மகனை அழைத்து மிகஇரகசியமாகவே கதைத்தார்.

நல்லபடியாய் உன்ரை விடயம் முடிந்து விட்டது. ரம்யாவுக்கும் ஒரு நல்ல இடம் பார்த்துள்ளன், எனக்கும் வயசாகிவிட்டது. பள்ளிக் கூடம் தொடங்கமுன்பு இதற்கும் ஓர் முடிவு செய்வது உன் பொறுப்பு'' என்றார்.

'நல்ல இடமானால் செய்யலாம் தானே. மாப்பிள்ளை என்ன தொழில்'?

'சொந்தமாய் கடை வைத்திருக்கின்றான்.'

'சீதனம் .....' என்று அவரைப் பார்த்தான் ரமணன்.

'காசும்,காணியும் கேட்கினம். கரைச்சல் இல்லாத இடம். ஒரு பெடியன். அவைக்கும் பொம்பிளை பிடிச்சுக். கொண்டுது'

'உங்களுக்குப் பிடிச்சால் சரிதான்' என்று கதைக்கு முற்றுப் புள்ளி வைத்தான் ரமணன்.

தந்தையும்மகனும் கதைத்த கதை ராகினி மூலம் ரம்யாவுக்கு வெளியானபோதுதிடுக்கிட்டாள். அவள் கட்டிய கற்பனைக் கோட்டைகள் சிதறிச் சின்னாபின்னமாயின. எதுவும் பேசாமல் மௌனமாகத் தலையைக் குனிந்துகொண்டாள்.

அதிகம் பேசுவதில்லை சில வேளை அர்த்தமில்லாமல் போவதுண்டு. மௌனத்திற்கு நிறைய அர்த்தமுண்டு. ரம்யாவின் மௌனத்தை ராகினி சம்மதமாக எண்ணி சந்தோஷப்பட்டு கணவனிடம் கூறிவிட்டாள்

இரண்டு குமர் வீட்டிலிருக்க, ரமணன்கலியாணம்செய்தது. எனக்கே ஒருமாதிரியிருந்தது. அப்பு என்னதான் குழறினாலும் திட்டத்துடன் எதையும் நடத்தி முடித்து விடுவார். எனக்கும்ரம்யாவின் கல்யாணம் நடந்து விட்டால் மிக நிம்மதி' என்றான்.

'இன்னொருத்தியிருக்கிறாளே. அவளை மறந்திட்டீங்களா?'

'அவள் படிக்கக் கூடியவள். படிக்கட்டும் அவளுக்கு இப்ப அவசரமில்லை. படிக்கக் கூடியவளை நாம் ஏன்............'

'என்ன படித்தாலும் ஒருவனுக்கு வாழ்க்கைப் படவேண்டியவள் தானே.' நான் ஏன் ...... நாக்கைக் கடித்துப் பேச்சை இடை நிறுத்தினாள் ராகினி.

'சொல்லும் என்ன ஐடியா? அவளுக்கும் எங்கேயாவது......' என்றுமனைவியைப் பார்த்து சிரித்தான் ரமணன்.

'உங்களுக்கு சொல்லாமலிருக்கவும் முடியவிலை. எங் கண்ணா சேகர் இருக்கிறாரே......'

ஆமா ......ஆமா ........சரி இதுபற்றி யாரிடமும் ஏதும் கதைத்து விடாதே. பிறகு இந்த சொந்தங்களை நாம் உருவாக்க நினைத்தாலும் இவை நிட்சயிக்கப்படுவது 'புரியுதுங்க என்று' கூறிச் சிரித்தாள்.

மனிதர்கள் தம் நினைவுகளை, ஆற்றல்களை வைத்து திட்டங்களை வகுத்தாலும், செயற்பட்டாலும் முடிபுகளை நிர்ணயிப்பவன் முன்னுக்கு வருவதில்லை. எவருக்கும் தெரியாமல் ஏற்கனவே அவன் முடிவுகளை வகுத்து விடுவான் என்பதை சிலர் உணர்ந்து கொள்ளாமல் ஆணவ முனைப்புடன் நான் என்று வீறு கொள்கின்றனர் பின்பு தடுமாறுகின்றனர்.

ராகினியும் தன் பெண் மனதில் ஓர் நினைவை வகுத்துக் கொண்டாள். அந் நினைவுகளின் செயற்பாடுகள் எப்படி முடியுமோ என்று அறியாத அந்தப் பேதை உள்ளம் ஆனந்தப் பட்டுக்கொண்டது.

உடற் தளர்ச்சியை விட உள்ளத்தளர்ச்சியே மனிதர்களை மிகவும் பாதிப்புக்குள்ளாக்குகின்றது. ஒருவனுக்கு என்னதான் நிறைவு இருந்தாலும் மனநிறைவு இல்லாவிட்டால் மகிழ்ச்சியுடனிருக்க முடியாது. உள்ளத்துணர்வுகளைக் காட்டும் கண்ணாடியாக உடலில்திகழ்வது முகம் 'அகத்தின் அழகு முகத்திற் தெரியும்' என்ற முதுமொழி இதன் காரணமாகத் தோன்றியது ஒன்று தான். என்னதான் மறைக்க முயன்றும் ரம்யாவின் முகத்தில் அவள் மனவேதனை பிரதிபலிக்கவே செய்தது. மாலையில் ரியூசன் வகுப்பு முடிந்து வீட்டுக்கு வந்த சுகன்யாவுக்குஅக்காவின் போக்கு திபுராயிருக்கவே நேரடியாகவே? கேட்டு விட்டாள்

'அக்கா உன் முகம் ஏன்...¿ என்று மேலே தொடராது நிறுத்திவிட்டு அவள் முகத்தை உற்று நோக்கினாள்.

'எல்லாம்ஆறுதலாய் சொல்லுறன் பேசாமல் இரு' என்றவள் அவளை விலக்கிவிட்டு குசினிக்குள் சென்றுவிட்டாள்.

இரவு படுக்கையில் படுத்ததும் அவள் உள்ளத்துணர்வுகளை அடக்கமுடியவல்லை, முகம் குப்புறப் படுத்தவாறே கண்ணீர் பெருக்கினாள் ரம்யா. படித்து முடித்துவிட்டு படுக்கைக்கு வந்தவள் அக்காவைப் பார்த்து அதிர்ச்சியுற்றாள். தலையணை நனைந்திருந்தது. அவளது முகம் கண்டிச் சிவந்திருந்தது

'அக்கா என்னதான் நடந்தது, சொல்லித் தொலையேன்.' என்று அவள் தலையைவருடினாள்.

'கலியாணம் முற்றாக்கிவிட்டினம்'

'அதற்காகச் சந்தோசப்படுவதை விட்டு ஏன் அழணும்'?

'சத்தம் போடாமல் படு நீ ஒன்றும் அறியாதவள் மாதிரிபேசாதே. அப்பு முந்திப் பேசினாரே கடைக்கார... மேலே பேச முடியாது தேம்பினாள்.

'உனக்கு யார் சொன்னது? இல்லை நீயே கற்பனை பண்ணுறியா!

''அப்புவும் அண்ணையும் கதைத்து முடிவு செய்திட்டினம் என்று அண்ணி தான் சொன்னா''

'நீ ஒன்றும் சொல்லலை?

'உனக்கென்னடி பயித்தியமா'?

'அண்ணியிடம் நீ சொல்லலாம் தானே.'

'எங்கள் விருப்பப்படியா எல்லாம் நடக்குது. நான் விரும்பியது என்னவோ உண்மை அவர் ..... அவர் ..' என்று தேம்பினாள்.

'அண்ணியிடம் சொல்லி கேட்பது தானே. நீ தான் அன்றைக்கும் பேசக்கூடாது என்று என்னை தடுத்தாய். அன்றே கூறியிருந்தால் மாற்று சம்பந்தமாய் செய்திருக்கலாம் இனிக்கேட்டால் அப்படி இப்படி என்பினம்.'

'பேசாமலிரடி யார் காதிலாவது விழப்போகுது.'

'நன்றாய் கேட்கட்டும் இன்னும் முற்றுச் சொல்லவில்லைத்தானே நானே நாளைக்கு அண்ணியிடம் கேட்கிறேன்.'

'சுகன்யா, நீ ஒன்றும் பேசாதை. எதுக்கும் கொடுத்து வைக்கனுமடி நாங்கள் பாவப்பட்ட ஜென்மங்கள். எங்களுக்கு என்று தனியான அபிலாசைகள் இருக்கக் கூடாதடி'

'தத்துவம் பேசுறாயா? எல்லோருக்கும் வசதி கிடைத்தால் தத்துவம் என்ன அதுக்கு மலேும் பேசுவினம். என்ன தானிருந்தாலும் அவரவர்க்கு என்று ஓர் மனமிருக்கே. அதை யாராவது நினைக்கினாமா? அண்ணன் அல்ல அண்ணி ஒரு வார்த்தை உனக்குச் சம்மதமா? என்று தானும் கேட்டுப்பார்த்திருக்கலாமல்லவா? உன்னை விற்பதற்கு அதுவும் மலிவு விலையில் விற்க பெற்றவரும். உடன் பிறந்தவரும் உன் சம்மதமின்றியே தீர்மானித்து விட்டனர். ஆடு மாட்டிற்கும் எமக்கும்என்ன வித்தியாசம்?' என்று இன்னும் என்னவோ எல்லாம் பொரிந்து தள்ளினாள்.

'என் தலைவிதி இதுவானால் யார் என்ன செய்ய முடியும். நீ ஆத்திரப்படுவதில் அர்த்தமே இல்லையடி.'

'அர்த்தமிருக்கோ இல்லையோ நானும் பார்க்கத்தான் போறேன். உன்னைப் போல வாயில்லாப் பூச்சியாய் நான் இருக்கமாட்டேன். மனம் விரும்பாத இப்படி ஒரு கல்யாணம் முடிப்பதை விட முடிக்காமலேயிருந்து விடலாம்.' என்று கறுவிக் கொண்டே படுத்தாள்.

'சுகன்யா, தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால் தாண்டி தெரியும். எதிர்ப்பதற்கும் ஒரு பிடிப்பு இருக்கணும். எனக்கு என்னடி இருக்கு?'

அவள் கூறுவதிலும் நியாயமிருப்பதை உணர்ந்தாள் சுகன்யா. பந்தபாசக் கூட்டுக்குள் அடைக்கப்பட்ட ஓர் பிராணியாய்த்தானே இருக்கின்றோம். எதிர்த்துப் போராட நாம் எமது சொந்தக் காலில் நிற்கணும். மனதுக்குப் பிடிக்காத ஒருவன் திருமணத்தின் மூலம் சொந்தமாகின்றான். விரும்பியோ விரும்பாமலோ அந்த சொந்தத்தை ஏற்றுத்தான் ஆக வேண்டும். மனம் விரும்பாத ஒன்றை எதிர்ப்பதாயிருந்தால் சொந்தக் காலில் நிற்கும் தகுதி பெறவேண்டும். என நினைத்தவாறே தன் எதிர்காலம்பற்றி பெரும் நினைவுக் கோட்டைகளை எழுப்பினாள்.

அன்று வெள்ளிக்கிழமை காலையில் எழுந்து குளித்து கணவனுடன் சுதுமலை மனோன்மணியம் பாளை வணங்கிவிட்டு வந்த ராகினி பூசைஅறையில் சென்றுவணங்கினாள். ரமணன் வந்ததும் பைசிக்கிளை எடுத்துக் கொண்டு எங்கோ புறப்பட்டுச் சென்று விட்டான். தன் வீட்டில் என்றால் கொஞ்சம் பலமாகத் தேவாரம் பாடுவாள். அங்கே அப்படிப்படிக்க முடியவில்லை. மெல்லவே பாடினாள். ஈற்றில் அபிராமி அந்தாதியில் புண்ணியம் செய்தனமே மனமே......என்ற பாடலைப் பாடிக்கொண்டிருக்கும் போது தோய்ந்து தலை துவட்டிவிட்டு உள்ளே வந்த சுகன்யா' ஆமா இவங்கதான் புண்ணியம் செய்தவை, மற்றவை பாவம் செய்தவை தான்' என்றாள் எரிச்சலுடன்.

ராகினிக்கு நெஞ்சில் யாரோ கத்தியாற் குத்தியது போன்ற உணர்வு. படிப்பதை நிறுத்தி விபூதியை எடுத்து நெற்றியிலிட்டபோது அவளையுமறியாமல் விழிகளில் நீர் திரண்டு சொரிந்தது. கண்களைத் துடைத்துக் கொண்டு வெளியே வந்த ராகினி எதுவும் பேசாமல் அறைக்குள் சென்று கதவைச் சாத்திவிட்டு அழுதாள். ஓரளவு மனம் தேறியதும் அவள் சிந்தனையலைகள் தடம்புரள ஆரம்பித்தன.

'இவள் ஏன் இப்படிக் கூறினாள்? எதற்காகக் கூறினாள், வந்ததும் வராததுமாக இப்படி ஓர் நிலைமை தனக்கு ஏற்படுமென்று அவள் எதிர்பார்க்கவில்லை. மௌனம் கலகநாசம் என்பதற்கிணங்க எதுவும் நடவாதது போன்று பேசாமலிருந்து விட்டாள். கணவனிடமே கூறாமல் தன் மனதுக்குள்ளேயே அந்த விடயத்தைப் புதைத்து விட்டுக் கலகலப்பாகவிருந்தாளாயினும் சுகன்யாவை நிமிர்ந்துபார்க்க அவளால் முடியவில்லை.

அன்று மதியத்திற்கிடையில் தானே ரம்யாவிடம் விடயத்தைக் கூறினாள் சுசுன்யா. செய்வது இன்னது என்று அறியாமற் பதறிய ரம்யா 'அண்ணி ஒன்றும் பேசலையா?' என்றாள்.

ஹுஉம்.

'பாவமடி அண்ணி ஏன்டி இப்படிச் சொன்னாய்?'

'அந்தப் பாடலைக் கேட்டதும் திடீரென எனக்கு என்னவோ போலாகிவிட்டது. கூறிவிட்டன். நினைப்பதை நினைக்கட்டும்' என்று அலட்சியமாகக் கூறிவிட்டுக் சென்றாள்,

அவள் ரியூசனுக்குப் புறப்பட்டுச் சென்றதும் ராகினியைத் தேடினாள் ரம்யா, அவள் தன்வீட்டிற்குச் சென்றதையறிந்துகொண்டு அங்கே சென்றாள். வாசலிலேயே அவளைப் பார்த்ததும் 'வா ரம்யா' என்று உள்ளே அழைத்துச் சென்றாள் ராகினி.

'அண்ணி உங்களிடம் தனியாக ஒரு விடயம் பேசணும்'

'இங்கே யாருமில்லை. என்ன பேசணும்'

'காலையில் சுகன்யா என்னுடன் கோபித்துக்கொண்டு வந்தவள் ஏதோ சொன்னாளாம். நீங்கள் பாடிக்கொண்டிருந்த பாட்டும் தான் சொன்ன கதையும்... நீங்கள் தப்பாய் எடுத்துக்கொண்டீர்களோ என்று வந்து என்னிடம் கூறினாள்''என்று சமாளித்துக் கூறிமுடித்தாள்,

'ரம்யா உமக்கும், எனக்கும் ஒரே வயது தானே. நான் அதுபற்றித் தப்பாய் நினைத்திருந்தாலும் பெரிது படுத்தவில்லை, நீங்கள் இதைக் கதைத்து '

'அண்ணி' அவளுடைய கரங்களை இறுகப்பிடித்துக்கொண்டாள்.

'ரம்யா அவள் வேண்டுமென்றே கூறியிருந்தாலும் நான் வருத்தப்படமாட்டேன். ஆனால் நான் யாருக்கும் எதுவித தவறும் செய்யவில்லை. இவள் இப்படி என்னோடு ..... அதைத்தவிர வேறு ஒரு கோபமும் இல்லை' என்று கூறி அந்த விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு 'அம்மா போயிட்டு வாரேன்' என்று தாயிடம் விடைபெற்றுக் கொண்டு ரம்யாவுடன் கணவன் வீட்டுக்கு வந்தாள்.

ஒரே அயலில் இருந்தபோதும் அவர்களோடு ராகினி அதிகம் பழகியதில்லை. கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்குக் கூட அதிகம் அவள் செல்வதில்லை. தன்னைப்போலவே எல்லோரும் இருப்பார்கள் என்று நினைத்திருந்தாள். ஆனால் சுகன்யா?

அவளுடைய பேச்சும்,செயலும் ராகினியை கிலி கொள்ளச் செய்தது. யாருடன் கதைக்கும்போதும் ஒருவிதமான அலட்சியபாவத்துடனேதான் கதைப்பாள். பெரியவர்கள், சிறியவர்கள் என்ற பேதம் கூட இல்லாது திமிராகப் பேசுவாள். அதே சமயம் நன்றாகச் சிரித்தும் கதைப்பாள். அவளுடைய கதைகளிற் கருத்தாழம் இருக்கும். அதை உணர்ந்துகொள்ளாதவர்கள் சிறியவள் தானே என்று சிரித்துச் சமாளிப்பார்கள். அவளைப்பற்றி எதுவும் புரிந்துகொள்ள முடியாது தடுமாறினாள் ராகினி,

மாலை ஆறுமணியளவில் கையில் பார்சலுடன் வந்தான் ரமணன். அவற்றை வாங்கி வைத்துவிட்டு தேநீர் எடுத்து வரச் சென்றாள். அவனும் உடை மாற்றிக் கொண்டு வந்து இருந்தான்.

'ராகினி இந்த பாக்கில் ஓர் சாறி இருக்கு. ரம்யாவிடம் கொடும் அவர்கள் பெண் பார்க்க வரும்போது கட்டிக்கலாம் என்று வாங்கி வந்தேன்.

'என்ன சாறி?'

காஞ்சிபுரம். எடுத்துப் பாரேன்.

'வேண்டாமுங்க நீங்களே உங்கள் கையால் அவளிடம் கொடுங்கள். அதுதான் நல்லது.'

'ஏன்? நீ வேறு நான் வேறா?'

'அதில்லீங்க. என்ன இருந்தாலும் நீங்கள் உடன் பிறந்தவர். நான் இப்பவந்த சொந்தம் தானே.'

'ராகினி நீ......

'பிளீஸ் தப்பா ஏதும் நினைக்காதீங்க. நீங்களே கூப்பிட்டு கொடுங்கள். அப்புறமாய் நான் பார்க்கிறேன்.'

அதற்கு மேல் அவன் எதுவும் பேசவில்லை. ரம்யாவை அழைத்து பார்சலை அவள் கையில் கொடுத்தான். அவள் எதுவும் பேசாமல் வாங்கிக் கொண்டு சென்றாள்-

12ம் பக்கம் பார்க்க

# 3

# தமிழ் மரபில் இலக்கியத் திறனாய்வுச் சிந்தனைகள்

கலாநிதி நா. சுப்பிரமணியன்

தமிழ் மரபிலே திறனாய்வு தொடர்பாக நிலவிவந்துள்ள சிந்தனைகளை நோக்க முற்படும்போது முதலில் இலக்கியம் என்ற சொற்பயிற்சி தொடர்பான ஒரு குறிப்பை முன்வைக்க வேண்டியது அவசியமாகிறது.

தமிழின் தொல் மரபிலே இலக்கியம் என்ற சொல் பயின்றமைக்குச்சான்றில்லை.

'இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகின் எண்ணெயும் இன்றே
எள்ளினுள் எண்ணெய் எடுப்பது போல
இலக்கியத்தினின்றும் எடுபடும் இலக்கணம்''

என்ற நூற்பா அகத்தியனார் பெயரால் வழங்கிவருவதுண்மை ஆயினும் இந்த அகத்தியர் எக்காலத்தவர்? இந்நூற்பா அவருடையது தானா? என்பன இற்றைவரை அறிவு பூர்வமாக நிறுவப்படாத விடயங்களாகும். எனவே இலக்கியம் என்ற சொல்வழக்கை கால நிலையில் நோக்க இது துணைபுரியாது. ஆக இலக்கியம் என்ற சொல்வழக்கை வரலாற்று நிலையில் நோக்கும் போது எமக்குக் கிடைக்கும் காலமுதன்மையுடைய சான்று கி. பி. 9 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த சேந்தன் திவாகரம் என்ற நிகண்டு ஆகும். இதில் (233 இல்) இலக்கியம் என்ற சொல் எடுத்துக் காட்டு என்ற பொருளிற் பயின்றது. அடுத்து கி. பி. 11 ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரிய யாப்பருங் கலக் காரிகையிலும் (காரிகை 29) இச் சொல்மேற்படி பொருளிலேயே பயின்றது. கி. பி. 12 நூற்றாண்டுக்குரியதான நன்னூலில்.

இலக்கியம் கண்டதற் இலக்கணமியம் பலிற் .... (நூற்பா 141) என்ற அடி பயில்கிறது. இதற்கு உரை கூறுவோர் இலக்கியம் என்பதற்கு ''அறிவுடையோரான் நியமிக்கப்படும் இலக்கியம்' என்று பொருள் சுட்டி அமைவர். இதிலே நாம் இன்று இலக்கியம் எனச் சுட்டும் பொருளில் அச் சொல் பயின்றதாஎன்பது தெளிவில்லை. இக்காலத்துக்கு பின்னரே அச் சொல் நாம் இன்று சுட்டும் பொருளில் பயிலத் தொடங்கியிருக்கலாம் என்பது ஊகம்.

பழந்தமிழ் மரபிலே இலக்கியம் என்பது பொதுவாக செய்யுள் என்ற சொல்லாலே சுட்டப்பட்டது. செய்யுள் என்பது இலக்கியம் என்ற பொருண்மையையும் உள்ளடக்கியதாக, மொழியை ஊடகமாகக் கொண்ட பல்வேறு வெளியீட்டு முறைகளையும் சுட்டி நின்றது. பாட்டு' உரை, நூல், வாய்மொழி, விடுகதை, பழமொழிஅங்கதம் என எழுவகைப்பட்ட ஆக்கங்கள் செய்யுள் என்பதில் அடங்கியிருந்தன. இவற்றுள் பாட்டு என்பது நாம் இலக்கியம் என்றுகூறும்பொருண்மைக்குரியதாகப் பயின்றமை புலனாகின்றது. நூல் என்பதுபொதுவாக இலக்கணத்தைக் குறிப்பதாகக் கொள்ளப் படுவது. நூல் என்ற சொல் தொல்காப்பியத்தில் இலக்கியம் இலக்கணம் ஆகிய இரண்டுக்கான பொதுச் சுட்டாகவும் வழங்கியுள்ளது எனவும் ஆய்வாளர் கருதுவர். ஏனைய செய்யுள் வகைகள் இன்றைய நோக்கில் இலக்கியம் என்ற பொதுச் சுட்டில் அடக்குவதற்குரியனவே. மேற்படி செய்யுள் என்ற பொருண்மையிலும் நாம் சுட்டும் இலக்கியம்என்ற பொருண்மையிலும் அமைந்த ஆக்கங்களின் திறனாய்வு மரபே ஈண்டு நமது கவனத்துக் குரியதாகின்றது.

## திறனாய்வு மூலங்களும தகவல்களும

இரண்டாயிரம் ஆண்டுக்கு மேற்பட்ட தொடர்ச்சியான வரலாறு கொண்ட தான தமிழ்ச் செய்யுள் இலக்கியப் பரப்பிலே முற்குறித்தவாறு கோட்பாட்டு நிலை, செயன் முறை ஆகிய இருவகைத் திறனாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தமைக்கான சான்றுகள் பலவுள தமிழில் இன்று எமக்குக் கிடைக்கும் இலக்கண நூல்களிற் கால முதன்மை கொண்ட தான தொல்காப்பியத்தின் 'பொருளதிகாரம்' தமிழரின் திறனாய்வுச் சிந்தனைகளின் பேறாக உருவான ஒரு விதிமுறை, சோட்பாட்டுமுறை, இலக்கணமாகும். அதில் முன்வைக்கப்பட்ட இலக்கியக் கொள்கைகளே தமிழின் தொல்லிலக்கியங்களான சங்க நூல்களை விளங்கிக்கொள்ளவும், வ்ளக்கியுரைக்கவும் கருவியாக அமைபவை. தொல்காப்பியம் முன்வைத்த இலக்கியக்கொள்கைகள் காலவளர்ச்சியோடொட்டி விரிந்தும், மாறுபட்டும் செல்லும் வரலாற்று நெறியைப் பிற்பட்ட காலப்பகுதிகட்குரிய இறையனார்களவியவரைபுறப் பொருள் வெண்பாமாலை,ந ம்பியகப் பொருள்என்பவற்றிலும் அணியியல் யாப்பியல், பாட்டியல் நூல்களிலும் அவதானிக்கமுடியும்.

சங்க இலக்கியங்களைஅகம், புறம் என வகைப்படுத்தித் தொகுத்த காலப்பகுதிகள் முதற் கடந்த நூற்றாண்டில் இராமலிங்க வள்ளலாரின் பாடல்களை அருட்பா அல்ல மருட்பா என சிறீல சிறீ ஆறுமுகநாவலர் விமர்சித்த காலப்பகுதியிலும் அதன் பின்னருங் கூட தமிழ் மரபில் செயன்முறைத் திறனாய்வு பல்வேறு தளங்களில் நின்று மேற்கொள்ளப் பட்டுவந்தமையைஉய்த்துணரமுடிகிறது.

அ. முச்சங்கங்கள் தொடர்பாக வழங்கும் ஐதிகம்.
ஆ. சங்கப்பலகை என்ற கருத்துநிலை,
இ. நக்கீரர், இறைவன் விவாதக் கதை,
ஈ, களவியல் உரைகட்கு உருத்திரசர்மன் தரம் கண்ட வரலாறு.
உ. திருவள்ளுவமாலை என்ற மதிப்புரைக் கதம்பம்.
ஊ. சாத்தனார் எழுத்தாணியால் தம் தலையைச் சீழ்த்தலை ஆக்கிக் கொண்ட செய்தி.
எ. சம்பந்தர், சமணர் நிகழ்த்திய அனல் வாதம், புனல்வாதம்.
ஏ. மருள்நீக்கியார் நாவுக்கரசராகவும், திருவாதவூரர் மாணிக்கவாசகராகவும் பெயர்பெற்றமை.
ஐ. திருத்தக்கதேவர், கம்பர், கச்சியப்பர் ஆகியோர் தம் நூல்களின் அரங்கேற்றங்களில் ச்எதிர்நோக்கிய பிரசினைகள்.
ஒ. ஒட்டக்கூத்தர், புகழேந்தி என்போர் மத்தியில் நிலவிய புலமைப் பூசல் பற்றிய கதைகள்.
ஓ, அருணகிரிநாதர், வில்லிபுத்தூரர் வித்துவப் போட்டி பற்றிய செய்தி.
ஔ. இலக்கிய, இலக்கண நூல்கட்கு எழுந்த உரைகள்,

முதலியனவாக அறியப்படும் செய்திகள், கதைகள், கிடைக்கும் ஆக்கங்கள் என்பன செயல்முறைத் திறனாய்வு தொடர்பாக நிலவிவந்த பன்முக அணுகுமுறைகளை எமக்கு உணர்த்துவன. மேற்சுட்டிய செய்திகள், கதைகள் என்பவற்றின் வரலாற்றுண்மை விவாதத்துக்குரிய தொன்றாயினும் இவற்றாற் புலப்படுத்தப்பட்டுள்ள எண்ணப்பாங்குகள் நமது கவனத்துக்குரியன. தமிழின் செயன் முறைத திறனாய்வுச் செயல் நெறிகளை இனங்காண இவை துணைபுரியவல்லன.இவற்றை இனங்காண்பதற்கு முதற்கண் தொல்காப்பியத்தின் விதிமுறைத் திறனாய்வு புலப்படுத்தியுள்ள முக்கிய அம்சங்களையும் அவற்றின் வரலாற்றுரீதியான வளர்ச்சி, மாற்றம் என்பவற்றையும் நோக்கலாம்.

## தொல்காப்பியத்தின் இலக்கியக் கொள்கை

தொல்காப்பியம்கி. பி 6 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தொன்மைவாய்ந்தது. இதனைச் சங்க நூல்களுக்கு முற்பட்டது என ஒருசாராரும் பிற்பட்டது என மற்றொரு சாராரும் வாதிப்பர். அந்நூலின் 'இலக்கிய இயல்' எனக் கருதத்தக்க 'பொருளதிகாரம்' சங்கநூல்களுக்குப் பிற்பட்டது என்றே கருதத்தக்கது, இவ்வதிகாரம் இலக்கியத்தில் (செய்யுளில்) அமைய வேண்டிய பொருள், அதன் உணர்த்துமுறை, அமைப்பியல், மொழி, செய்யுள் என்பன தொடர்பாகப் பேணப்படவேண்டிய மரபுகள் என்பன பற்றி மிக விரிவாக எடுத்துரைக்கிறது; அவை தொடர்பாகத் தனது காலத்துக்கு முன்வரையில் வழங்கி வந்த கொள்கைகளையும் தனது சமகாலக் கருத்தோட்டங்களையும் தனது முடிவுகளையும் முன்வைக்கிறது.

பொருளதிகாரத்தின் முதல் ஐந்து இயல்களான அகத்திணை இயல், புறத்திணை இயல், களவியல், கற்பியல், பொருளியல் என்பன பாட்டு என்ற செய்யுள் வகைக்குரிய பொருளமைதி தொடர்பாகவும் கதைமாந்தரூடாக அப்பொருளமைதி எவ்வாறு உணர்த்துமுறைக்குரிய நிலையைப் பெறுகிறது என்பது தொடர்பாகவும் விரித்துரைப்பன. அடுத்து அமையும் மெய்ப்பாட்டியல் இலக்கியத்திற் புலப்படுத்தப்படும் சுவைகளின் வகை, இயல்பு என்பன பற்றிய இலக்கணமாகும். ஏழாவதான உவமையியல் இலக்கியத்தின் ஆக்கத் தொழிற்பாட்டில் கற்பனை அணி என்ற அம்சங்களின் பண்பு, பணி என்பன பற்றி அறியத் தருவது. அடுத்து அமைந்துள்ள செய்யுளியல் செய்யுளின் கட்டமைப்புத் தொடர்பான கூறுகளை மிக நுணுக்கமாக எடுத்துரைப்பது. இறுதியாக அமைந்துள்ள மரபியலின் முற்பகுதி பொதுவான மரபுகள் பற்றிப் பேச, ஈற்றின் இருபத்தொரு நூற்பாக்கள் நூலின் மரபு பற்றிப் பேசுகின்றன.

மேற்குறித்த இயல்களில் தொல்காப்பியம் செய்யுள் என்றால் என்ன? (இலக்கியம் என்றால் என்ன?) என்பது பற்றிப் பேசவில்லை. அதன் உள்ளடக்கம், உணர்த்துமுறை, உருவம், வகைமை, என்பன தொடர்பாகவே பேசுகிறது குறிப்பாச் செய்யுளியல் என்ற தலைப்பில் அமைந்த இயலின் முதல் நூற்பா செய்யுளின் உறுப்புக்கள் என முப்பத்துநான்கு கூறுகளைச் சுட்டுகின்றது. ஆனால் இவற்றின் கூட்டுருவாக்கமான செய்யுள் பற்றிய வரைவிலக்கணம் தரப்படவில்லை. இதனை அவதானித்த உரைகாரரான பேராசிரியர் தாமே ஒரு வினாவை எழுப்பி விடை காண்கிறார்.

''மற்றுச் செய்யுளுறுப்பு ஈண்டோதினார்; செய்யுள் யாண்டோதுபஎனின் அறியாது கடாயினாய் உறுப்பென்பன உறுப்புடைப் பொருளின் வேறெனப்படா; பொருள் எனப்படுவான உறுப்பே அவற்ற தீட்டத்தினை முதலென வழங்குபவாக கலான் உறுப்பினையே சொல்லியொழிந்தார்; முதற்பொருளதிலக்கணமென உறுப்பிலக் கணத்தையே வேறுபடுத்துக் கூறலாவ தின்மையானும் உறுப்புரைப்பவே அவ் உறுப்புடைய பொருள் வழக்கியலாற் பெறலா மாகலானு மென்பது.''

இதன்படி செய்யுளின் உறுப்புக்களின் இயல்புகள் கூறப்படால் அவற்றின் கூட்டமைப்பான செய்யுளின் வரை விலக்கணம் அமையும் என பேராசிரியர் கருதுவது தெரிகின்றது. பேராசிரியர் தந்த இவ்விளக்கத்தின் துணையுடன் தொல்காப்பியரது இலக்கியக் கொள்கைக்கு விளக்கம் தரமுயன்றது பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள் அதனை அவயவிக் கொள்கை (Organic Jheory) என இனங் காண்பர். தொல்காப்பியத்தின் இலக்கியக் கொள்கையாக மட்டுமன்றிக் சங்கப் பாடல்களின் இலக்கியக் கொள்கையாகவும் அவர் இதனைக் கொள்வர் (இலக்கியமும் திறனாய்வும்) 3ம் பதி 1981- பக் 56-57) அவயவிக் கொள்கையின் சிறப்பியல்பு பற்றி அவர் விளக்கும் பொழுது,

'பாடுவோர் கேட்போர், பொருள் வடிவம், அறிவு உணர்ச்சி, அழகு, பயன் பாடு, இலட்சியம், நடைமுறை, உண்மை, கற்பனை முதலியவற்றுக் கிடையில் முரண்பாடு இல்லாதிருப்பதேயாம். ஏனைய இலக்கியக் கொள்கைகள் ஏதோவொரு விதத்தில் இவ்விருமைகளில் ஒவ்வொன்றை முதன்மைப் படுத்துவன.

என்பர் (மேற்படி ப.58)

தொல்காப்பியம் செய்யுளின் வடிவம் உள்ளடக்கம் என்பன தொடர்பாக தெளிவான கொள்கைகளை முன்வைக்கிறது.

பாட்டு என்ற செய்யுள் வகைக்குரியவடிவ நிலைகளை ஆசிரியம், வெண்பா, கலி, வஞ்சி என நான்கு முக்கிய வகைகளாக அது சுட்டும். மேற்படி நால்வகைப் பாடல்களும் பொதுவாக அறம் பொருள்இன்பம்எனும் முதன்மையான முப் பொருள்கள் தொடர்பான உள்ளடக்கங்களைக் கொள்ளற்குரியன எனப்படுகின்றன.

அந்நிலை மருங்கின் அற முதலாகிய மும் முதற் பொருட்கும் உரிய என்ப (செய்யுளியல் நூற்பா : 105)

இவ்வாறு கூறும் தொல்காப்பியம் இன்ன பொருளை இன்ன பாவகையில் பாடப்படுவதில்லை என்ற வரையறையையும் உணர்த்துகிறது. குறிப்பாக வாயுறைவாழ்த்து, அவையடக்கியல் ஆகிய பொருண்மைகள் கலி, வஞ்சி ஆகிய பாவகைகளிற் பாடப்படுதலில்லை என்கிறது. (நூற்பா 107) இவற்றை நோக்கும் போது இலக்கியத்தின் பொருள் வடிவம் என்பன தொடர்பான கொள்கைகள் உருவாகி நிலை பெற்று விட்ட ஒரு காலச்சூழலைத் தொல்காப்பியம் உணர்த்தி நிற்பது தெளிவாகிறது.

செய்யுள் வகைகளிலொன்றாகிய நூல் என்பது பற்றிச் செய்யுளியல், மரபியல் என்பவற்றில் பேசப்படுகின்றது. அவற்றில் நூலுக்குரிய அமைப்புக்கூறுகளானநூற்பா யாப்பு, ஒத்து, படலம், பிண்டம் என்பவை கூறப்படுவதுடன் நூலானது முதனூல், வழிநூல் என இரு வகைப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. முதனூலாசிரியன் பற்றிக்குறிப்பிடுமிடத்து,

'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூலாகும் (மரபியல்: 96) எனக்குறிப்பிடப் படுகிறது. தெய்வத்தால் அல்லது தெய்வ அருள் பெற்ற ஒருவரால் இயற்றப்படுவதே முதனூல் என்ற கருத்து அக்காலத்தில் நிலவியமை புலனாகின்றது. இவ்வாறு முதனூல் ஆசிரியன் பற்றித் தரப்பட்டுள்ள செய்தியை, இலக்கிய ஆசிரியனைப் பற்றிய தொல்காப்பியரது கொள்கையாக ஆய்வாளர் கருதுவதுண்டு. ந. பிச்சமுத்து (திறனாய்வும் தமிழ் இலக்கியக் கொள்கைகளும் ப. 58) அவ்வாறு கொள்ள அவசியமில்லை. நூல் என்ற வகைக்குச் சிறப்புரிமையுடையதான இலக்கண நூலாசிரியன் பற்றிய கொள்கையே இது எனலாம். (இதுபற்றிப் பின்னர் விரிவாக நோக்கலாம்)

இலக்கியத்துக்கு ஒரு பயன் உண்டு எனத் தொல்காப்பியம் கருதியுள்ளமையை அதன் நூற்பாக்கள் உணர்த்தி நிற்கின்றன. செய்யுளியலிலே செய்யுளின் முப்பத்துநான்கு கூறுகளுள் பயன் என்பதும்

12ம் பக்கம் பார்க்க

## கலை நிகழ்வுகளின் பின்னணியில் கர்மவீரர் பொ. செல்வரத்தினம்

'யார் இந்தப் பொ. செல்வரத்தினம்?' இன்றைய இளைஞன் ஒருவனின் கேள்வி இது. 'கலையாம் கலை, வட்டி வாசி உண்டா ஐயா இந்தக் கலைத்துறையில்' பணநாயகம் ஒருவரின் எள்ளல் இது. கலைச் செல்வமே எமது இனத்துக்கு பெரும் செல்வம், பெருமை சேர்க்கும் நற்செல்வம் என்று, தமது செல்வத்தைத் தேய்த்தவர்கள் பலர். அத்தகையோரில் கால் நூற்றாண்டுக்கு மேல், தான் பின்னணியில் நின்று, பல கலைஞர்களை முன்னணிக்குத் தள்ளியவர்தான் மானிப்பாயில் வசிக்கும் கூட்டுறவுத் துறையில் துறைபோகிய முன்னாள் உத்தியோகஸ்தர், நாடகப்பிரியர் திரு. பொ. செல்வரத்தினம் அவர்கள்.

### கலையரசின் ஆக்கங்களில் கைகொடுத்த பெருமகன்

யாழ். ஓறியன்ஸ் கிளப் பல நல்ல நாடகங்களை ஐம்பதுகளில் மேடையேற்றியது. அந்த நாடகங்களின் இயக்குநர் கலையரசு கே. சொர்ணலிங்கம் ஐயாதான். இசையறிந்த, நாடகச் சுவையறிந்த பொ. செல்வரத்தினத்துடன் தினமும் மாலை கலையரசு கலந்துரையாடுவார். ஒத்திகை என்றால் இராஇராவக பொ. செல்வரத்தினத்தின் மோட்டோர் ரதம் நடிகர்கள் வீட்டுக்கு செல்லும் நேரத்துக்கு ஒத்திகை தொடங்க உதவுபவர் இவர். நேரம் பிந்தி விட்டால் இவரது இல்லத்தில் உணவு படுக்கை எல்லாம். இவைகளுக்கு எல்லாம் சளைத்தவரல்லர் இவர். நாடகம் மேடையேறு முன் 'ரிக்கற்' விற்பனை ஒழுங்குகள் போன்ற கருமங்களையும் ஊக்கமாக வெற்றிகரமாக முடித்திடும் சக்தி மிக்கவர். நாடகக் குழு நிர்வாகத்தில தனிமுத்திரை பொறித்தவர். ஒழுங்கு ஒழுக்கம் என்பவற்றை நடிகர் மத்தியில் நிலைநாட்ட, சுயநலம் அற்ற போக்கு நடிகரின் அடி நாதக் கோட்பாடாய் அமைய வேண்டுமென்ற சிந்தனையை அமுல்படுத்த பாடுபட்டவர் இப்பண்பாளர். கால் நூற்றாண்டாக கலைச்சேவை புரிந்த மறுமலர்ச்சி மன்றத் தலைவர் என்ற முறையில், விருந்து வைபவங்களில் சைவ உணவுகள் மட்டுமே சேர்க்கப்பட வேண்டுமென்று நடைமுறைப்படுத்தியவர்.

அறுபதுகளில் கலையரசு தயாரித்த 'தேரோட்டி மகன்' அற்புதப் படைப்பாய் அமைந்தது. அதில் பல வேறு பாத்திரங்கள் தாங்கி நடித்த நடிகர்கள் யாழ். நாடக வரலாற்றில் முத்திரை பதித்து நிற்பவர்கள். கலைவாணர் நாடகமன்ற இயக்குநர் அரசுஐயா மற்றும் அருமைநாயகம், மகேஸ்வரன், இரகுநாதன், குழந்தை சண்முகலிங்கம், பிரான்சிஸ் உட்பட பலரை தனது பிள்ளைகள் போல் நேசித்து அவர்களது ஆற்றலை வளர்க்கும் நல்ல நோக்கில் சதா ஆக்கபூர்வமான ஆலோசனைகள் வழங்கியவர். நக்கல், நளினம், கிண்டல், மட்டந்தட்டல் என்பவற்றின் நிழலே அவரது விமர்சனத்தில் இடம்பெறாது. காந்தியவாதியாய் மிளிரும் அவரிடம் மற்ற உள்ளங்களை உடைக்காமல் சாதுரியமாக ஆற்றுப்படுத்தும் வல்லமை இருந்தது.

## கலை நிகழ்வுகள்

ஏ.ரி. பொன்னுத்துரை

### மறுமலர்ச்சி மன்ற மூலம் மகத்தான சேவை

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் இயக்கத்தொடங்கிய இம்மன்றம் 'அந்த நாளும் வந்திடாதோ?' ஆராமுது அசடா?, மல்லியம், மங்களம், அசோகன் காதலி, சந்திப்பு முதலிய நாடகங்களை பல பிராந்தியங்களிலும் மேடையிட்டு வெற்றியீட்டியது. யாழ். நகர மண்டபத்தில் முதல்முதலாக மூன்றுநாள் நாடகவிழா வைக்கூட இம்மன்றமே அறுபதுகளில் எடுத்தது. பெருந்தொகையான சுவைஞர்கள் சங்கமத்துக்கு பொ. செல்வரத்தினத்தின் ஆர்வத்துடிப்பும், சமூகத்தில் அவருக்கு இருந்த தனிமதிப்பும் காரணிகள் எனலாம். தான் மேடையில் தோன்றாது விட்டாலும், ஆற்றலுள்ள இளைஞர்களை வளர்த்தெடுக்க தியாகம் பலபுரிந்தவர். மற்றவர்கள் பணத்தில் பணியாரம் சுடும் பேர்வழியல்ல இவர்.

### பாண்டிச்சேரி கம்பன் கழக விழாவில் துர்க்காதுர ந்தரியும் ஜெயராஜும்

பாண்டிச்சேரிக் கம்பன் கழகம் வெள்ளிவிழாவை 10. 5. 90 முதல் நான்குநாட்களுக்கு கொண்டாடுகிறது ஒரு நாள் விழாவுக்கு தலைமை தாங்குறார், துர்க்கா துரந்திரி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள். 'பேச்சுக் கலைக்கு ஒரு பெண்' என்று வியக்குமளவுக்கு பல ஆண்டுகள் சங்கநாதம் செய்தஇவர் தமது ஆற்றலால் அறிவால் எமக்கு பெரும் புகழீட்டு வார் என்பதுண்மை

இன்றைய பேச்சாளர் வரிசையிலே தனிப் பாணியமைத்து தினம் தினம் ஆயிரம் ஆயிரம் மக்கள்முன்சொற்பொழிவு செய்து வருபவரும், மாதம் மூன்று என்றகணக்கில் 'பட்டி மண்டபம்' நடாத்தி மரபு இலக்கிய, புராண நூல்களின் உள்ளடக்கம் மற்றும் போதனைகள் பற்றிய விளக்கங்களை சுவைபட இளம் சந்ததிக்கு வழங்குபவருமான ஜெயராஜ் குன்றக்குடி அடிகளார் தலைமையில் சொற்பொழிவு நிகழ்த்த இருக்கிறார். நமக்கு பெருமை தரும் இவர்கள் போல் பலர் தோன்ற வேண்டும்.

# சுருக்கெழுத்துத்துறையில் பெரும்பணி புரிந்தவர்

தமிழ் மொழி வளர்ந்து மணம் பெறவைத்த வித்தகர்களுள் ஈழத்தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை திரு.சி. இராமலிங்கம் அவர்களின் பெயரும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விட்டது. என்றால் மிகையாகாது. தமக்கென வாழாத பெருந்தகை இவ்வுலகை விட்டு மறைந்து ஒரு வருடமாகின்றது.

1951 ம் ஆண்டில் இலங்கை வானொலியில் தமிழ்த் தட்டெழுத்தாளராக நியமனம் பெற்ற இவர் 'ஈழத்துத்தமிழ் சுருக்கெழுத்துத் தந்தை'' எனப் போற்றப்படும் அளவுக்கு முப்பத்தெட்டு வருடகாலமாக அயராது அரும் பணியாற்றினார். ஈழத்தில் தமிழ் மொழியில் அலுவல்கள் நடைபெறும் இவ்வேளையில் திரு.சி. இராமலிங்கம் அவர்கள் இல்லையே! ஆனால் அவர் உருவாக்கிய பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் அவர் பணியைத் தொர்வதற்கு ஈழம் எங்கணும் 'புகழ் பெற்று பணியாற்றுவது அவரது சேவையின் நற்பெறுபேறே என்பதை யாரும் மறுக்கவோ, மறக்கவோ முடியாது.

திரு.சி.இராமலிங்கம் அவர்களின் குணங்குறிகளைக் கொண்டு எம்மவர்கள் 'இராமர்' என அன்பாக அழைப்பார்கள். தமிழ் சுருக்கெழுத்துத் தட்டெழுத்தைத் தமிழகத்திற் கற்றார். அவர் கல்வி பயிலும் காலத்தில் தமிழகத்தில் தி.மு.க உறுப்பினர்களாகவிருந்த திருவாளர்கள் அன்பழகன், நெடுஞ்செளியன், மதியழகன், பிரபல எழுத்தாளர் திரு.அகிலன் ஆகியோருடன் நட்புரிமை தவழ்ந்த தொடர்பு கொண்டு இருந்தார். என்பதை அவரது தமிழ் மொழி வசனநடை பேச்சு முதலியவற்றிலிருந்து காணக்கூடியதாக இருந்தது.

**செல்வி. நா. வேலுப்பிள்ளை**

1951 ல் இலங்கை வானொலியில் தமிழ் தட்டெழுத்தாளராகவிருந்த இவர் 1952 மே மாதம் 20ம் திகதி அரசாங்க மொழிகள் கமிஷன் மேற்பார்வையில் மருதானையில் முதன்முதல் ஆரம்பிக்கப்பட்ட சுருக்கெழுத்துத் துறைக்கு தமிழ்ச் சுருக்கெழுத்துப் போதனாசிரியராக நியமனம் பெற்றார். இத்திட்டத்தில் இவரிடம் பயிற்சி பெற்றவர் இன்றும் இலங்கைத் தேசிய அரசுப் பேரவையில் அரச அறிக்கை உதவியாளராகவும், இலங்கையிற் சுருக்கெழுத்தாளர்களில் உயர் பதவி வகிப்பவருமான ஜனாப் எம். ஏ. எம். முஹ்யித்தீன் முதன்மை மாணவராவர்.

1959 ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியிலும், 1974 ம்ஆண்டு சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியிலும் ஆரம்பித்த சுருக்கெழுத்துத் துறையிற் போதனாசிரியராகக் கடமையாற்றியபோது இவரிடம் கற்றவர்களில் கொக்குவில் தொழில் நுட்பநிறுவனத்தில் சிரேஷ்ட போதனாசிரியராகவும், சம்மாந்துறை தொழில் நுட்பக் கல்லூரியில் போதனாசிரியராகவும், நீதிமன்றங்கள், அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள், மாநகரசபைகள், கச்சேரிகள், பாடசாலைகள் முதலியவற்றில் சுருக்கெழுத்தாளராக, தட்டெழுத்தாளராக, ஆசிரியராக, சேவைக்கால ஆலோசகராகப் பலர் உயர்பதவி பெற்று இவரது பணியைத் தொடர்ந்து கடமையாற்றி வருவது காணலாம்.

1976 ம் ஆண்டு பங்குனித் திங்களில் இவரது தன்நிகரற்ற கற்பித்தல் ஆற்றலைப் பாராட்டும் பொருட்டு இவரது மாணவர்களால் யாழ்ப்பாணம், வீரசிங்கம் மண்டபத்தில் வெள்ளிவிழா கொண்டாடப்பட்டது நாடறியும். இவரது உற்ற நண்பரான திருவாளர் ஜெயசிங்கம்(யாழ் தொழில்நுட்ப நிறுவன

12ம் பக்கம் பார்க்க

# மகாராஜபுரத்தை வாழ்த்திய மாமனுர்

சென்னை நகரம், எட்வேட் எலியட்ஸ் கடற்கரை ஒரு புறம், நீண்டு வளர்ந்த சவுக்கந் தோப்பு மறுபுறம், நடுவே

கம்பீரமாக நிமிர்ந்து நிற்கிறது அடையாறு கலாஷேத்ரா நாட்டியப் பயிற்சி மண்டபம். பூத்துக்கு லுங்கும் உயர்ந்த மரங்கள், வாகை தேமா, சவுக்கு முந்திரிச் சோலை, செடி கொடிகள் எல்லாம் சூழவளர்ந்திருக்கின்றன

இவற்றின் செழித்த நிலை இசையும் நடனமும் இவைக்கு ஊட்டம் தருவதைப் பறை சாற்றும்.

அங்கே --

ஆயிரத்துத்தொளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டு. சவுக்கு மரங்களாலும் தென்னங் கிடுகுகளாலும் வேய்ந்து அமைக்கப்பட்ட ஒரு முக்கரைச்சொக்கட்டான்பந்தல்.

மாலை ஐந்து மணி. சங்கீத மாமலைகளான மைசூர் வாசுதேவாச்சார், காரைக்குடி சாம்பசிவஐயர், பூதலூர் கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள், முடிகொண்டான் வெங்கட்ராமஐயர், பாபநாசம் சிவன், சிறிமதி ருக்குமணி அருண்டேல், மேலும் பிரபல வித்வான்கள், இசைநடன மாணவர்கள், கலாரசிகர்கள்பலரின் முன்னே மேடையில்.

மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் அவர்கள் பாடிக் கொண்டிருக்கிறார்கள், சபையின் கனம், காத்திரத்தைக் கண்டு கொண்ட மகாராஜபுரத்துக்கு ஒரே உற்சாகம்.

வெற்றிலை மென்ற வாய் இதழ்க் கடையில் குறும்பும் மேதாவிலாசமும் கலந்த புன்சிரிப்பு அவர் கன்னங்களில் குழி விழுகின்றன.

மகாராஜபுரத்தின் பின்னே தம்பூரா மீட்டியவாறு குருபக்தியோடு தந்தையைத் தொடர்ந்து தனயன் மகாராஜபுரம் சந்தானம் பாடிக் கொண்டிருக்கிறார்.

விஸ்தாரமான ராக ஆலாபனைகள், உருப்படிகளுக்கு அழகாக மெருகூட்டிய சங்கதிகள், தாள நுணுக்கங்கள் நிறைந்த கல்பனா ஸ்வரங்கள், மகுடஸ்வரப் பிரஸ்தாரங்கள் செய்து பாடி முடிக்கிறார்.

சபையிலிருந்து சிறுதுநேரம் தொடர்ந்து வந்த கரகோஷத்தை அடுத்து -

தாம் போர்த்தியிருந்த பச்சை வர்ணத் துப்பட்டாவைச் சரி செய்து கொண்டு மைசூர் சிறி வாசு தேவாச்சார் தமது இருக்கையை விட்டெழுந்து சிறிமதி ருக்மணி தேவியை ஒருமுறை பார்க்கிறார்.

ஆமோதிப்பது போன்ற பதில் கிடைக்கிறது. தள்ளாத வயதிலும் மிடுக்கு நிறைந்த வாலிபனைப் போன்று மேடைப் படிகளில் தாவி ஏறுறார்.

''எனது மருமகன் மகாராஜபுரம் விஸ்வநாத ஐயர் அவர்கள் எனது பெண்ணைச் சர்வாலங்கார பூஷிதையாக

**தர்மபூபதி சிதம்பரநாதன்**

வைத்துப் போஷிப்பது கண்டு நான் இறும்பூதெய்துகிறேன்' என்று கன்னடமும் தமிழும் கலந்த மணிப்ரவாளநடையில் (ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் கலந்து வருவது) பேசினார்.

மாப்பிள்ளை மகாராஜபுரம் அவர்கள் தமது சங்கீத மாமனாரைவணங்கி மகிழ்ந்த காட்சி அங்கிருந்த அனைவருக்கும் புல்தரித்துக் கண்களில் நீர் சொரிய வைத்தது.

வாக்கேயகாரர்களின் (இயலிசைப் புலவர்கள்) உருப்படிகள் எல்லாம் மகாராஜபுரத்தின் பாணியில் ஜொலித்துக் கொண்டிருந்தன.

கமாஸ் இராக ஆலாபனை நிகழ்கிறது. ஆலாபனையிலேயே அவர் தொடர்ந்து பாடப்போகும் உருப்படி எது எனச் சபையோர் முடிவு கட்டிவிட்டனர். அவர்கள் எண்ணியவாறே 'ப்ரோச் சேவாரெவருரா' பாடத் தொடங்கினார்

அனைவர் கண்களும் மைசூர் வாசுதேவாச்சார் அவர்களை ஒருமுறை மகிழ்ச்சியோடு பார்க்கின்றன. காரணம் - இந்த உருப்படி அவரது சொந்தப் படைப்பு.

மகாராஜபுரம் தொடர்ச்சியாகப் பல சங்கதிகளை அமைத்துப் பாடுகிறார். தொடர்ந்து நிரவல், கல்பனா ஸ்வரங்கள், ஒவ்வொன்றும் அவர்கள் தள் ஒவ்வொன்றும் அவர்கள் கவத்தின் முயற்சியினால் பிறந்த குழந்தைகள் அல்லவா?

## திரைப்படக் கூட்டுத்தாபனமும் தமிழ்த் திரைப் படவுலகும்

இலங்கைத் திரைப்படக் கூட்டுத்தாபனம் சிங்களப்படவுலகின் வளர்ச்சிக்குத் தொடர்ந்து பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது.

எனினும் இலங்கையில் தமிழ்த் திரைப்படவுலகம் வளர்ச்சி பெற இக் கூட்டுத்தாபனம் அளித்த பங்களிப்பு என்ன என்றால் பூஜ்யம் என்ற பதில் நிலை தானா?

கடந்த சில வருடங்களுக்கு முன் இலங்கையில் உருவான சில கறுப்பு வெள்ளைப் படங்கள் தயாராக ஓரளவு கடனுதவி வழங்கப் பட்டதாகச் சொல்லப்பட்டது.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட படங்களில் பிறைட்டன் பிலிம்ஸ் தயாரிப்பான தென்னகக் கலைஞர்கள்ஜெய் சங்கர்- ராதிகா கதாநாயகன், கதாநாயகியாக நடித்த' ரத்தத்தின் ரத்தமே' கலர் படம். இதில் யாழ்ப்பாணக் கலைஞர்களும் பிரதான பாத்திரங்களில்நடித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது) மற்றும் 'கோமாளிகள்' படமுமே குறிப்பிடத் தக்க அளவு வெற்றியைப் பெற்றன, தயாரிப்பாளர்களின் கையை இப் படங்கள் கடிக்கவில்லை. சிவாஜி நடித்த' பைலட்பிரேம்நாத்' அது கூட்டுத் தயாரிப்பு நல்ல வெற்றி பெற்றது

நான் உங்கள் தோழன் புதிய காற்று, அனுராகம் போன்ற ஏனைய படங்கள் வசூலைக் குவிக்கா விட்டாலும் வெற்றிக் கம்பத்தை நெருங்கியதாகக் கூட இருக்கவில்லை என்றே கூறவேண்டும்

தற்போதைய காலகட்டத்தில் தமிழ்ப் படவுலக வளர்ச்சிக்குத் திரைப்படக் கூட்டுத்தாபனம்எத்தகைய ஆதரவை வழங்கப் போகிறது? என ரசிகர்கள் கேட்கிறார்கள்.

திரைப்படத்துறை வளர்ச்சிக்கு பேராதரவு அளிக்கப்படும் என்ற அறிவிப்புக் கூட, அண்மையில் வந்தது.

அந்த ஆதரவு சிங்களப் படத்துறைக்கு மாத்திரம் தானா? அல்லது தமிழ்ப்படத் துறைக்குமா?

மாற்றாந்தாய் மனப்பான்மை அகன்று, இலங்கையில் தமிழ்ப்படவுலகம் ஆரோக்கியமான வளர்ச்சி பெற, இங்குள்ள பல்வேறு அதியற்புத திறமை படைத்த கலைஞர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் இக் கூட்டுத்தாபனம் ஊக்கமளிக்குமா? அளிக்கும் என எதிர்பாப்போம்.

# நடிகர் திலகம் சிவாஜியின் தீவிர அரசியல் ஈடுபாடு

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இப்போது அரசியலில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

தேசிய முன்னணியின் அங்கமான ஜனதாதளின் தமிழ்நாடு தலைவராக உள்ள அவர் இக்கட்சியின் ஆதரவைத் தமிழ்நாட்டில் பெருக்கி மாநிலத்தில் ஆட்சியைப் பிடிக்கச்செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்வேன் என்கிறார்.

இவருக்கு தலைமைப்பதவி கிடைத்தது கட்சியில் பலருக்குப் பிடிக்கவில்லையாம்.

பழைய காங்கிரஸ் அமைச்சரும், ஜனதாதள்ளின் தற்போதைய பிரமுகருமான பூவராகன் இதில் முக்கியமானவர் எனக் கூறப்படுகின்றது.

சிவாஜி ஆரம்பித்து சட்டசபைத் தேர்தலில் போட்டியிட்ட தமிழக முன்னேற்ற முன்னணி மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற முடியவில்லை. அவருடன் இணைந்திருந்த நடிகர் மேஜர் சுந்தரராஜன் உட்படபலர் கட்சி மாறி சிவாஜியின் காலைவாரி விட்டார்கள்.

இதனால் வெறுப்படைந்த சிவாஜி தனது கட்சியை ஜனதாதள்ளுடன் இணைத்து செயற்படும் முடிவுக்கு வந்தார். ராஜசேகரன் மதிஒளி சண்முகம் போன்ற சிவாஜியின் உற்ற நண்பர்கள் அவரைக் கைவிடவில்லை. பக்கபலமாக நிற்கிறார்கள்.

சிவாஜி தனது கொள்ளுப் பேத்தி வயதுடைய நடிகைகளுடன்கூட கதாநாயகனாக நடித்து விட்டார். நடிப்புலகில் அவரே சக்கரவர்த்தி என்ற பெருமை மாறாத்தன்மையுடன் அவருக்குக் கிடைத்து விட்டது. போதிய பொருளும், இணையற்ற செல்வாக்கும் சேர்ந்து விட்டது. இனியென்ன? அரசியலிலும் தீவிரமாக ஈடுபடுவோம் எனக் கருதுகிறார் சிவாஜி. என்றாலும் அவர் தொடர்ந்து பல படங்களில் நடித்தும் வருகிறார்.

ஆயினும் சிவாஜியால் அரசியலில் எவ்வளவு காலம் தாக்குப் பிடிக்க முடியும் என்பதற்குக் காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

## திரைக்கலசம்

தயாரிப்பு: கே.வி. ஆர்.ஸ்ரீ

## தமிழ்ப் படங்களில் அக்கா - தங்கைகள் ராஜ்யம்

தமிழ்ப் படங்களில் அக்கா, தங்கைகள் இருவரும் நடிக்கப் புறப்பட்டு இருப்பது இப்போது அதிகரித்துள்ளது.

இப்போது தமிழ்ப் படங்களில் நடித்துக் கொண்டிருக்கும் சகோதரிகள் பட்டியல் இது.

அம்பிகா - ராதா, ராதிகா- நிரோஷா, பானுப்பிரியா - நிஷாந்தி, டிஸ்கோ சாந்தி - லலிதகுமாரி, இந்திரா - ராசி சுவாதி - மீனா.

பட்டியல் இன்னமும் தொடரும் போலத் தெரிகிறது. பல தங்கைகள் தயார்.

## இவரது தயாள குணம்

ரோகிணி ஹட்டங்காழி, நினைவிருக்கிறதா? 'காந்தி' படத்தில் கஸ்தூரியாக நடித்தவர். இவர் நாடக உலகில் இருந்து வந்தவர்.

அண்மையில் இவர் தன்னை நாடகத்தில் அறிமுகம் செய்தவரான கிருஷ்ணதியோ முப்குந்தஎன்பவரைச்சந்தித்த போது அவர் வறுமையில் வாடிக் கொண்டிருப்பதைக் கண்டு திடுக்கிட்டார்..

உடனே, 'சம்மான்நிதி' என்ற பெயரில் பல பெரிய படவுலகப் புள்ளிகள் உதவியுடன் நிதியமைப்பை ஏற்படுத்தி நலிவுடன் வாடும் நாடகக் கலைஞர்களுக்குப் பல உதவிகளைச் செய்ய ஆரம்பித்துள்ளார்.

சினிமாத்துறை பொதுவாக நன்றி கெட்ட ஒன்று என்று மதிப்பிடப் படுகின்றது. அதில் இப்படியும் இருக்கிறார்களே.

### பாண்டியராஜன் தப்பித்தார்

நடிகர் பாண்டியராஜனின் மார்க்கெட் மீண்டும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஊரைத் தெரிஞ்சுக் கிட்டேன் கதாநாயகன் ஆகிய இருபடங்களின் மூலமாக பழைய இடத்தை இவர் தக்க வைத்துக் கொண்டுள்ளார்.

## ★ ஈழ மண்ணின் மைந்தன் ★ டைரக்டர் வி. சி. குகநாதன் கவிஞர் மு. மேத்தா மோதல்

நம்ஈழமண்ணைச் சேர்ந்தவர் வி.சி.குகநாதன்.இன்று தென்னிந்தியப் படவுலகில் அவரது புகழ் கொடிகட்டிப் பறக்கிறது.

சங்கானைசெல்லையாமாஸ்ரரின் மகனான குகநாதன் புரட்சித்தலைவர் எம்.ஜி ஆர் நடித்த ,,புதிய பூமி'' படத்திற்கு கதைவசனம் எழுதிய தன்மூலம் படவுலகில் புகழ் இவரைச் சூழத்தொடங்கிற்று.

தனது கனிமுத்துப் பாப்பா படத்தின் கதாநாயகியான ஜெயா என்ற முஸ்லிம் பெண்ணையே தன்வாழ்க்கைத்துணையாகவும் வரித்துக் கொண்ட குகநாதன் நடிகர்திலகத்தை வைத்து ராஜபார்ட்ரங்கதுரை என்ற அரியதிரைப்படத்தையும் உருவாக்கியவர்.

இவருக்கும் கவிஞர் மு. மேத்தாவுக்கும் கருத்து வேறுபாடு என்ற செய்திபற்றி தமிழகத்தின் சமீபத்தில் பரபரப்பாக பேசப்பட்டது.

எனினும்குகநாதன் நிலைமையைச் சமாளித்து தமிழன்பால்ஒன்றுபட்டவர்கள் நாம் என்று கூறி இப்பிரச்சனைக்கு முத்தாய்ப்பு வைத்து விட்டார்.

தெலுங்குப்பட உலகிலும் அவர் பெரும் புகழ் பெற்றுள்ளார். அவர் இப்போது படவுலகில் மீண்டும் படுபிஸியாகியிருக்கிறார்.

## டப்பாங் குத்துப் பாடல்களே இன்றைய ரசிகர்களை கவர்கின்றன -டி. எம். எஸ்.

தமிழ்த் திரைப்படவுலகில் தன்னிகரற்ற பாடகராக கடந்த 35 வருடங்கள் பெற்ற அனுபவத்துடன் திகழ்ந்து வருபவர் டி. எம், சௌந்தரராஜன்.

இதுவரை சுமார் 7000 பாடல்கள் பாடியுள்ள பெருமை இவரைச்சாரும்.

அவர் சமீபத்தில் அளித்த பேட்டியில் பின்வருமாறு தெரிவித்தார்.

'பொதுவாக அன்றிருந்தவர்கள் உயர்ந்த இசையை ரசித்தார்கள். 'என்னடி ராக்கம்மா' என்ற டப்பாங்குத்து பாடலை நான் அன்று பாடிய போது கேலி செய்தார்கள். இன்று டப்பாங்குத்துப்பாடல்களை ரசிகர்கள் பெரிதும் ரசிக்கிறார்கள்.

அன்று வார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முக்கியமான சொற்கள் அடிபடாமல் இசையமைத்தார்கள் இன்று வாத்தியத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து இசையமைக்கிறார்கள். கவிதைகளின் முக்கியத்துவம் அடிபட்டுப் போகிறது.

இதுதான் புதிய பாடல்களுக்கும் பழைய பாடல்களுக்கும் உள்ள வித்தியாசம்.

அன்று வாய்ப்புக்கள் கலைஞர்களைத் தேடி வந்தன. இன்று கலைஞர்கள் (பாடகர்கள். இசையமைப்பாளர்களை நாடிச்சென்று கேட்க வேண்டிய நிலைமை.

நான் எப்போதும் ஒரு பெரிய பாடகன் என்று என்னை எண்ணியதில்லை. எனக்கு இறைவன் கொடுத்த அருமையான குரலில் பாடுகிறேன். அதற்காக எப்போதும் அவனுக்கு நன்றி கூறிக் கொண்டிருப் பன்.

எல்லாப் பாடகர்களின் பாடல்களையும் இன்னொரு பாடகர் காப்பியடித்து விடுவார். ஆனால் என் குரலைப் போல் இன்னொருவர் பாட முடியாது என்று மற்றவர்கள் கூறக் கேட்டிருக்கிறேன்.இதை எனக்கு இறைவன் கொடுத்த வரப்பிரசாதமாகத் தான்கருதுவேன்.

ஆரம்பத்தில் நான் 'ஏழிசை மன்னர்' எம்.கே. தியாகராஜ பாகவதருடைய எதிரொலியாகக் கச்சேரி பண்ணினேன். கர்நாடக சங்கீதமும் அப்போது பாடினேன். ஆனால் திரைப்படங்களில்பாட ஆரம்பித்ததும் வெறும் சினிமாப் பாடகனாகி விட்டேன். மக்களும் அதைத்தான் ரசித்தார்கள். எனவே நானும் அவர்களுக்காக கர்நாடக சங்கீதத்தை விட்டு வெறும் சினிமாப்பாடல்களுக்கு இறங்கி வந்து விட்டேன். வேறெந்தச் சினிமாப்பாடகனுக்கும் கிடைக்காத புகழ் எனக்குக் கிடைத்தது.

ஜுபிடா பிலிம்ஸ்,கிருஷ்ணர் விஜயம் படத்தில் ஒரு பக்திப் பாடல் பாடினேன். இப்பாடலுக்கு எம்.எஸ் சுப்பையா நாயுடு இசையமைத்தார். அதுவே என்னைத் திரையுலகில்முதலில் அறிமுகம் செய்து வைத்த முதற்படம் இது.

சிவாஜி, எம். ஜி. ஆருக்குக் கிடைத்த பெரும் புகழுக்கு நானும் முக்கிய காரணமே என் குரல்வளம் அவர்களுக்குப் பெருமை கொடுத்தது இப்படிச் சொன்னார் அவர்.

கவிஞர் கண்ணதாசனின் பாடல்களுக்கு உயிரூட்டிய சிறப்பு டி. எம். சௌந்தரராஜனையே சாரும். அந்தப் பெருமையை கண்ணதாசனே பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார்.

தமிழ் சினிமா இசையுலகில் டி. எம். எஸ்ஸின் பாடல்கள் காலத்தை வென்று நிற்கின்றன.

தமிழர் வாழும் இடமெல்லாம் பட்டி தொட்டி என்றெல்லாம் எங்கு திரும்பினாலும் அவரது கம்பீரக்குரல் மூலமான பழைய, புதிய பாடல்கள் இன்றும் ஒலித்துக் கொண்டுதான் இருக்கின்றன.

அவரது பாடலை ரசிப்பதற்கென்றே பல இலட்சம் ரசிகர்கள் பலபகுதிகளிலும் உள்ளனர்.

## ★ ஆஸ்கார் விருது ★ பெயர் வந்த விதம்

சிறந்த படங்களுக்கு 'ஆஸ்கார் விருது' வழங்கப்பட்டதாக அடிக்கடி கேள்விப்படுகிறோமே அந்த ஆஸ்கார் என்ற பெயர் எப்படி வந்தது என்று தெரியுமா?

இந்த விருதைக் குறிக்க ஒரு சிலையை வழங்குவார்கள். அந்தச் சிலைக்கு அப்போதெல்லாம் பெயர் எதுவும் வைக்கவில்லை.

இந்த விருதை வழங்கும் சம்பந்தப்பட்ட கலை, அறிவியற் கழகத்தின் நூலக அதிகாரியாக இருந்த ஒரு பெண் இந்தச் சிலையைப் பார்த்தால் என்னுடைய சித்தப்பா ஆஸ்காரின் நினைவுதான் வருகிறது என்று வேடிக்கையாகச் சொன்னாராம்.

அதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு நிருபர் அதைச் செய்தியாக வெளியிட அந்த பெயரே நிலைத்து விட்டது.

## பிரான்ஸில் சத்தியஜித்ரே

சென்ற வருடத்தின் சிறந்த வங்காளப் படமாக சத்தியஜித்ரேயின் 'கணக சத்ரு' தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் ஜெரார்ட் டிப்பார்ட்யு என்ற கலைஞர் இப்படத்தின் விநியோக உரிமையைப் பெற்று பாரிஸில் வெளியிட்டிருக்கும் இப்படம் வெற்றிகரமாக நூறாவது நாளை நோக்கி போய்க்கொண் டிருக்கின்றருக்கின்றதாம்.

# மார்க்சிம் கார்க்கியின் வாழ்வும் பணியும்

மார்க்சிம் கார்க்கி' இலக்கியத்துக்கு ஆற்றிய பணியானது; 19ம் நூற்றாண்டின் தலைசிறந்த ரஷ்ய இலக்கியத்துக்கும் புதிய சோவியத் இலக்கியத்துக்கும் இடையேயுள்ளஒருஜீவனுள்ள தொடர்பாக விளங்கி வருவதால், சோவியத்மக்களும் அனைத்து முற்போக்கு நெஞ்சினர்களும் அவரது பணியை மிகவும் உயர்வாகவே மதிப்பிடுகின்றனர். மார்க்சிம் கார்க்கி தொடக்கி வைத்த முற்போக்கு இலக்கியம் தொடர்ந்து வளர்ந்தவண்ணம் செல்கின்றது.

கார்க்கி 1868 இல் ஓர் ஏழைத் தச்சுத் தொழிலாளிக்கு மகனாகப் பிறந்தார். இளம் வயதில் தாய் தந்தையரை இழந்து அனாதைப் பிள்ளையாகியதால் கூலி வேலை செய்து வயிற்றைக் கழுவினார். பதினேழு வயது வரை எழுத்தாளனாக மலரும் வரை கடை ஊழியனாகப் பணியாற்றினார்.

கார்க்கியின் சொந்த வாழ்க்கையில் ஏற்பட்ட சந்தர்ப்பங்களே நாட்டு மக்களின் துன்ப துயரங்களை நேரிற் காணும் வாய்ப்பையும் அத் துன்பங்களைத் தாமும் அனுபவிக்க வேண்டிய சூழ் நிலையையும் அவருக்கு ஏற்படுத்தின. அவரது இத்தகைய அநுபவங்களும், சமுதாய நீதிக்கான வழி வகையைக் காணத் துடித்த அவரது தாகமும் காரணமாக மக்களின் முன்னணிப் படையோடு ரஷ்யப்பாட்டாளிப் படைகளுடன் இணைந்து நின்று போராடினார்.

## கார்க்கியின் நாவல்கள்

கார்க்கியின் முதல் நாவல்களான 'போமோ கோர்தியேவ்'' 'மூவர்' ஆகியவற்றில் அவர் அன்றைய வாழ்க்கை முறையை எதிர்த்தும் சமுதாய அநீதியை எதிர்த்தும் பலத்த கண்டனத்தைவெளிப்படுத்தினார் இந் நாவல்களில் ரஷ்யப் பாட்டாளிவர்க்கப்போராட்டத்துக்கு எதிரான பிற்போக்கு வாதிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

அகிலம் எங்கும் பிரசித்தி பெற்ற 'மார்க்சிம் கார்க்கியின் மூன்றாவது நாவலான 'தாய்'மூலம் சமுதாயத்தின் உள்ளக் கிடக்கையை வெளிக் காட்டினார். தனி நபருக்கும் சமுதாயத்துக்கும் உள்ள பிணைப்புக்களையும் இறுக்கமாக வெளிப்படுத்தியுள்ளார்.

உலக இலக்கிய வரலாற்றிலேயே முதன் முறையாக மக்கள் இதுவரையிலும் கார்க்கியின் நாவல்களில் உள்ளடங்கியிருந்த எனினும் விழிப்புணர்ச்சி நிலையை ஏற்கனவே எட்டிவிட்ட மக்கள் நாவலில் கூட்டுக் 'கதாநாயகனாக' இடம்பெற்று விட்டனர். 'தாய்' நாவலின் கதையை வெகு உணர்வு பூர்வமாக இட்டுச்சென்று வாசகனையும் நாவலோடு சங்கமிக்கும் தன்மையை உண்டாக்கியுள்ளார்.

## யதார்த்த இலக்கியங்கள்

தாய் நாவல் வெளிவந்ததன் மூலம் கார்க்கி சோஷலிச யதார்த்த இலக்கியத்தின் பிதாமகராகவும் கருதப்பட்டார். உலகெங்கும் சமுதாய நீதிக்காகவும் சுதந்திரத்திற்காகவும் சமாதானத்துக்காகவும் போராடி வரும் இளம் எழுத்தாளர்களுக் கெல்லாம் மார்க்சிம் கார்க்கியின் இலக்கியப்படைப்புக்கள் முன்னுதாரணமாய் நின்று வழி காட்டுகின்றன.

மார்க்சிம் கார்க்கி எழுதிய பிற்கால நாவல்கள் சோவியத் ரஷ்யாவின் சமுதாயத்தின் சகல பகுதியினரின் வாழ்க்கையினைத் தெட்டத் தெளிவாக விளங்குகின்றன. இந்நாவல்கள் ரஷ்யாவின் 'கலைக் களஞ்சியமாக விளங்குகின்றன. எனலாம்அரை நூற்றாண்டு காலத்தில் மாறிவந்த ர்ஷ்ய சமுதாய வாழ்க்கையையும், சாதாரண மக்களின் நலன்களையும் லட்சியங்களையும், போராட்டங்களையும் கருத்திற் கொண்டு, படர்ந்துபட்ட சமுதாயத்தைப் படம்பிடித்துக் காட்டும் சித்திரங்களாகக் கார்க்கியின்நாவல்கள் அமைந்தன.

**சார்ள்ஸ்**

கார்க்கியின் பிற்கால நாவல்களிற் சிறப்பானவையாகப் ''பிரமச்சாரியின் டயரி''' ''மூன்று தலைமுறைகள்' ''கிறிம் சாக்கின் வாழ்க்கை'' ஆகியன யதார்த்த பூர்வ வாழ்க்கையின் அடிநாதங்களாகும்.

நாவல்கள் பல படைத்தது போல் கார்க்கி பல சிறுகதைகளையும்,சிலநாடகங்களையும், மூன்று பாகங்கொண்ட சுயசரிதைக் குறிப்பையும் எழுதியுள்ளார். அத்துடன் பல சித்தாந்தக் கருத்துமிக்கக் கட்டுரைகளையும் தொடர்ச்சியாக எழுதியுள்ளார்.

மாமேதை மார்க்சிம் கார்க்கி 1936 ஜூன் 18 அன்று காலமானார். இவரின் மறைவிற்கு சோஷலிச ரஷ்யா பூரணமாகத் துக்கம் கவிழ்ந்திருந்தது. அகிலத்தின் வளமிக்க எழுத்தாளர் ஒருவரின் மறைவு முற்போக்கு நெஞ்சங்களில் நிஜமாய் அவரின் படைப்பும், உருவமும் நிலைத்துவிட்டது.

கார்க்கி மறைவின் பின் பிரபல ரஷ்ய எழுத்தாளர் அலெக்ஷி டால்ஸ்டாய் பின் வருமாறு புகழாரம் சூட்டினார்,

''கார்க்கியைப்போல் வரலாற்றின்
புரட்சிகர சகாப்தங்களை ஆழமாகவும்
நேர்மையாகவும் பிரதிபலித்த கலைஞர்
லெனினைப்போல் விடுதலை பெற்ற
உலகை உருவாக்கும் மார்க்கத்தில்
மனித குலத்தை இட்டுச் செல்லும்
ஒரு கர்த்தா அத்தகைய மாமனிதர்களுக்கு
அவர்களது வரலாற்று வாழ்க்கையில்
பிறந்ததினம், இறந்ததினம் என்ற இரு
தேதிகள் இருப்பதில்லை. அவர்களுக்கு
எல்லாம் ஒருதினம். அது பிறந்த
தினமே ஆகும். இன்னமும்
அவர்கள் நம்முடன் வாழ்ந்தபடியே!..'

மனிதகுலத்தின் மாபெரும் எழுத்தாளன் மார்க்சிம் கார்க்கி இன்னமும் அனைவரினது நெஞ்சங்களிற் குடிகொண்ட படியேயுள்ளார்.!

# சரியான கேள்வி

புதிதாக வேலைக்குச் சேர்ந்த பெண்ணிடம் வீட்டுக்கார அம்மாள், 'நான் உன்னிடம் எதிர்பார்ப்பது, நீ உண்மையாகவும், கீழ்ப்படிந்தும் நடக்கவேண்டும் என்பதுதான் முடியுமா?' என்று கேட்டாள்.

அதற்கு அந்தப் பெண், 'அம்மா யாரோ உங்களைத் தேடி வருகின்றார்கள். நீங்கள் என்னிடத்தில 'நான் இல்லை என்று சொல்லச் சொல்கிறீர்கள். அப்பொழுது என்னிடம் நீங்கள் உண்மையை எதிர்பார்ப்பீர்களா? அல்லது கீழ்ப்படிவை எதிர்பார்பீர்களா?' என்று பதில் கேள்வி கேட்டாள்.

## விவாகரத்துக்கள்

4ம் பக்கத் தொடர்ச்சி

ரும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவராயிருப்பர், அல்லது வேறு கிராமத்தைச் சேர்ந்தவராக இருப்பர். அவர்களிடையே கலாசார இடைவெளி இருக்கவில்லை.

மாறுபட்ட வேற்றுலக சூழலிற் சேர்ந்து வாழ்கின்ற தம்பதியர் ஒருவிதமாகத் தங்களை ஒருங்கிணைத்து வாழக் கூடும் என்று எதிர்பார்க்கலாம். ஆனால் வெறும் பாடசாலைப் படிப்பை முடித்த இளைஞர்,யுவதிகளிடம் ஒருங்கிணைப்பை எதிர்பார்க்க முடியாது.

திருமணம் செய்வதற்குச் சட்டம் வயது வரம்பை இட்டுள்ளது இலங்கைக் குடியரசின் பொதுத் திருமணச் சட்டப்படி ஒருவர் 21 வயது வந்தவுடன் அவர் பராயமடைந்தவராகக் கருதப்படுவார்.(இந்த வயதை 18 ஆகக் குறைக்கப்பட்ட ஒரு சட்டம் தேசிய அரசுப் பேரவையிற் சட்டமாக்கப்பட்ட போதிலும் இன்னும் அச்சட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படவில்லை.)

ஆனால் பதினாறு வயதுடைய ஆணும் பருவமடைந்த பன்னிரண்டு வயதுடைய பெண்ணும் மணஞ்செய்யலாம். அவர்கள் பராயமற்றவர்களாயிருப்பதனால் அவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலரின் சம்மதந் தேவை.

இப்படியான வயதிற் திருமணம் நடந்தால் இத்திருமணங்கள் நிச்சயம் தோல்வியடையவே செய்யும். சட்டம் திருமணம்செய்ய இடம் கொடுக்கிறது. ஆனால் அவர்கள் வாழ்க்கையைப்பற்றி அறிவதற்கு முதலே வாழ்க்கைப் பயணத்தில் எப்படி இறங்க முடியும். விளையாட்டுப் பருவத்தில் வாழ்க்கையின் சுமை புரியுமா? அறியாப் பருவத் திருமணங்கள் தோல்விக்கு இவையும் முக்கியகாரணமாகும்.

பெரியவர்கள் ஆணுக்கு 29 வயதும் பெண்ணிற்கு 24 வயதும் திருமணம் செய்வதற்கு ஏற்ற வயது என்று காரணமில்லாமலா குறிப்பிடுகின்றார்கள். இந்த வயதிற் தான் வாழ்க்கை என்றால் என்ன என்று தெரியும்.

மணவாழ்வு தோல்வி. அது விவாகரத்து வரை வந்துவிட்டது என்றால் இலங்கைக் குடியரசின் பொதுத் திருமணச் சட்டங்கள் 18 வது பிரிவின்படி நீதிமன்றத்தால் மணவிலக்குக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட காரணங்கள் பின்வருவனவாகும். திருமணத்தின் பின் தம்பதிகளுக்கிடையில் அல்லாமல் வேறு ஒருவருடன் பாலியல் உறவு தம்பதிகளிலொருவர் மற்றய திறத்தவரை வன்மமாகக் கைவிடல், திருமண வாழ்வில் அல்லது கடமையிலிருந்து தகுந்த காரணமின்றி விலகல்.

தம்பதிகளிலொருவர் மற்றைய திறத்தவரை அச்சுறுத்திக் கொடுமைப்படுத்தி அல்லது வேறுவிதத்திற் கஷ்டப்படுத்தியோ தீங்கிழைத்து விட்டு விலகப்பண்ணல்?

திருமண காலத்தில் மருத்துவ சிகிச்சையினாலேயோ அல்லது வேறு வழியாலோ மாற்றமுடியாத ஆண்மையின்மை அல்லது வீரியமின்மை.

இவை தவிரக் கணவன் மனைவியான இருவரும் தொடர்ந்து ஏழு வருடகாலம் பிரிந்து வாழ்ந்தால் இருதிறத்தவரும் அறிவித்தல்

12ம் பக்கம் பார்க்க

# ★ ஸ்ரீவள்ளி நாடகம் ★

இன்று இசை நாடகங்கள் அடிக்கடி மேடையேறி வருகின்றன. இது நல்லதோர் அறிகுறியாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இசை நாடகங்கள் அறிமுகமாயின. குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இந்தியக் கலைஞர்களால் இவை முன்னர் ஆடப்பட்டன பின்னர் ஈழத்துக் கலைஞர்களும் இவற்றைக் கற்று மேடை வரலாயினர். இந் நாடக வடிவத்திற்கு மரபு மாறா வகையில் பல மாற்றங்களை உண்டாக்கிப் புதியதொரு பரிமாணத்தை ஏற்படுத்திப் புகழ் பெற்றவர் நடிகமணி வி.வி. வைரமுத்து ஆவார். இவர்வழி வந்த நடிகர்கள் பலர் இணைந்து இப்பொழுது சிறீ வள்ளி எனும் நாடகத்தை மேடையேற்றி வருகின்றனர்.

சிறீ வள்ளி நாடகம் அண்மையில் யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மேடையேறியது. பழம்பெரும் இசை நாடக நடிகர்கள் இதில் பங்கேற்றி நடித்தனர்.

கைலாசபதி அரங்கிலும் ஒருசில வசதிகளுடன் கழுகாசலக் காட்சியை அழகாக ஆசிரியர் ஸ்ரணிலோாஸ் அமைத்துக் கொடுத்தமை பாராட்டுக்குரியது. முருகன் கழுகாசலத்தில் தோன்றிய காட்சி பலரையும் கவர்ந்தமை பழைய நாடக காலத்தை நினைவு படுத்தியதாகப் பழம் பெரும் ரசிகர் ஒருவர் கூறினர்.ா

நாடகத்தில் நடித்த அத்தனை பேருமே இசை ஞான முடையவர்கள், வள்ளியாகப் நடித்த செல்வரத்தினம் அற்புதமான நடிகர், கணீரெனும் தமது குரலாலும் .. நடிப்பாற்றலாலும் அவர் இரசிகர்களைக் கவர்ந்ததில் வியப்பில்லை.

முருகனாக நடித்த வி. என் செல்வராசன் இயற்கையான சாரீர வளமுடையவர் முருகனுக் குரிய தோற்றப் பொலிவுமுடையவர். இவருடைய நடிப்பும் சிறப்பாக அமைந்தது.

நாரதராகத் தோன்றிய கனகரத்தினம், இசை ஞானமுடையவர். முனிவருக்குரிய தோற்றப் பொலிவும், மேடை அனுபவமுள்ளவர். இவருடைய நடிப்பும் நன்றாக அமைந்தமை நாடகத்தின் சிறப்புக்கு ஒரு காரணமாகும்,

விருத்தனாக நடித்தவர் பழம்பெரும் ராஜபார்ட் நடிகர் சீ.ரீ. செல்வராசன். இவருடைய நடிப்பு நன்றாக இருந்தபோதும், வள்ளியுடன் அளவுக்கு மிஞ்சிய அங்க சேஷ்டை செய்து நடித்தமை 'முருகன்' பாத்திரத்தின் பண்பைச் சிறிது குறைத்து விட்டதென்றே கூறவேண்டும். எனினும் சீ. ரீ. செல்வராசனின் பாடல்கள் அருமையாக அமைந்தன.

குட்டியண்ணாவாக நடித்த இராசையாவும் அவருடன் துணையாக நடித்த நகைச் சுவை நடிகரும் சுவையாக நடித்தனர். ஆர்மோனியம் வாசித்த திரு.திருவுக்கரசுவும் மிருதங்கம் டோலக் வாசித்த கிருஷ்ணபிள்ளையும் நடிகர்களுக்கு அனுசரணையாக விளங்கினர். ஒலி, ஒளி

**காரை**
**செ. சுந்தரம்பிள்ளை**

அமைப்பு நன்றாக இருந்தன 'றோஸ் ஆர்ட்ஸ்' நிறுவனத்தினர் இப்பணியைச் செய்தனர்.

நாடகம் முடிந்து வெளியே வரும் போது முருகன் பாடிய காயாத கானகத்தே என்ற பாடலும், வள்ளிபாடிய 'சோசோ' என்ற பாடலும் காதில் ஒலித்த வண்ணமிருந்தன.

# அவன் புகழடைவதா?

டாக்டர் ஜான்சன் ஒரு நூல் எழுதினார். அந்நூலைத் தாறுமாறாகக் குறைகூறி மதிப்புரை ஒன்று இதழ் ஒன்றில் வந்தது.

ஜான்சனின் சீடனான பாஸ்வெல் 'ஐயா! தங்கள் நூலை வேண்டுமென்றே திட்டி விமர்சனம் வந்துள்ளது. இதற்கு நீங்கள் மறுப்பு எழுத வேண்டும்' என்றார்.

அதற்கு ஜான்சன் 'அற்பன் ஒருவன்தான் இப்படி எழுதியிருப்பான் அவன் தொழிலே பெரிய மனிதர்களைத்தாக்கி எழுதுவதுதான் யாரேனும் திரும்பத் தாக்கி எழுதினலை் அதன் மூலமாக மக்கள் தன்னைக் கவனிக்கத் தொடங்குவார்கள் என்ற கேவலமான எண்ணத்தில் இப்படிச் செய்கிறான். நான் மறுப்பு எழுதி அவனுக்கு எளிதில் புகழ் கிடைக்க உதவி செய்யமாட்டேன்' என்றார்.

## விவாகரத்து....

11ம் பக்கத் தொடர்ச்சி

அளித்து விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தின் மூலம் மணவிலக்குப் பெறலாம்.

தம்பதிகளில் ஒருவர் ஏழு வருடகாலமாகத் தொடர்ந்து யாதொரு தவறுமின்றிக் காணாமற் போனால் அவர் இறந்ததாகக் கருதப்பட்டு அதனை மற்றைய தம்பதி நீதிமன்றத்திற்கு அறிவித்து மனுச்செய்யவேண்டும், நீதிமன்ற விசாரணைக்குப் பின் நிரூபிக்கப்பட்டதும் மணவிலக்கு அளிக்கப்படும் என்று சட்டத்தரணி குறிப்பிட்டதோடு ''ஒரு நெருக்கடி நிலையில் மனம் தளம்பாமற் கடமைகளைச் செய்பவரே உள்ளத்திற் பலமுடையவர். எமது தற்கால இளைஞர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல தாக்கங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, விவகாரத்து நடைபெறுவது அதிசயமல்ல என்ற கருத்தையும் வெளிப்படுத்தினர்.

அடுத்து தற்கால திருமணங்கள் விவாகரத்தின் விளிம்பில் ஊசலாடுவதைப் பற்றி டாக்டர் க. சிதம்பரநாதன் உளவியல் ரீதியாக எப்படி நோக்குகின்றார் என்பதைப் பார்ப்போம்.

நமது அன்றாட வாழ்கையிலும் பத்திரிகை வாயிலாகவும் அறியும் செய்திகளில் இருந்து விவாகரத்திற்குரிய பல காரணங்களை அறிய முடிகிறது. முக்கியமாகக் கொடுமைகள், சாதிப் பிரச்சனை, குடும்பத்தில் ஏற்படும் பொருளாதாரக் கஷ்டங்கள் கணவன் மனைவியினுடைய பண்பாடு இல்லாத தன்னிச்சையான நடைமுறைகள், மற்றவர்கள் அறியாதபடி வைத்திருக்கும் பாலியல் நோய் போன்ற பல காரணிகள் விவாகரத்திற்குரிய காரணங்களாக அமைவதைக் காண்கின்றோம்.

என்னைப் பொறுத்தவரை என் அனுபவத்தில் கண்ட அறிந்த உளவியல் சம்பந்தமான சில முக்கிய காரணங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆணோ பெண்ணோ பணம் பொருள், அறிவு, அந்தஸ்து போன்றவற்றை விட உடல் ரீதியாக நல்ல ஆரோக்கியமுடையவர்களாக இருத்தல் வேண்டும். இதன் பொருள் சட்ட ரீதியாகத் திருமணம் நிறைவேறும் வரை ஆணும் பெண்ணும் தங்கள் ஆண்மையையும் பெண்மையையும் தவறான வழிகளில் இழந்துவிடக் கூடாது என்பதேயாகும் சுருக்கமாகச் சொல்லப் போனால். திருப்தியற்ற உடல் உறவு முறையே அதிகமான விவாகரத்துகளுக்கு காரணமாகும்.

உரிய வயதில் பருவம் அடையாத ஒரு பெண்ணை ஒரு ஆணுககு திருமணம் செய்து கொடுப்பதாலும் பரிபூரண வளர்ச்சி அடையாத ஒரு ஆணை ஒரு பெண்ணுக்குத் திருமணம் செய்து வைப்பதாலும் அது ஆணுக்கும் பெண்ணுக்கும் அவர்களுடைய தாம்பத்திய வாழ்வில் வேதனையையும் வெறுப்பையும் உண்டாக்கி விவாகரத்துக் கோரி நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்கிறது.

ஒரு ஆண் அல்லது ஒரு பெண்ணினுடையே வெளித்தோற்றத்தையோ அழகையோ வைத்துக் கொண்டு அவர்கள் திருமணம் செய்யத் தகுதி உடையவர்கள் என்று தீர்மானிப்பது தவறு. அல்லது பஞ்சாங்கத்தையும் சாதகக் குறிப்புக்களையும் பார்த்து எல்லாம் பொருத்தம் என்று முடிவு செய்வதும் பெரும் பிழையாகும். எதிர்காலத்தில் திருமணம் செய்ய இருக்கும் ஆணையும் பெண்ணையும் கட்டாய வைத்திய பரீட்சைக்கு உட்படுத்த வேண்டும். இதைச் சட்ட ரீதியாக கட்டாய மாக்கினால் இப்படியான விவாகரத்துக்களைஇல்லாமற் செய்யலாம்.

அடுத்து திருமணம் செய்யும் வயது முக்கியம் கவனிக்கப்பட வேண்டிய காரியமாகும் இங்கே நான் சொல்ல விரும்புவது 20 வயது உடைய ஒரு பெண்ணிற்கு 40 வயதுடைய ஒரு வரைத் திருமணம் செய்து வைப்பதால் அந்தப் பெண்ணின் மனதில் அவரை அறியாமலே ஒருவித தாழ்வு மனப்பான்மை அல்லது விரக்தி தானாகவே உண்டாகிறது.

வயது வந்த கணவனுடன் தான் வீதியிலே செல்லும் போது, வயது வந்த கணவன் தனக்குப் பொருத்தமில்லாதவர் என்ற உணர்ச்சி அவரை வாட்டத் தொடங்குகிறது. இதுவும் நாளடைவில் விவாகரத்திற்கே வந்து நிற்கிறது.

திருமணத்தின் பின் பிள்ளைச் செல்வம் குடும்பத்தில் இருக்கவேண்டியதும் வாழ்வு மகிழ்ச்சியாக நீண்டு போவதற்குஅவசியமாகிறது. பிள்ளை இல்லாத குறைபாடு கூட விவாகரத்துவரை வர முனைகிறது.

இது தவிர தான் விரும்பிய காதலித்த ஒருவரைத் திருமணம் செய்ய முடியாத ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்பக் கௌரவத்தைப் பாதுகாக்க விரும்பும் பெற்றோரால் வேறு கட்டாயத் திருமணங்கள் செய்து வைப்பதனையும் நாம் காண்கிறோம். இங்கே தனது விருப்பத்திற்கு மாறாகச் செய்து வைத்த கல்யாணத்தால் மணமகனோ மணமகளோ உள ரீதியாக மனத்திருப்தி அடைவதில்லை. அவர்கள் தங்கள் கடந்தகால காதல் வாழ்க்கையையே சதா எண்ணி எண்ணி வேதனைப்பட்டு உளரீதியாகவும் உடல்ரீதியாகவும் பல பயங்கரத் தாக்கங்களுக்கு உட்பட்டு மனநோய் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் அளவிற்கு வாழ்வு அழிவதால் அங்கேயும் இறுதியில் கட்டாய விவாகரத்துக்கள் ஏற்படுகின்றன.

டாக்டர் என்ற முறையில் விவாகரத்துக்களைத் தடுக்க வேண்டுமானால் பாடசாலைப் பருவத்தில் ஆண் பெண் இருசாராரும் உடற்கூற்று பாலியல் நோய் சம்பந்தமான அறிவு போதிக்கப்பட வேண்டும். அப்போதுதான் மேற்குறிப்பிட்ட வகையான விவாகரத்துக்களைத் தடுத்து நிறுத்த முடியும் என்றார்.

டாக்டர் க.சிதம்பரநாதன் உளவியல் ரீதியாக விவாகரத்துக்கள் பற்றித் தமது கருத்துக்களை தெரிவித்தார்,

இம் மூவர் கருத்துக்களும் எதிர்காலத்தில் விவாகரத்துக்கள் இப்போதைய நிலையிலிருந்து குறைவடைவதற்குச் சமூகத்திற்குப் பயன்படுமென நம்பி முன்வைக்கின்றோம்.

---

## தமிழ் மரபில்....

8-ம் பக்கத் தொடர்ச்சி

ஒன்றாக அமைவது இங்கு நம் கவனத்துக்குரியது. அதில்,

'இது நனி பயக்கும் இதனாலென்னும்
தொகை நிலைக்கிளவி
பயன் எனப்படுமே

(நூற்பா: 195) என்று பயன் பற்றிய சிந்தனை முன் வைக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியத் திறனாய்விலே தொன்று தொட்டு வழங்கிவரும் கொள்கைகளுள் ஒன்றான பயன்வழிக் கொள்கைக்கான விதி நிலைப்பட்ட முதலாவது குறிப்பாக இதனைக் கருதலாம்.

(வளரும்)

## மாறும்....

7ம் பக்கத்தொடர்ச்சி

சில நிமிடநேரம் எதுவும் பேசாமல் மௌனமாயிருந்த ரமணனுக்கு என்ன தோன்றிற்றோ ராகினியையும் அழைத்து ,உங்கள் வீட்டுக்கு போய் வரலாம்.' என்று அவளையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டான். ஒழுங்கையில் இறங்கியதும் 'ராகினி' என்றான்.

'என்னங்க'

'என்னிடம் பொய் பேச மாட்டியே'

'உங்களிடம் நான் பொய் சொல்வேனா?'

'நான் ஓர் ஆசிரியன். எத்தனை பிள்ளைகளோடு பழகுபவன். உளவியல் கூட ஒரு பாடமாக நான் படித்திருக்கின்றேன். உன்னுடன் பழகிய நாள்குறைவாயினும்உன்மனப் பதட்டத்திற்கும் செயலுக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கு. நீ மறைக்க முயற்சிக்கின்றாய் சிறு விடயமானாலும் நீரே பின்பு துன்பப்பட நேரிடும். ஆகவே தான் கேட்கிறேன் தயவுசெய்து எதுவானாலும் என்னிடம் மறைக்க வேண்டாம்.

வந்ததும் வராததுமாய் நான் உங்களுக்கு தலையணை மந்திரம் ஓதுவதாக உங்கள் சகோதரிகள் நினைக்கக் கூடுமல்லவா. அதனால் தான் நான் ஒரு விடயத்தை உங்களிடம் மறைத்தேன். எதுவித காரணமுமின்றி......' என்று ஆரம்பித்து ரம்யா வந்து சமாளித்தவரையில் கூறி முடித்தாள்.

''இதற்காக நீ ஏன் கலங்கணும்? நான் அவ்வளவு முட்டாளில்லை. இதைக்கூடப் புரிந்து கொள்ளா விட்டால் உன்னைத் திருமணம் செய்ததில் அர்த்தமேயில்லாது போய் விடும். சுகன்யா கொஞ்சம் வாய்த்துடுக்கு, கண்டபடி கதைப்பாள். மற்றவர்களை மதிக்கிற குணமும் இல்லை. போகட்டும் இந்த விடயத்தை நீ மறைத்து வைப்பதால் இது உனக்குத் தான் தொல்லையாய் முடியும்'' என்று கூறிச் சமாதானம் செய்து வைத்தான்.

அவர்கள் வீட்டுக்குத் திரும்பியதும் ரம்யா சேலையைக் கொண்டுவந்து ராகினிக்குக் காட்டினாள். அவளும் எதுவித பேதமும் காட்டிக்கொள்ளவில்லை.

''அண்ணி''

''என்ன ரம்யா''

''அந்த விடயத்தை......''

''நான் கூறவில்லை. ஆனால் அண்ணா என்னைத் துருவி ஆராய்ந்து கேட்டுவிட்ட பின்பும் என்னால் கொல்லாமலிருக்க முடியலை. இதுபற்றி எதுவும் யாரோடும் கதைக்க வேண்டாம் என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டேன் ரம்யா' என்றாள்.

'அண்ணி உங்கள் நல்ல மனதைப் புரியும் நிலையில் அவள் இல்லை. அவளுடைய அவசர புத்தியால் சிலசமயம் இப்படி எல்லோரையும் கலங்க வைக்கிறாள். அவளுக்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்கிறேன்.

'ரம்யா என்ன இது? அவள் தான் சிறுபிள்ளைத் தனமாய் நடந்தாள் என்றால்............ நான் அதை அப்பவே மறந்திட்டேன். இதைப் பெரிது படுத்த வேண்டாம் என்று தானே உமக்குச் சொன்னேன்'

'அண்ணி, என்று அவள் கரங்களைப் பற்றிக் கண்ணில் ஒற்றிக் கொண்டு சென்றாள்.

அண்ணன் அண்ணன் என்று உயிரை விட்ட சகோதரிகள் அண்ணனுக்கு ஒருத்தி மனைவியானதும் அவளும் தங்களில் ஒருத்தி என்றோ' சொந்த பந்தம் என்றோ நினைக்காமல் அவளிடம் வேற்று மனப்பான்மையை உருவாக்க முயலும் பேதமையை எண்ணி மனம் நொந்த ரமணன் ராகினியை அழைத்து ஆறுதல் கூறினான். ஆனால் சுகன்யா?

சில பெண்கள் உருவத்தில் தான் பெண்களே தவிர அவர்களுடைய மனோபாவம் ஆண் தன்மை பெற்று விளங்குவதை காணலாம். சுகன்யாவின் போக்கும் இப்படித்தானிருந்தது. விஞ்ஞான ஆய்வில் உளவியல் ரீதியாக இதற்கு பல காரணங்கள் கூறப்படுகின்றன. இயற்கையின் பரிமாண வளர்ச்சியில் இப்படியான மாற்றங்களிருக்கின்ற போதும் சிறு வயது முதலே மனவளர்ச்சியில் தோன்றும் மாறுபாடுகளே இதனை ஊக்குவிக்கின்றன. இயல்பாகவே எல்லோரையும் விட சுகன்யா அழகானவள். அதுவே அவளை மற்றவர்களை விட தான் உயர்வு என்ற ஓர் அடிப்படைக்கருத்து அவளிடம் தோன்றியதும், அவள் கூறுவதை எல்லோரும் ரசித்து கேட்க ஆரம்பித்ததும் தன்னால் எல்லோரையும் திசை திருப்ப முடியும் என்ற பிடிவாத மனப்பான்மையும் சேர்ந்துஆளும் வளர, அறிவும் வளர அவள் தன்னை ஓர் உயர்ந்த நிலையில் எண்ணவும் ஆளுமை செலுத்தவும் பழகிக் கொண்டாள்.

அன்றுமதியபோசனம் முடிந்ததும் எல்லோரும் ஓய்வாகக் கதைத்துக் கொண்டிருந்த போது ராஜசேகர் அங்கே வந்தான். 'வாரும் வாரும்' என்று வயித்திலிங்கம் அவனை வரவேற்றதுடன் 'சுகன்யா அண்ணியிடம் சொல்லு அண்ணா வந்திருபதாய்' என்று அவர் கூறி முடிக்கு முன்பே ராகினி ரமணன் உட்பட மற்றவர்களும் வந்தனர். ரம்யாவும், சுகன்யாவும் எட்டத்திலேயே நின்று கொண்டனர்.

'நான் இன்று பின்னேரம் கொழும்புக்கு போகின்றேன். நீங்கள் இரண்டொரு நாளைக்கு அங்கே வந்து நிற்கணும்'

'என்னண்ணா திடீரெனக் கொழும்புக்கு' என்று ஆவலுடன் கேட்டாள் ராகினி.

'இன்டர்வியூ ஒன்று வந்திருக்கு'

'ஏன் தம்பி இருக்கிற தொழில் போதாதா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டார் வயித்திலிங்கம்.

'தொழிலுக்காக மட்டும் படித்திருந்தால் கிடைத்த தொழிலுடன். திருப்தியடையலாம். ஆசிரியத் தொழில் புனிதமானது தான். இந்தக் காலத்தில் இத் தொழிலை யாரும் மதிப்பதாய்தெரியலை முக்கியமாக படிக்கிற பிள்ளைகள்......' என்று அவன் சிரித்தான்.

'நல்லாச் சொன்னீங்க தம்பி இதுகளைப் படிப்பிக்கிறதை விட கழுதை மேய்க்கலாம்' என்று வயித்திலிங்கம் கூறி முடிக்கவும் சுகன்யா ஏதோ கூற முயற்சிக்க அவளுடைய வாயைப் பொத்தி இழுத்துக்கொண்டுசென்றாள் ரம்யா.

(வளரும்)

## காலம்....

6ம் பக்கத் தொடர்ச்சி

கள் ...... ஞாபகங்கள் ......

இதெல்லாம் ...... பவானி... உனக்குத் தெரியுமா? பவானியின் நினைவுகளில்இருந்து அவை தரும் வேதனையிலிருந்து தப்புவதற்காக அந்தப் பாதையில் போகாமல் விட்டதும், பிறகு அந்தப்பாதையை மறந்து போனதும், அவள் ஞாபகப் பிடியில் கிடந்து இனியும் நான் வேதனைப் படக்கூடாது என்று அவளின் இருப்பிடம் தேடி நான் வராமல் விட்டதும் .........

இதெல்லாம் ..... உனக்குப் புரியவேண்டுமே .....புரியுமா? அழுகின்றேன் ....... கடைசிக் கண்ணீர்த்துளியும் ...... வற்றி விடுகின்றது. அழுகையில் நெஞ்சின் பாரம் காணாமல் போய் விடுகின்றது. நேரம் ஆகிக் கொண்டிருக்கின்றது .

'பவானி வாயேன் ஒரு முறை .... வந்துவிடேன் ... .. இன்று தீபாவளி ப்ளீஸ் ஒரே முறை வாயேன் ......... வருவாயா ...... '?

நினைத்துக் கொண்டிருக்கும் போதே ......

குழைவாய் .... குரலாய். பனியின் சில்லிடலாய் ...... மெதுவாய் ...... மென்மையாய் ...... பவானி வந்தாள்.

'என்னக்கா ...... இன்னிக்குத் தீபாவளியாமே ... கொண்டாடுகின்றார்களே ... எல்லோரும் ......உண்மையா? இன்னிக்கா ....... தீபாவளி? கேட்டுவிட்டு காதிற்குள் சிரித்தாள் ...... பிறகு ......

'அக்கா எங்கட தீபாவளி இண்டைக்கு இல்ல ...... எங்கட ...... தீபாவளிக்கு ...... இன்னும் ...... காலமிருக்கு ... இன்னும் காலமிருக்கு ...' அவள் அழுத்தமாகச் சொல்லிக் கொண்டு மெதுவாய் கரைந்து போனாள்.

அவளின் அந்த வார்த்தைகளில் தெரிந்த தாபமும், சோகமும் ... .. ஏக்கமும் ...... என்னவாக இருக்கும்?

ஒரு ஐந்து வயதுக் குழந்தையின் வாயிலிருந்து இவ்வளவு பெரிய வார்த்தைகளா?

இப்படியெல்லாம் ஒரு குழந்தையால் சொல்ல வருமா?

தீபாவளிக்கு இன்னும் காலமிருக்கு ......

இதன் அர்த்தம் என்ன? ... இப்படி அவள் சொல்லிச் சென்ற காரணம் என்னவாக இருக்கும்?

தற்போதைய நிலையில் இந்தக் கொண்டாட்டங்கள் பொருத்தமில்லை என்றா? இந்தக் கொண்டாட்டங்களை முழுதாக நிம்மதியாகக் கொண்டாடி அனுபவிக்கும் நிலையில் இன்று நாங்கள் இல்லை என்பதாலா? இல்லா விட்டால் ... ..

எமது சுதந்திர பூமியில் .. சுதந்திரக் காற்றை சுவாசித்தபடி எங்கள் கனவுகள் யாவும் நனவானதைப் பார்த்தபடி .....அந்த பவானி போன்ற ஆயிரம் ஆயிரம் இழப்புகளின் பின் கிடைத்த ஒரு சுதந்திர நாளில் தீபாவளியைக் கொண்டாடாமல் ...ஏன் இந்த இடை நிலையில் என நினைத்தாளா?

ஆனால் ... அது எப்படி ...?

அந்தப் பூப்போன்ற மனதுக்குள் ... இப்படிப் பாரங்கள் கிடந்து அழுந்துமா? அழுந்தும்!

தீபாவளிக்கு ...... எங்கள் ஈழத்தின் தீபாவளிக்கு இன்னும் காலமிருக்கு நெஞ்சார சொல்லிக் கொண்டு பவானியின் புதைகுழியிலிருந்து என்னை விட்டுப் பிரிகின்றேன் ......

## சுருக்கெழுத்து ....

9ம் பக்கத் தொடர்ச்சி

முன்னைநாள் அதிபர்) தம்பதிகள் தலைமையில் வெள்ளிவிழா பூரண பொலிவு பெற்று இருந்தது, வீரசிங்கம் மண்டபம் கலைஞர்களின் இன்னிசைச் சூழலாலும் இவரது மாணவச் செல்வங்களின் பூரிப்பாலும். கலை இலக்கிய நண்பர்களாலும் நிரம்பி வழிந்தது, அன்று சிறப்பான வெள்ளிவிழா மலர் ஒன்றும் வெளியீடு செய்யப்பட்டது.

'ஈழத்து இராமன்வழிச் சுருக்கெழுத்து' 'முறையைத் தோற்றுவித்து தமிழ்ச்சுருக்கெழுத்துத் தந்தை எனப் போற்றப்படும் '' திரு. சி. இராமலிங்கத்தை''க் கற்றோரும், மற்றோரும் முழுமனதுடன் போற்றுகின்றார்கள்.

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

## மேடம்:

உயர்பதவி, வாகன சுகம், திடீர் பிரயாணம், தேடியவர் வருகை, புதுத்தொழில், மனையில், சுபகாரியம், சகோதர வழி கவலை, பெரியோர்ருதவி, தூரதேசம் போனவர் வருகை, உத்தியோகஉயர்வு, கலைஞர்கள் கல்வி மான்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தவர்கள் ஒன்று சேருவர்.

## இடபம்:

திடீர் பிரயாணம், பணவிரையம், விவாகநிச்சயம், புத்திரரால் மகிழ்ச்சி, புண்ணியவழிபாடு, தடைப்பட்ட பணவரவு, இராஜமரியாதை, சகோதரவழிநன்மை, வணிகர்கள் கடற் தொழில் இயந்திரத் தொழில் மூலம் இலாபம்.

## மிதுனம்:

விவாக நிச்சயம், வாக்கு சாதுரியம், பணவரவு, இளையசகோதருதவி, தூரதேச பிரயாண நிறைவு, கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்தவர்கள் ஒன்று சேருதல், மனை பூமியால் நன்மை, புதுத் தொழில், புகழ் தேடிவரும், காதலர் ஒன்று சேருவர்.

## கடகம்:

உடல் நலக்குறைவு, இனசன உதவி, வாக்குப்பலிதம், கைப்பொருள் நஷ்டம், குடும்பப்பிணக்கு, கொடுக்கல் வாங்கல் தடை, தேடியவர் வருகை, விவாக நிச்சயம், பிதாவழியுதவி, வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் இலாபம்.

## சிங்கம்:

சத்துருபயம், பெரியோருதவி, வாகன மாற்றம், உயர் பதவி, உத்த மருறவு, ஆடையாபரண நஷ்டம், தேடியவர் வருகை, மாமன் வழியுதவி, கல்வியால் தொழில், பிரிந்த காதலர் ஒன்று சேருவர், கலைஞர்கர் கௌரவிக்கப்படல், வணிகர்கள் இலாபம்.

## கன்னி:

வாகனசுகம், உயர் பதவி, கல்வியால் புகழ், காதலர் மகிழ்ச்சி, மனையில் சுபகாரியம், தூரதேசம் போனவர்கள் வருகை, இயந்திரத் தொழில், கடற் தொழில் செய்வோர் அகமகிழ்ச்சி, தடைப்பட்ட தொழில் கிடைக்கும், உடல் ரோக நிவர்த்தி.

## துலாம்:

மனக்கிலேசம், வாகன மாற்றம், வணிகர்கள் கடற் தொழில் செய்வோர் இலாபம், தூரத்து பிரயாண நிவர்த்தி, சிநேகிதர் மூலம் நன்மை, நீண்ட நாள் தடை நீங்கும், மாமன் வழி கவலை, புகழ் தேடி வரும், கலைஞர்கள் கௌரவிக்கப்படல், பிரிந்த காதலர்கள் ஒன்று சேருவர்.

## விருட்சிகம்:

புதுத் தொழில், மனநின்மதி, சகோதரவழி சுகம், தேடியவர் வருகை, வாகனசுகம், வணிகர்கள் கடற் தொழில்மூலம்இலாபம், கல்வியால் உத்தியோகம், காதலர் மகிழ்ச்சி, தேடியவர் வருகை, வாக்குபலிதம்.

## தனுசு:

தொழில் தடை, ராஜபயம், அன்னியருதவி, சகோதரவழி யுதவி, புண்ணிய வழிபாடு, உத்தியோக இடமாற்றம், தூரத்து பிரயாண நிறைவு, வாகன சுகம், கடற்தொழில், வணிகத் தொழில் மூலம் இலாபம்.

## மகரம்:

உத்யோகஉயர்வு, வாக்குபலிதம், பணவரவு, புதுமனைச் சேர்க்கை, ஆடையாபரணச் சேர்க்கை, அன்னியருதவி, இலட்சுமி கடாச்சம், புத்திரமகிழ்ச்சி, புகழ் தேடிவரும், உயர் பதவிமூலம் இடமாற்றம், தூரத்துச் சொய்தியால் நன்மை, தேடியவர் வருகை.

## கும்பம்:

இலட்சுமி கடாச்சம், விவாக நிச்சயம், கல்வியால் தொழில், பிரிந்தவர்கள்ஒன்று சேருதல், இளைய சகோதர வழி நன்மை, வணிகர்கள் கடற்தொழில், இயந்திர தொழில் செய்வோர் அதிக இலாபமடைவர், பிரிந்தகாதலர் ஒன்று சேருவர், வாகனத் தொழில் மூலம் நஷ்டம், தூரதேசம் போனவர்களால் நன்மை.

## மீனம்:

திருடர்பயம், பொருளநஷ்டம் தொழில் தடை, தேடியவர் வருகை, பெரியோராசி, மாமன்வழியுதவி, தெய்வபலம், விவாகநிச்சயம், களஸ்திர வழிசுகம், பிரிந்தவர்கள் வருகை, நீண்ட நாள் தடை நீங்கும், கல்விகற்போருக்கு தொழில் கிடைக்கும்.

## கைப்பணிப் பயிற்சி

மண்டைதீவில் பனம் பொருள் அபிவிருத்திச் சபையின் ஆதரவுடன் செஞ்சிலுவைச் சங்கம் பனம் பொருள் உற்பத்திக் கைப்பணிப் பயிற்சி வகுப்பொன்றை அண்மையில் ஆரம்பித்தது.

இதில் சுமார் நாற்பதுக்கும் மேற்பட்ட யுவதிகள் பயிற்சி பெறுகின்றனர்.

பயிற்சிப் பணமாக நாளொன்றுக்கு இருபது ரூபா வழங்கப்படுவதோடு பனம் பொருள் உற்பத்திக்குத் தேவையான பொருட்களையும் இலவசமாக வழங்கி வருகின்றது. (ப.12)

## புத்தளம் இந்துவுக்கு புதிய கட்டடம்

புத்தளம் நகரில் அமைந்திருக்கும் ஒரேயொரு இந்துப் பாடசாலையான புத்தளம் இந்து தமிழ் மகாவித்தியாலயத்திற்கு புதியதொரு கட்டிடத் தொகுதி அமைப்பதற்கான அத்திவாரக் கல் நாட்டும் வைபவம் அண்மையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பெற்றோர்களினதும், பொது மக்களினதும் உதவியுடனேயே இக்கட்டிடம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. (ப.1)

### கிளிநொச்சி அரச அதிபர் பேச்சு:

# அபிவிருத்தி துரிதமாவதற்கு அரசின் நிதி போதாதுள்ளது

'மின்சாரம் ஒரு கிராமத்திற்கு கிடைத்ததும் அக்கிராமம் அபிவிருத்தியடைந்து விட்டதாக கருதக்கூடாது. இந்த மின்சாரத்தை குடிசைக் கைத்தொழில், விவசாயம் போன்றவற்றுக்கு பயன்படுத்தி கிராமத்தை முன்னேற்ற முயல வேண்டும்.''

இவ்வாறு பளை இத்தாவில் கிராமத்திற்கு ரூபா ஆறரை இலட்சம் ரூபா செலவில் உருவாக்கப்பட்ட கிராமிய மின்திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்த கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கூறினார்.

இத்தாவில் சரஸ்வதி சனசமூக நிலையத்தலைவர் க. சுந்தரலிங்கம் தலைமையில் இத்தாவில் முருகன் ஆலய முன்றலில் நடைபெற்ற இவ்விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு அரச அதிபர் மேலும் உரையாற்றுகையில்,

'மாவட்டத்திற்கு அரசாங்கத்தினால் குறிப்பிட்ட அளவு நிதியே ஒதுக்கீடு செய்யப்படுவதனால் மாவட்டத்தின் வளர்ச்சியை கிறிது சிறிதாகவே விருத்தி செய்ய முடியும்'' என்றார்.

வடபிராந்திய மின்சாரசபை பிரதிப் பொது முகாமையாளர் வீ. கந்தசாமி உரையாற்றுகையில், 'சட்டவிரோத மின்பாவனை கடந்த காலங்களில் அதிகரித்ததனால் கோடிக்கணக்கான ரூபா மின்சாரசபைக்கு நட்டமேற்பட்டது. அத்துடன் இப்பாவனையால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பலியாகியதை அறிவீர்கள்.

சட்டவிரோத மின்பாவனையை அவ்வூர் மக்கள் தடுத்தாலொழிய அதிகாரிகளால் தடுப்பது கஷ்ட்ம் என்று கூறினார்.

இவ்விழாவில் பளை கொத்தணி அதிபர் திரு. அ. பொ. செல்லையா, கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். எஸ், அமிர்தலிங்கம், பளை உதவி அரசாங்க அதிபர் சு. கந்தசாமி, விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் கி. பாப்பா, பச்சிலைப்பள்ளி அரசியல் பொறுப்பாளர் வ. செல்வராசா, பளை ப, நோ. கூ. சங்கத் தலைவர் ஏ. பீ. ஜோர்ஸ் உட்பட பலர் உரையாற்றினர்.

விழா முடிவில் கலைநிகழ்ச்சிகளும் விவாத அரங்குகளும் இடம் பெற்றன. (ப. 3

## சம்மேளனக் கூட்டம்

யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சம்மேளனத் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் யாழ். கொட்டடியில் உள்ள சம்மேளனத்தின் காரியாலயத்தில் நடைபெறும். (19)

## 'எளிய நடை பாராட்டுக்குரியது?

சீரணி அந்தாதி எவருக்கும் விளங்கக் கூடிய வகையில் 'இனிமை கலந்த எளிய நடையில் அமைந்துள்ளமை மிகவும் பாராட்டத்தக்க சிறப்பம்சமாகும்.

இவ்வாறு சீரணி அந்தாதி நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டுரையாற்றிய பண்டிதர் திரு. நா. கணபதிப்பிள்ளை கூறினார்.

இருபாலைக் கவிஞர் அம்பிகைதாசன் எழுதிய இந்நூலை பண்டிதை பொன். பாக்கியம் ஆய்வு செய்தார்.

திருமதி சிவகுருநாதன் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. நூற்றியொரு பாடல்களைக் கொண்ட இந்நூல் ஆசிரிய விருத்தம் என்ற பாவகையில் பாடப்பட்டுள்ளது. (ப.5)

## காலன் கொழும்பில் காத்திருந்தான்

வெளிநாடு செல்வதற்காக கொழும்புக்குச் சென்றவர் ரயில் மோதிப் பலியானார்.

பெரியவிளானை சேர்ந்த சங்கரி இராசதுரை (வயது 38) என்னும் மேற்படி நபர் மேற்கு ஜேர்மனி செல்வதற்காக கடந்த வாரம் கொழும்புக்கு சென்று வெள்ளவத்தையிலுள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்தார்.

ஒருநாள் காலிமுகத்திடலுக்கு செல்வதற்காக வெள்ளவத்தை ரயில் பாதை வழியாக நடந்து சென்றபோது வேகமாக வந்த ரயில் இவரை மோதியதாகவும், ஸ்தலத்தில் இவர் உயிர் பிரிந்து விட்டதாகவும் இதுபற்றி அறியப்படுகின்றது. (13)

## கடமை மறக்கும் ஆசிரியர் மாணவர் மதிப்பை இழப்பர்

### சாடுகிறார் அதிபர்

''இவ்வாசிரியர் தனது தொழிலை விசுவாசமாகவும் பற்றுவைத்தும் முழுமனதுடன் செய்தார். கடவுள் மீது பக்தி வைப்பது போல் இவர் ஆசிரியத் தொழில் மீது பக்தி வைத்தார். செய்யும் தொழிலே தெய்வம் என சேவை செய்து ஆசிரிய குலத்திற்கே மதிப்பைத் தேடித்தந்துள்ளார் வருமானத்தைக் கருதாது ஆசிரியப்பணியை தெய்வீகத் தொண்டாகவும் அறப்பணியாகவும் கருதிக் கடமை புரிந்தார் பணத்திற்காக கூலிக்கு மாரடிக்கும் ஆசிரியர்களை மாணவர்கள் மதிக்கமாட்டார்கள் இவர் ஆசிரியச் சேவையின் மகத்துவத்தை உணர்ந்து கடமை புரிந்தபடியால் இன்று அதிபராகப் பதவி உயர்வுபெற்றுள்ளார்.''

கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் உப அதிபராகக் கடமையாற்றி கொக்குவில் நாமகள் வித்தியாலய அதிபராக மாறிச் சென்றுள்ள திரு. க. திருநாவுக்கரசுவுக்கு மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் நாடத்தப்பட்ட சேவை நலம் பாராட்டுவைபவத்தில் பேசிய அதிபர் கா. கணேசதாசன் இவ்வாறு கூறினார்.

பல மாணவர்களும் ஆசிரியர்களும் இவரது சேவையைப் பாராட்டிப் பேசினார்க மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் அன்பளிப்புக்கள் வழங்கப்பட்டன. இறுதியில் தேநீர் விருந்துபசாரவைபவம் இடம் பெற்றது.

## மகாவலி அபிவிருத்தியில் தனியார்துறை இணைவு

### அமைச்சர் வற்புறுத்து

துரித மகாவலி அபிவிருத்தியில் தனியார் துறையினரும் விவசாய அபிருத்தித் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும்.

மகாவலிஅபிவிருத்திஅமைச்சர் காமினி அத்துக்கோரல்ல மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் 120 அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இத் திட்டங்களுக்காக 9. 80 மில்லியன் ரூபா முடக்கப்பட்டுள்ளதால் 350 நபர்களுக்கு மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இலாபகரமான தொழில் வாய்ப்புக்கள் கிடைத்துள்ளன.

273 ற்கு மேலான நபர்கள் இத் தொழிற் திட்டங்களினால் தொழில் நுட்பத் துறைல் பயிற்சி பெற்றுள்ளார்கள்.

மகாவலி பொருளாதார திட்டத்தினால் வர்த்தகம், கடை அணிகள் தயாரித்தல், கோழி வளர்ப்பு போன்ற துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

## கடமை நேரத்தில் இந்த ஊழியர்கள் 'கிக்' கில்?

நெடுந்தீவு வைத்தியசாலையில் கடமையாற்றி வரும் ஒரு சில ஊழியர்கள் கடமை நேரங்களில் மது போதையில் நிற்பதாக புகார் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையால் நோயாளர்களுக்கு பெரும் தொல்லையாக இருப்பதாக தெரிகிறது.

இதுபற்றி டாக்டர் பல தடவைகளாக எக்சரிக்கை விடுத்துள்ள போதிலும் அவ்வூழியர்கள் திருந்துவதாக இல்லையெனக் கூறப்படுகின்றது.

அங்கு கடமையாற்றுகின்ற ஊழியர்களிடம் முன்கூட்டியே மது அருந்திவிட்டு கடமைக்கு வரக் கூடாதென எச்சரிக்கை கடிதங்கள் பெறப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## உங்களுடையதா?

மல்லாகம்- குளமங்காலைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை வில்பேட் விஜயகுமார் என்பவருடைய தேசிய ஆளடையாள அட்டை வடமராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்க பொற்பதி கிளை முகாமையாளரினால் வல்வெட்டித் துறையில் கண்டெடுக்கப்பட்டு முரசொலி ஆசிரிய பீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆசிரிய பீடத்தில், அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## கட்டிட வேலை ஆரம்பம்

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கான புதிய கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சுழிபுரம் பிரதேசசபைக் காரியாலயத்துக்குச் சமீபமாக இக்கட்டிடம் அமைக்கப்படுகிறது. (30)

VARAMURASOLI REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA 13-05-1990 ஞாயிற்றுக்கிழமை

### எழுபது பாரிய கொள்கலன்களில் கப்பல் மூலம்


# வடக்கு கிழக்கு வைத்தியசாலைகளுக்கு பிரிட்டிஷ் உபகரணங்கள் வந்துசேரும்

வடக்கு கிழக்கு வைத்திய சாலைகளுக்கு பிரிட்டன் நாட்டில் இருந்து 70 பாரிய கொள்கலன்(கொன்டெயினர்) அடங்கிய உபகரணங்கள் எதிர் வரும் ஒகஸ்ட் மாதத்தில் கப்பலில் வந்து சேரவுள்ளது.

இந்த 70 கொள்கலன்களில் 50 கொள்கலன் உபகரணங்கள் யாழ் போதனா வைத்திய சாலைக்கு வழங்கப் படவுள்ளது. இதில் நவீன குளிரூட்டி இயந்திரங்களும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் போதனா வைத்திய சாலையின் குளிரூட்டி இயந்திர பற்றாக்குறை தீர்க்கப்படவுள்ளது.

மிகுதி 20 கொள்கலன்களும் வடக்கு, கிழக்கில் உள்ள மற்றைய வைத்தியசாலைகளுக்கு பிரித்துக் கொடுக்கப்படவுள்ளன. இந்த கொள்கலன்களுக்கான போக்குவரத்து நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (03)



முரசொலி ஆதரவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இடம்பெற்ற பாடசாலைகளுக்கிடையேயான இயல்,இசை,நாடகப்போட்டியில் வெற்றி பெற்றோருக்கு பண்டிதர் சரவணனார் பரிசு வழங்கிய போது எடுக்கப்பட்ட படங்களை இங்கு காண்கிறீர்கள்.
இப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, இளவாலை மெய்கண்டான் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் முறையே முதல் மூன்று இடங்களையும் பெற்று பரிசுகளைப் பெற்றுக் கொண்டன.

## ஆந்திரப் புயல் அனர்த்தம் 220 பேர் இறந்தனர்

ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்ட புயலால் இது வரை 220 பேர் மரணமாகியுள்ளனர்.

18 இலட்சம் பேர் வீடிழந்துள்ளனர், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பயிர்ச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பிரதமர் திரு.வி.பி சிங் நேற்று விமானம் மூலம் சென்று பார்வையிட்டார்.

நிவாரணப்பணிகள் துரித கதியில் நடைபெறுகின்றன.

### வன்செயல் பிரதேச

## அலவன்ஸ் வழங்குவதில் பாகுபாடு என்று புகார்

அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஐம்பது வீத ஊக்குவிப்புப் பணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக முறைப்பாடு செய்யப்படுகிறது.

வன்செயலால் பாதிக்கப்பட்ட பிரதேசமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் பணிபுரியும் அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பாக அவரவர் சம்பளத்தில் ஐம்பது வீதம் அலவன்சாக வழங்குமாறு 40/89 இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### 498 குடும்பங்கள் ..

யான் தெரிவித்தார்.

700 முதல் 1500 ரூபா வரை வருமான முடையவர்களுக்கு தே.வீ.அ.அ.சபைக் கூடாகவும் 700 ரூபா விற்கு குறைந்த வருமான முடையவர்களுக்கு அந்தந்த உதவி அரசாங்க அதிபருக்கூடாகவும் வழங்கப்பட்டுள்ளது.

இந் நிவாரணம் பெறத் தகுதியிருந்தும் இதுவரை பெறாதவர்களுக்கு வெகு விரைவில் அவை வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்தார்.

இது வரையில் நிவாரணம் பெற்ற குடும்பங்கள் பற்றிய உ.அ.அ.பிரிவு நிவாரண விபரங்கள்.

யாழ்ப்பாணம் 30 ஊர்காவற்துறை 56,நல்லூர் 27 தெல்லிப்பழை 66 சங்கானை 1,பருத்தித்துறை 89, கரவெட்டி 79, மருதங்கேணி 1, சாவகச்சேரி 38, கோப்பாய் 109, இவ்வளவு குடும்பங்களே நிவாரணம் பெற்றவர்களாவர். (4)

## யாழ்தொலைபேசி திருத்தவேலை

யாழ்தொலைத்தொடர்புத் திணைக்களத்தினர் பலத்த சிரமத்தின் மத்தியில் களவாடப்பட்ட தொலைபேசிவயர்களை இணைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளனர் இன்றைய தினம் இவ்வேலைகள் நிறைவடையுமென தெரிவிக்கப்பட்டது,

### விடுதலைப் ..

இந்நிலையில் தமிழ் நாட்டில் பிரிவினைவாதம் வளர்க்கப்படுவதாக டில்லியில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டது தவறான செயலாகும் என முதலமைச்சர் குறிப்பிட்டார்.

இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ் காந்தி விடுதலைப் புலிகளையும் தம் அரசையும் இணைத்துப் பேசியுள்ளதையும் முதல்வர் கருணாநிதி நேற்று சட்டசபையில் கண்டித்துப் பேசினார்.

## மலையக மக்கள் பிரச்சனை இடதுகம்யூனிஸ்ட்கட்சி கண்டனம்

பல வருடங்களுக்கு முன்பு இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து கடவுச்சீட்டுப் பெற்றுக் கொண்ட ஒரு லட்சத்திற்கு அதிகமான தோட்டத் தொழிலாளர்களை உடனடியாக இந்தியாவிற்கு அனுப்பிவைக்கவேண்டும் என பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் வெளிப்படுத்தியுள்ள கூற்று மிக விசனத்திற்குரியதாகும். அரசின் மனிதாபிமானமற்ற இம்முடிவை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வன்மையாகக் கண்டிக்கின்றது. அத்துடன் சுயவிருப்பின்றி எந்த ஒரு தோட்டத் தொழிலாளியும் கட்டாயத்தின் பேரில் இந்தியாவிற்கு அனுப்பப்படுவதை எமதுகட்சி எதிர்க்கின்றது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேற்படி அறிக்கையை கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்திவேல் கையெழுத்திட்டுவெளியிட்டுள்ளார்.

தனக்கு தேவைப்படும் போது தோட்டத் தொழிலாளர்களை அணைப்பதும் தேவைமுடிந்ததும் அதட்டி அடிக்க முனைவதுமானபோக்கையே இந்த அரசு பின்பற்றி வந்துள்ளதை அமைச்சரின் நாடுகடத்தும் கூற்று வெளிப்படுத்தியுள்ளது.

மறைமுகமான அல்லது நேரடியான கட்டாயத்தின் பேரில் சுயவிருப்பமின்றி தனி ஒரு தோட்டத் தொழிலாளி தானும் விமானமூலமோ அன்றி கப்பல்மூலமோ இந்தியாவிற்கு அனுப்பபடுவது மனித தர்மத்தை நேசிக்கும் சகலராலும் எதிர்க்கப்பட வேண்டிய தொன்றாகும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மொறிசியஸ்...

காட்சி இடம் பெறும். இதில் பேராசிரியர் ஆஷர், டாக்டர் ஒளவை நடராஜன், மலேசிய அமைச்சர் டத்தோ சாமிவேலு, சினிமாநட்சத்திரம் திரு. கமல்ஹாசன், திருமதி சாரிக்காகமல்ஹாசன்,வீணை மேதை பாலச்சந்தர், நாவலர் நவசோதி மற்றும் தமிழக அரசு அனுப்பி வைத்த கலைநிகழ்ச்சிகள் போன்ற காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இதன் பின்னர் கண்காட்சியும் இடம்பெறும். மொரிசியஸ் தமிழர் பண்பாட்டு வாழ்வை பிரதிபலிக்கும் புகைப்படங்கள் ஆவணங்கள் போன்றவை கண்காட்சியில் இடம்பெறும்.

மாதம் ஒரு நிகழ்வாக நடைபெறும் இந்த விழாத் தொடரில் அடுத்தமாதம் இடம்பெறுவதுமலேசியாவில்நடந்த 6 வது உலகத்தமிழாராய்ச்சி மாநாடும் அந்நாடு பற்றிய கண்காட்சியுஇடம்பெறுமென இவ்விழாவிற்கு பொறுப்பாகவுள்ள குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

### 55 வயதில் ..

இலங்கையில் கல்வி,அதிகாரப் பரவலாக்கல் தொடர்பான கருத்தரங்கில் தெரிவித்தார்.

மேலும்இது விடயமாகஅவர் கருத்துவெளியிடுகையில் கல்வி அமைச்சின் அதிகாரிகளும் ஆசிரியர்கள் 60 வயதுவரை சேவையாற்றுவது கல்விமேம்பாட்டிற்கு இன்றியமையாதது என தனக்குத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

மற்ற சேவையிலுள்ளவர்கள் போல ஆசிரிய சேவையினரை கணிக்கக் கூடாது என்றும் தெரிவித்தார். (12)

### இருபத்திமூன்றரைக் கோடி ரூபா

## யாழ் மாவட்டத்திற்கென கனேடிய அரசு நிதி உதவி

யாழ். மாவட்டத்தின் புனரமைப்புப் பணிகளுக்காக இருபத்தி மூன்டரைக்கோடி ரூபாநிதி கனேடிய அரசினால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ் குடாநாட்டில் சேதமுற்றவையும் நீண்டகாலம் பராமரிக்க முடியாதவையுமான சந்தைகள், நூல் நிலையங்கள், வைத்திய சாலைகள் ஆகியனவற்றையும் புனரமைக்கவும், மின்சார, விநியோகத்தைச் சீரமைக்கவும் இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

மாகாண புனர் வாழ்வு அமைச்சின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

## திருமலை துறைமுகத்திற்கும் நவீன தொலைத்தொடர்பு வசதி

கப்பலில் இருந்து துறைமுகத்தோடு தொடர்பு கொள்ளும் வகையிலான நவீனத் தொலைத் தொடர்பு அமைப்பு ஒன்றை ஏற்படுத்த அவுஸ்ரேலியா உதவியுடன் தொலைதொடர்பு அமைச்சு செயற்பட்டு வருகின்றது.

திருகோணமலை, காலி கொழும்பு துறைமுகங்களில் வேலைகளைச் சிரமமின்றியும் துரிதமாகவும் செயற்படுத்த இத்திட்டம் பெரிதும் உதவுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

இத் தொலைதொடர்பு வேலைகள் இவ்வருட இறுதிக்குள் முடிவடைந்து விடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## மந்திகையில் கண்கலங்க பிரியாவிடை

மந்திகை வைத்தியசாலை டாக்டர் ஜாக்குலின் தமது தாய்நாடான பிரான்ஸிற்கு மாற்றம் பெற்றதை யடுத்து அவருக்கு பிரியாவிடைவைபவம் நேற்றுநடைபெற்றது,

பொதுமக்கள் நோயாளர் ஊழியர்கள் யாவரும் கண் கலங்கிய நிலையில் அவருக்கு பிரியாவிடைவழங்கினர். (39)

## தவறவிட்ட கைக்கடிகாரம்

சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் ஆண்டு 9மாணவியான நிரஞ்சனா புவனரட்ணத்தினால் கண்டெடுக்கப்பட்ட மகளிர்கைக் கடிகாரம் ஒன்று முரசொலி ஆசிரியபீடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இம் மணிக்கூடு கடந்த வியாழக்கிழமை சுண்டிக்குளிசோமசுந்தரம் லேனில் கண்டெடுக்கப்பட்டது உரிமையாளர் அடையாளம் காட்டி அலுவலகநேரத்தில் பெற்றுக்கொள்ளவும்,

## முரசுமோட்டையில் இன்று

முரசுமோட்டை மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் நடாத்தும் பரிசளிப்பு விழா. முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலய மண்டபத்தில் மாதர் சங்க தலைவி திருமதி.ந. சதாலட்சுமி தலைமையில் இன்று நடைபெறும் இவ் வைபத்தில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி அரசாங்க அதிபர் உயர் திரு.க. மாணிக்கவாசகர் கலந்து கொள்கின்றார்.

## சைக்கிள் விபத்து

சைக்கிள் விபத்தில் சுன்னாகத்தை சேர்ந்த செல்லத்துரை ஞானேந்திரம் (35) என்பவர் நேற்றைய தினம் பலத்த காயத்திற்கு உள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி [illegible] இலக்கத்திலுள்ள அச்சகப்பிரிவில் 13-05-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது